பேராசிரியர்

எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை

பதிப்பாசிரியர்

முனைவர் ம. இராசேந்திரன்

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பேராசிரியர்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ம. இராசேந்திரன்

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 13
பேராசிரியர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை (30-04-2004)

Title	:	**Pēraciriyar M.S. Puraṇalinkam Piḷḷai**
Editors	:	Dr. M. Rajendran Director (Additional Charge) IITS, Taramani, Chennai - 600 113. Dr. S. Sivakami Associate Professor IITS, Taramani, Chennai - 600 113.
Publisher	:	International Institute of Tamil Studies C.I.T. Campus, Taramani, Chennai - 600 113. Ph: 22542992
Publication No	:	559
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	2005
Paper Used	:	18.6 kg TNPL Map litho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii +104
No. of Copies	:	1200
Price	:	30/- (Rupees Thirty Only)
Printing	:	Pavai Printers (P) Ltd. 142, J.J.Khan Road, Royapettah. Chennai - 14. ☎: 28482441
Subject	:	Biographical & Critical Studies on M. S. Purnalingam Pillai

கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **ம. இராசேந்திரன்**
இயக்குநர் (கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

பதிப்புரை

மொழி, சமுதாயத்தின் உருவாக்கமாக இருந்தாலும் தனிமனிதர்களின் படைப்புகளாலும் பங்களிப்பாலும் தான் வளர்ச்சியும் வாழ்வும் பெறுகிறது.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அறிஞர்களை வரும் தலைமுறையும் வளரும் தலைமுறையும் நினைத்துப் பார்க்கும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'தமிழறிஞர் வரிசை' எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தி, கட்டுரைகளைப் பெற்று நூலாக வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் இந்த நூல் இப்போது வெளிவருகிறது.

முந்நீர்ப்பள்ளம் சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்களின் மகன் மு.சி. பூரணலிங்கம் பிள்ளை ஆவார். இவர் ஆங்கிலத்தில் நூல் எழுதியதாலும் ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரிந்ததாலும் சுருக்கமாக எம்.எஸ்.பி. என்றழைக்கப்பட்டார்.

தமிழ் மொழி, இலக்கிய ஆய்வுக்களனில் திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்களின் பணி இரண்டு வகையில் நினைக்கத்தக்கது.

ஒன்று, காலத் தேவையைக் கருத்திற்கொண்டு தமிழ்மொழி, இலக்கியம், இனம், பண்பாடு குறித்த ஆய்வுகளை முன்னிலைப்படுத்தியது. மற்றொன்று அத்தகைய ஆய்வுகளை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தித் தமிழ் ஆய்வினை முன்னெடுத்துச் சென்றது.

திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் Justice இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இந்தப் பின்னணி அவரது ஆய்வுப் போக்குகளின் திசைகளை அறிய உதவுகிறது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் ஆங்கிலப் பேராசிரியராக வாழ்ந்தும் ஆங்கிலேயர் அறியும் வண்ணம் தமிழ் மொழி, இலக்கியத் தகுதிகள் வெளிப்பட சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.

சோர்வறியா உழைப்பாளி, கொள்கையில் உறுதியானவர். பாடநூல்கள் மட்டுமன்றி, இலக்கியம் புவியியல், தத்துவம் என்று பல்துறைப்

புலமையும் வெளிப்படும் வகையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களைத் தந்துள்ளார்.

பிறமொழியாளர் அறிய ஆங்கிலத்தில் நூல் எழுதியது போன்றே ஆங்கிலம் அறியாத தமிழர்கள் அறிய ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இந்தியாவின் தொன்மையும் மேன்மையும் முழுமையாக அறியப்பட தமிழ்மொழி, இலக்கியம் குறித்த ஆய்வும் அறிவும் இன்றியமையாதவை என்பதை உறுதிப்படுத்தியவர் திரு. பூரணலிங்கம் பிள்ளை ஆவார்.

தமிழ்ப்பற்றும் புலமையும் சைவசித்தாந்த ஈடுபாடும் அவருடைய படைப்புகளில் வெளிப்படுகின்றன. மாணிக்கவாசகர், அப்பர், நம்மாழ்வார் ஆகியோரின் வாழ்வையும் வாக்கையும் வரலாறாகத் தந்துள்ள திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும் குறித்து கருத்தரங்கு நடைபெற்றது. திருவாளர்கள் ம. இளங்கோவன், முகிலை இராசபாண்டியன், ந. வேலுசாமி, நா. ஜானகிராமன், க. ஜெயந்தி ஆகியோர் அதில் வழங்கிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இக்கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற **நிறுவனத் தலைவர் அவர்களும்** தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** மற்றும் **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** ஆகியோரும் நன்றிக்குரியவர்கள்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலா அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தார் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

நிறுவனப் பணிகள் செம்மையுற காலநேரம் கருதாமல் ஒத்துழைப்பு நல்கிவரும் கல்வி அலுவலர்கள் நிருவாகப் பணியாளர்கள் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு நன்றி கலந்த வாழ்த்துக்கள்.

சென்னை
20-04-2006

இயக்குநர்
(பொறுப்பு)

உள்ளே

வாழ்க்கை வரலாறு
– ம. இளங்கோவன் 1

தமிழ் இலக்கிய வரலாறு
– முகிலை இராசபாண்டியன் 20

தமிழாய்வுகள்
– ந. வேலுசாமி 52

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை நோக்கில் இராவணன்
– நா. ஜானகிராமன் 73

திருக்குறள் மொழிபெயர்ப்பு
– க. ஜெயந்தி 87

கட்டுரையாளர்

முனைவர் முகிலை இராசபாண்டியன்
விரிவுரையாளர், மாநிலக் கல்லூரி
சென்னை

முனைவர் ம. இளங்கோவன்
தமிழ்ப் பேராசிரியர்
இந்துக்கல்லூரி, பட்டாபிராம்
சென்னை

முனைவர் ந. வேலுசாமி
தமிழ்ப் பேராசிரியர்
ஈரோடு கலைக்கல்லூரி
ஈரோடு

திரு நா. ஜானகிராமன்
ஆய்வாளர், தமிழியல் துறை
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சி

செல்வி க. ஜெயந்தி
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

வாழ்க்கை வரலாறு

ம. இளங்கோவன்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை திருநெல்வேலி மாவட்டம் முந்நீர்ப் பள்ளம் என்ற ஊரில் 24-05-1866ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் சிவசுப்பிரமணியப் பிள்ளை; வள்ளியம்மை ஆவர்.

சங்கர நாராயணன் என்ற தம்பியும், வைகுண்டம் என்ற தங்கையும் இவர் உடன்பிறந்தோர் ஆவர்.

கல்வி

ஐந்தாவது வயதில் முந்நீர்ப்பள்ளம் திண்ணைப் பள்ளியில் படிக்கத் தொடங்கிய இவரைப் பத்தாவது வயதில் பெற்றோர் மேலைப்பாளையம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினர். பின்னர்த் தருவைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆங்கிலமும் பயிலத் தொடங்கினார். மேலும் படிக்க பன்னிரண்டாவது வயதில் சிந்துபூந்துறை இந்துக்கல்லூரி எனப் பெரும்புகழ் பெற்ற ஆங்கிலத் தமிழ்ப்பள்ளியில் இரண்டாம் வகுப்பில் சேர்ந்தார்.

இவர் படித்த இந்து உயர்நிலைப்பள்ளி பின் கல்லூரியானது. அதன் தலைவராக இருந்த 'செப்பர்டு' என்பவர் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கு ஆங்கிலப்பாடப் புத்தகங்களை எழுதினார். அவருக்குத் தமது அழகிய கையெழுத்தால் படியெடுத்துக் கொடுத்தார் பூரணலிங்கம் பிள்ளை.

1886ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடத்தப்பட்ட மில்லர் ஆங்கிலப் பரிசுத் தேர்வில் பூரணலிங்கம் பிள்ளை பங்குபெற்று முதற்பரிசு பெற்றார். இதற்கு ஊக்கமளித்த இந்துக்கல்லூரித் தலைவர் விங்கிளேர், இவர் தொடர்ந்து படிக்க உதவி செய்ததோடு, நற்சான்றிதழும் வழங்கினார்.

பின்னர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) பணியாற்றிய சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் 1888இல் பி.ஏ. பட்டம் பெற்றார். முதல்வர் டாக்டர் மில்லரின் நட்பைப் பெற்றார். எல்.டி. பட்டமும் பெற்றார்.

திருமணம்

தமது முதல் மனைவியான தாணு அம்மாளுக்குக் குழந்தைப்பேறு இல்லாததாலும் நோயுற்றதாலும் பூரணத்தம்மாளை இரண்டாவதாக மணந்து கொண்டார். சிவசுப்பிரமணியன், இளம்பூரணம் என்ற பூரணகுமார் ஆகிய இருமகன்களும், வள்ளியம்மாள் என்ற மகளும் பிறந்தனர்.

கல்விப்பணி

பூரணலிங்கம் பிள்ளை பாளையங்கோட்டையில் இருந்த இந்து உயர் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பள்ளியைச் சீராக்கினார். சென்னை மாகாணத்தின் தென்பகுதிக் கல்வி மேற்பார்வையாளர் "பிக்கிள்" என்பவர் அப்பள்ளியைப் பார்வையிட்டுப் பாராட்டியுள்ளார். இருப்பினும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அப்பள்ளியிலிருந்து விலகினார்.

பின்னர்த் திருமலைக் கொழுந்துப்பிள்ளை என்ற அவரது நண்பரின் பரிந்துரையினால் ஈரோடு 'மகாசன உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியரானார். அப்போது நெல்லை ஆட்சியாளர் 'நிக்கல்சன்' என்பவரின் ஆணையால் எட்டையபுரம் அரண்மனையில் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டி மூன்று மாதத்திலேயே பள்ளித்தலைமை ஆசிரியர் பதவியை விட்டு வந்து விட்டார். இளவரசருக்குச் சில மாதம் பாடம் கற்பித்தார். பின்னர் சென்னையில் குறுநில மன்னர்களின் மக்களுக்கு என அரசு ஒரு கல்லூரி தொடங்கியதால் வேலைதேடி வேற்றிடம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர் சென்னைக்குச் சென்றிருந்ததை அறிந்த டாக்டர் மில்லர் தமது கல்லூரியில் பேராசிரியராகப் பணி கொடுத்தார். நான்கு ஆண்டுகள் (1894-99) தொடர்ந்து பணியாற்றினார். பின்னர் 1900ஆம் ஆண்டு கோயம்புத்தூர் சென்று புனித மைக்கேல் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகத் தொடர்ந்து 4 ஆண்டுகள் (1900-1903) பணியாற்றினார். அதன்பின் 1904இல் முந்நீர்ப் பள்ளத்தில் இருந்த போது, இந்துக்கல்லூரியிலிருந்து ஆசிரியராகப் பணிபுரிய அழைப்பு வரச் சில திங்கள் அதில் பணியாற்றினார்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியின் தலைவர் (சம்போ) மூன்றுமாத விடுப்பில் சென்றபோது 1920இல் அப்பணியை இவர் மேற்கொண்டார்.

பின்னர் இந்துக் கல்லூரியில் ஓராண்டு ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். அடுத்து 1922இல் திருச்சி S.P.G. (பிஷப் ஹீபர் கல்லூரி) முதல்வர் கார்டினர் அழைப்பை ஏற்று அங்கு 1926 வரை நான்காண்டுகள் ஆசிரியர் பணியில் இருந்து பணி நிறைவு பெற்றுச் சொந்த ஊரான முந்நீர்ப்பள்ளம் வந்து சேர்ந்தார்.

கல்விப் பணியில் இருக்கும்போதே 1908இல் நெல்லையில் தமிழாசிரியர் சிவராமபிள்ளை துணையுடன் இவர் தலைமையில் தொடங்கப்பட்ட கல்லூரி நான்கு ஆண்டுகள் செயல்பட்டது. அங்கு ஆங்கிலம், உடல்நலம், நல்வழி, வேளாண்மை, வரலாறு, பூகோளம், சுருக்கெழுத்து, கணக்குப்பதிவு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தேர்வுகளுக்காக இப்புதுமுறைத் திட்டம் கற்பிக்கப்பட்டதால் இக்கல்லூரி "காமைசிஸ் கல்லூரி' எனப் பெயரிடப்பட்டது. கல்லூரியின் முதலாண்டு நிறைவு விழாவில், நெல்லை மாவட்ட நீதிபதி ஸ்பென்சன் தலைமைதாங்கி, பூரணலிங்கரைப் பாராட்டியுள்ளதை 'Tamil India, Bibliographical Introduction' என்ற நூலில் பதிவு செய்துள்ளார். இக்கல்லூரியைச் சென்னையிலும் தொடங்கிய அவர் அதன் பொறுப்பினைக் குழந்தை என்பவரிடம் ஒப்படைத்தார்.

மேலும் பணி நிறைவு பெற்று 1926இல் முந்நீர்ப்பள்ளம் அடைந்த பிறகு, 1928இல் Model School என்ற பள்ளியைத் தொடங்கினார். இப்பள்ளி நான்கு ஆண்டுகள் செயல்பட்டது. District Board School அவ்வூருக்கு வந்தபோது தமது பள்ளியிடத்தை அதற்கு வாடகைக்கு விட்டுத் தமது பள்ளியை அத்துடன் இணைத்து விட்டார். இத்தகைய பெருந்தன்மை கொண்டவராக அவர் இருந்தார்.

நவராத்திரிப் பிரசங்கங்கள் (1917), Studies and Critiques (1915) ஆகிய நூல்களில் 'சென்னைக் காமைசிஸ் காலேஜ் தலைவராகிய எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை பி.ஏ., எல்.டி., என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் ஆங்கிலத் துறையில் வளமைப் பேராசிரியராக (Emeritus) பணியாற்றி இருக்கிறார் என்பதை அவரது Ravana the Great : King of Lanka (1928) என்ற நூல்வழி அறியமுடிகிறது.

இயற்றிய நூல்கள்

ஆசிரியரால் வெளியிடப்பட்ட நூல்களின் பின்அட்டையில் அவரது நூல்களின் பட்டியல் வந்துள்ளது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நேர்த்தியாக எழுதும் புலமை பெற்றவர். அவற்றில் பெரும்பான்மையானவை பாடநூல்களாக அன்றைய அரசாங்கத்தாரால் ஒப்புதல் அளிக்கப்பட்டவை ஆகும். கட்டுரையின் இறுதியில் நூல்களின் பட்டியல் இடம்பெற்றுள்ளது. பாடநூல்கள் தவிரப் பொதுவான வாசகர்களுக்கான நூல்களும், ஆங்கிலம் கற்காத தமிழ் மக்களுக்காக எழுதப்பட்ட நூல்களும் எனச் சில நூல்கள் எழுதப்பட்டன என்று அவரது நூல்களின் முகவுரைகளில் காணமுடிகின்றது.

நூலில் நூலாசிரியர் பெயர் இடம்பெறும் பகுதியில் ஏற்கெனவே வெளியிட்ட நூல்களின் பெயர்களைக் குறிப்பிட்டு வழங்கும் ஆங்கில மரபைப் பின்பற்றியுள்ளார். சான்று பின்வருமாறு.

TAMIL LITERATURE
(Revised and Enlarged)

by

M.S. Purnalingam Pillai B.A., L.T.,
Emeritus Professor of English
Bishop Heeber College, Trichinapoly

Author of Tamil India
Critical Studies on Kural
St. Manickavasakan His Life and Teaching etc.

அறிவியல் இதழ்

தனி நூல்கள், பாடநூல்கள் மட்டுமன்றி, ஞானபோதினி என்ற இதழையும் நடத்தியுள்ளார். இவ்விதழ் எவ்வளவுக் காலம் வெளி வந்தது என்பது புலப்படவில்லை. "அறிவியல் இதழுக்கான தோற்றப்பொலிவுடன் 'ஞானபோதினி' எனும் ஏடு 1897ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதன் ஆசிரியர் பூர்ணலிங்கம் பிள்ளையாவார். இதில் இடம்பெற்ற தத்துவார்த்தக் கட்டுரைகளிலும் அறிவியல் தொடர்பான கட்டுரைகளே

அதிகமெனலாம்" என்று மணவை முஸ்தபா (காலம் தேடும் தமிழ், மறுபதிப்பு, 1993, மீரா பப்ளிகேஷன், சென்னை, ப. 49) தம் நூலில் பதிவு செய்துள்ளார். இவ்விதழ் 1907 வரை வெளிவந்தது. இதில் பரிதிமாற்கலைஞர், மதிவாணன் என்ற நாவலைத் தொடராக வெளியிட்டார். அது 1902இல் முழுநூலாக வெளிவந்தது.

ஆங்கில மொழியில் பெற்ற பயிற்சியின் விளைவாக உரைநடை, இதழியல் ஆகிய துறைகளில் பூரணலிங்கம் பிள்ளை தடம் பதித்துள்ளார் எனக் கருதலாம்.

நீதிக்கட்சி 1917இல் பார்ப்பனர் அல்லாதாரால் தொடங்கப்பட்டது. தியாகராயச் செட்டியாரின் தலைமையில் நீதிக்கட்சி நடந்தது. அக்கட்சி Justice என்ற ஆங்கில இதழையும், 'திராவிடன்' என்ற தமிழ் இதழும், 'ஆந்திரப் பிரகாசிகா' என்ற தெலுங்கு இதழையும் நடத்தி வந்தது. அவற்றுள் ஆங்கில இதழின் துணையாசிரியராகப் பூரணலிங்கம் பிள்ளை பணியாற்றினார். அப்போது நீதிக்கட்சியின் கொள்கைகளுக்கு ஆதரவாகத் தமது திராவிட ஆராய்ச்சியைக் கூர்மைப் படுத்தினார். இவர் ஆங்கிலத்தில் 32 நூல்களையும், தமிழில் 18 நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு ஆகியவை பற்றிய செய்திகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூல்கள்

முதன் முதலாக 1895இல், 'செய்யுட் கோவை' என்ற தலைப்பில் 44 பொருட்பாகுபாட்டில் பாடநூல் ஒன்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இது குறித்த பதிவை முனைவர் கடிகாசலம் பதிப்பித்த தமிழ் ஆய்வுக் களங்களில் (1994, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) உள்ள தனிப்பாடல்கள் கட்டுரையில் ப. கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

1896ஆம் ஆண்டு 'வாசகத் திரட்டு' என்ற உரைநடை நூலை வெளியிட்டுள்ளார்.

1897ஆம் ஆண்டு Witty Stories என்ற ஆங்கிலத் தலைப்பில் மரியாதைராமன் கதையும் இராயர் அப்பாஜி கதையும் அடங்கிய நூலைப் பதிப்பித்தார். அதில் செய்யுட்கோவை, விவேக விளக்கம், வாசகத்திரட்டு ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை பி.ஏ., என்று குறிப்பிட்டுள்ளார்.

1904இல் அவர் வெளியிட்ட A Primer of Tamil Literature என்ற நூல் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களின் முன்னோடி நூலாக அறிஞர்களால் பாராட்டப்பட்டதாகும். இந்நூலின் இதன் முன்னுரையில்,

> "இந்த அரிச்சுவடி, கால வரன்முறையைப் பொறுத்த வரையில் எத்துணை ஊனமுடையதாயினும், பிற நாட்டவர்க்கும் கல்லூரி வகுப்புகளிலுள்ள நமது இளைஞர்களுக்கும் காலத்தினதும், கறையானினதும், வெள்ளம், நெருப்பினதும், அந்நிய வெறுப்பினதும் சுதேசிச் சோம்பலினதும் அழிபாடுகளைத் தப்பி மிஞ்சிக் கிடக்கும் தமிழ் நூல்கள் பற்றிய ஓர் எண்ணப் பதிவினை வழங்குமாயின் அதுவே இதற்கான நியாயப்பாடாகும்".

என்ற கா. சிவத்தம்பியின் (இலக்கிய வரலாறு, வரலாறு எழுதியல் ஆய்வு, ப. 92, NCBH, சென்னை, 1998) மொழிபெயர்ப்பின் வழி இதுவே இலக்கிய வரலாற்றின் முன்னோடியாகவும் தமிழ் மக்களுக்கான வரலாற்றை அறிவிக்கும் நூலாகவும் அமைந்துள்ளதை அறியலாம்.

> "இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கருத்தில் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றினை முதன் முதலில் எழுதிய பெருமை இன்றைய பரீட்சை வழிகாட்டி நூல்களை எழுதுவோரின் தமிழ்நாட்டு வழிகாட்டி என்று கொள்ளப்படத் தக்கவரும், நிறைய எழுதிய வரும் ஆன முன்னீர்ப்பள்ளம் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அவர்களையே சாரும்" என்று சிவத்தம்பி குறிப்பிடுகிறார் (மேற்படி, ப. 100)

இதில் கூறப்பட்டுள்ள கால வகுப்பு சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது.

1. சங்க காலம் (கி.பி. 100 வரை)
2. சமண பௌத்த காலம் (கி.பி. 100 - 600)
3. சமய மறுமலர்ச்சிக் காலம் (கி.பி. 600 - 1100)
4. இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் (கி.பி. 1100 - 1400)
5. மடங்கள் சமய நிறுவனங்களின் காலம் (கி.பி. 1400 - 1700)
6. ஐரோப்பிய பண்பாட்டுக் காலம் (கி.பி. 1700 - 1900)

இத்தகைய பாகுபாடு இன்றைய 'இலக்கிய வரலாறு'களிலும் தொடருகிறது. இதே நூலை விரிவாக்கி 1929ஆம் ஆண்டு Tamil Literature என்ற நூலை வெளியிட்டார். அதில் 1896-1911ஆம் ஆண்டுவரையிலான எம்.ஏ. வினாத்தாளைப் பின் இணைப்பாகச் சேர்த்துள்ளார். இந்நூலை வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்களுக்கு அர்ப்பணித்துள்ளார்.

> "இலக்கிய வரலாறு என்று கொள்ளப்படுவதைக் காட்டிலும் பார்க்கச் சமூகவரலாறு எனக் கொள்ளப்படுவதே பொருத்தமானது என்று சொல்லத்தக்க முறையில் அதாவது, தமிழ்ச் சமூகத்தை அதன் இலக்கியத்தைக் கொண்டு விளக்க முனையும் முறையில் முதற்பகுதி அமைந்திருக்க இறுதி எட்டு அத்தியாயங்களும் இலக்கியத்தின் வரலாறாக மாத்திரமே, இலக்கியத்தின் வரலாற்றுத் தகவல் தொகுப்பாகவே அமைந்துள்ளன"

என்ற சிவத்தம்பியின் குறிப்பின் மூலம் அந்நூலின் தரத்தை அறியலாம்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் காலங்களாகப் பூரணலிங்கம் பிள்ளை 1904இல் பகுத்துக் கொண்டது ஆங்கில இலக்கியத்தில் பெரிதும் பயன்பட்ட ஒன்றாகும். (சான்று : எலிசபெத் காலம்; டிரைடன், போப் காலம்) அதே முறையைப் பின்பற்றியுள்ளதாகச் சிவத்தம்பி குறிப்பிடுகிறார்.

1904இல் வெ. கனகசபைப் பிள்ளை தம் The Tamils 1800 years ago என்ற நூல் வழியாகத் தமிழ்த் தேசியச் சிந்தனையை வெளிப்படுத்தினார். தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தில் நேரடிப் பங்கு கொண்டவரும் ஆங்கில இலக்கியம் பற்றிய வரன்முறையான அறிவினைப் பெற்றிருந்தவருமாகிய பூரணலிங்கம்பிள்ளை 1927ஆம் ஆண்டு Tamil India என்ற நூலையும், 1928ஆம் ஆண்டு Ravana the Great : King of Lanka என்ற நூலையும் வெளியிட்டவர். அதே நூலை 1936ஆம் ஆண்டு தமிழில் ராவணப்பெரியார் என்ற தலைப்பிலும் வெளியிட்டுள்ளார்.

அதனை வெளியிட்ட ஈரோடு ஈ.வெ. கிருஷ்ணசாமி அவர்களின்,

> "இராவணன் ஒரு திராவிட அரசன், ஆரியப் புலவர்கள் அவனைக் கொடியன் எனச் சித்திரித்துக்

> காட்டியுள்ளார்கள். அதை மறுத்து ராவணனுடைய உத்தம குணங்களை விளக்கிக் காட்டுவதே இந்நூலின் கருத்து. .... இச்சிறு நூல் மூலம் ராவணப் பெரியாரைப் பற்றிய தப்பெண்ணங்கள் ஒரு சிறிதாவது ஒழியுமாயின் அதுவே நாம் விரும்பும் கைம்மாறு"

என்ற குறிப்பிலிருந்து காலத்தின் தேவையை உணர்ந்து எழுதப்பட்ட நூலாக இதனைக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டு வரலாற்றுப் போக்கிற்கு ஏற்பத் தோன்றிய திராவிட இயக்கத்தின் தாக்கம் பழந்தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்வதிலும் வெளிப்பட்டது. சங்க இலக்கியங்களே தூய தமிழினத்திற்கான இலக்கியம் என்றும் இடைக்காலத்தில் எழுந்த கம்பராமாயணம் முதலிய இலக்கியங்கள் வடமொழி ஆதிக்கத்தின் விளைவு என்றும் கருதப்பட்டன. இராமாயணக் கதை ஆரியர்க்கும் திராவிடர்க்கும் நடந்த போராட்டத்தை விளக்கும் கதையாகக் கருதப்பட்டது. இராமன் ஆரியனாகவும் இராவணன் திராவிடனாகவும் விளக்கப் பெற்றனர். இராவணன் வீழ்ச்சி, சூழ்ச்சிக்குப் பலியான தமிழர்களின் வீழ்ச்சியாகவும் விளக்கம் பெற்றது. இந்தப் பார்வையில் பலநூல்கள் வெளிவந்தன என டாக்டர் க. பஞ்சாங்கம் (தமிழ் இலக்கியத்தில் திறனாய்வு வரலாறு; பக். 62-63). குறிப்பிட்டுச் சொல்வதன் அடிப்படையில் பூரணலிங்கம்பிள்ளையின் 'இராவணப் பெரியார்' என்ற நூல் பிற்காலத்தில் புலவர் குழந்தையின் இராவண காவியம் போன்ற கண்டன நூல்கள் வெளிவருவதற்கு அடிப்படையாகவும் முன்னோடியாகவும் அமைந்தது.

1914இல் 'ஐரோப்பிய யுத்தம்' என்ற நூலினை இயற்றினார். இதில்தான் 'ஞானபோதினி'ப் பத்திராதிபரால் இயற்றப்பட்டது என்ற குறிப்பு உள்ளது. இதில் 'இங்கிலீஷ் கற்காத தமிழருக்குப் பூகோள சரித்திரமே இன்னதென்று தெரியாததனால் கண்டங்களைப் பற்றி இப்புத்தகத்தில் முதலில் கூறப்பட்டுள்ளது." என்ற முகவுரையால் யாருக்கு இந்நூல் எழுதப்படுகிறது எனும் நோக்கம் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒரு செய்யுள் ஜார்ஜின் ஆட்சியைப் பாராட்டி எழுதப்பட்டுள்ளது.

1915ஆம் ஆண்டு 'Studies and Critiques' என்ற நூல் The Madras Christian College Magazine, The Madras Review, The Indian Review, The Malabar Quarterly Review, The New Asiatic Review, East and West, Bombay, The Indian Patriot and the New

Monthly ஆகிய இதழ்களில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூலில் ஜான் மார்லே இந்தியாவுக்கான மேனாள் செயலர் அவர்களின் வாழ்த்துக் கடிதத்தையும் இணைத்து வெளியிட்டுள்ளார். இது ஆங்கில இலக்கியம், கவிஞர்கள், இந்திய நாடகங்கள் என பலவகைகளில் ஆங்கிலத்தில் பல்வேறு காலகட்டங்களில் வெளியிடப்பட்ட ஏறக்குறைய 21 கட்டுரைகளின் தொகுப்பாகும்.

1917இல் வெளிவந்த நவராத்திரிப் பிரசங்கங்கள் என்ற நூலில் ஆங்கிலத்திலும் தலைப்பு உள்ளது. உள்ளே தமிழிலே செய்திகள் உள்ளன. பல்வேறு வரலாற்று, சமூக நிகழ்வுகளைப் பற்றிய கருத்துரைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது.

1926ஆம் ஆண்டில் தொல்சிதோயின் (டால்ஸ்டாய்) இரு சிறுகதைகள் தக்கவாறு மாற்றித் தமிழிலாக்கப்பட்டன என்ற குறிப்புடன், டால்ஸ்டாயின் வாழ்க்கை வரலாறும், 1. செம்மான் கதை (What men live by) 2. கோயில் கும்பிடப்போவார் கதை (The Two Pilgrims or Love and Good Deads) ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன.

1926ஆம் ஆண்டு Tamils India என்ற ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டார்.

1930ஆம் ஆண்டு 'கட்டுரைக் களஞ்சியம்' என்ற நூலை வெளியிட்டார். அவரது அன்னை வள்ளியம்மைக்கு அர்ப்பணிக்கப்பட்ட நூல் இது. இந்நூலில் தந்தைவழி, தாய்வழி முன்னோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இக்களஞ்சியத்தில் 55 கட்டுரைகள் தமிழில் உள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் 1-3 பக்கங்கள் உள்ளன. கல்கண்டு இதழில் வெளிவரும் ஒரு பக்க கட்டுரைகளைப் போன்றுள்ளன.

1939இல் நபிநாயகமும் கவிவாணர்களும் என்ற நூலை வெளியிட்டார். ''இந்நூலை இயற்றுவதற்கானப் பல காரணங்களுள். 1907ஆம் வருஷம் யான் நெல்லையம்பதியில் 'காமைசிஸ்' கல்லூரியையமைத்து நடத்தத் தொடங்கிய காலத்தில் அந்நகரில் நிருல் இஸ்லாம் அச்சகத்தலைவர் குர்ஆனைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருமாறு என்னைப் பன்முறை கேட்டனர். அப்பொழுது சேல்ஸ்துரை மகனார் ஆங்கிலத்தில் ஆக்கி அளித்த அந்நூலை வாங்கி அதனைப் பன்முறை படித்தேன்...." என்று இந்த நூல் இயற்றப்பட்டதன் நோக்கத்தை முகவுரையில் விளக்குகிறார்.

இதில் அரேபியா, நபிநாயகம் வரலாறு, குர்ஆன், இஸ்லாம், கலிபாக்கள், கலம்பகம், சொற்பொருள் விளக்கம், இஸ்லாமியப் புலவர்கள் எனப்பொருளடக்கத்துடன் சுமார் 32 இஸ்லாமியப் புலவர்களைப் பற்றிய குறிப்பும் முகம்மதிய விழாக்களும் விரதங்களும், முகம்மதியர் பற்றிய கவிதையும் பின் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த நூல் இஸ்லாம் சமயம் மற்றும் அதனைப் பின்பற்றும் மக்களைப் பற்றிய ஒரு கை நூலாக (Hand Book) அல்லது குறிப்புதவி நூலாக இருப்பதை அறியலாம்.

வாழ்க்கை வரலாற்று நூல்கள்

மாணிக்கவாசகர், அப்பர், பத்துத் தமிழ்த்துறவிகள், நம்மாழ்வார் ஆகியோரின் வாழ்வும் வாக்கும் என்ற நிலையில் வாழ்க்கைவரலாற்று நூல்களை இயற்றியுள்ளார். அவை யனைத்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. மாணிக்கவாசகரின் வாழ்வும் வாக்கும் என்ற நூல் தமிழில் விவாத இலக்கியத்திற்கு ஒரு நல்ல உதாரணம் என்கிறார் கா. சிவத்தம்பி.

> "சில ஆண்டுகளுக்கு முன் டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் திருவாசகத்தை மொழிபெயர்த்து அதில் ஒரு பாராட்டுரையையும் வரைந்துள்ளார். அந்நூலை இங்கிலாந்தில் வெளியிட்ட போது மேற்கு நாடுகளில் உள்ளவர்களுக்குத் தமிழகப் புனித நூல்கள் பற்றிய விழிப்பை ஏற்படுத்தியது..........."

என்ற குறிப்பு, மாணிக்கவாசகரின் வாழ்வும் வாக்கும் என்ற நூலில் உள்ளது. அந்நூல் 1934ஆம் ஆண்டு வெளியானது.

குறள் பற்றிய நூல்கள்

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயற்சித்துள்ளார். திருக்குறள் பற்றிய ஆய்வுரை ஒன்றையும் ஆங்கிலத்தில் 1929ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளார். அதனை மறுபதிப்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

பாட நூல்கள்

> "மெக்காலேயால் ஆங்கிலக் கல்வி உருவானது. ஆங்கிலக் கல்வியுடன் தமிழ்க் கல்விக்கும் வாய்ப்பளித்தமை இங்கு இணைத்து நோக்கத் தக்கது. இதற்கு மிகவும் முயன்று உழைத்தவர்கள்

பூர்ணலிங்கம்பிள்ளையும் பரிதிமாற் கலைஞரும் ஆவர்".

என்று ச. சிவகாமி (பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்; 1994; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) குறிப்பிடுவார். தொகை நூல்கள் அக்காலத்தில் பாடநூல்களாக வெளிவந்தன. அந்த வகையில் பிள்ளையின் 1896இல் வெளிவந்த வாசகத்திரட்டு, செய்யுட்கோவை, விவேக விளக்கம், தப்பிலி போன்ற தனி நூல்களும், தமிழிலக்கியம் என்ற பெருநூல் போன்று முதுகலைப் பட்ட வகுப்பிற்கான வினாவங்கி இணைப்பு கொண்ட நூல்களும் வெளியிடப்பட்டன.

கருத்துரைகள்

சில நூல்களைப் பற்றிய கருத்துரைகள், அச்சேறிய நூல்கள், அச்சேற இருக்கும் நூல்கள் எனப் பட்டியல்களின் இணைப்பும் நூல்களின் பின்னிணைப்பில் உள்ளன. பூரணலிங்கம் பிள்ளையின் காலத்தில் வெளிவந்த இதழ்களில் இடம்பெற்றுள்ள விமரிசனங்களில் சிலவற்றை Some Opinions on : Tamil India, நூலுக்கும், A Primer of Tamil Literature என்ற நூலுக்கும், Studies and Critiques என்ற நூலுக்கும் கருத்துக் கூறிய இதழ்கள், கருத்துக் கூறிய அறிஞர்கள் பற்றியன இக்கட்டுரையின் பின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

சிற்றிலக்கியம்

மு.சி. பூரணலிங்கம் பிள்ளையின் நூல்களில் கிடைத்த பெரும்பான்மை நூல்களைக் கொண்டு மேற்கண்ட தகவல்கள் பெறப்பட்டன. ஆயினும், ந.வீ. ஜெயராமன் தொகுத்த, 19-20ஆம் நூற்றாண்டு காலகட்டச் சிற்றிலக்கியத் தொகுப்பில் மு.சி. பூரணலிங்கம்பிள்ளை 'திருநாவுக்கரசர் திருஞானம்' என்ற தலைப்பில் ஒரு சிற்றிலக்கியம் இயற்றியுள்ளதான குறிப்பைக் காணமுடிந்தது. ஆனால் அவர் இயற்றிய நூல்களின் பின்பக்கங்களில் பதிவாகியுள்ள புத்தகப்பட்டியலிலோ, அவர் வழக்கமாக ஆசிரியர் பெயருக்குக் கீழ்க்குறிப்பிடும் ஆசிரியரின் பிற நூல்கள் என்ற நிலையிலோ காணப்படாத இந்நூல் பற்றிய எத்தகவலும் அறிய முடியவில்லை.

சட்டநூல்கள்

இவர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பணிபுரியும் போது பி.எல். படித்தார். ஆனால், வழக்குரைஞர் வாழ்க்கையில் பற்றில்லாமையால், பி.எல். தேர்வினை எழுதவில்லை. சட்ட

வகுப்பிற்குரிய பாடங்களைக் கற்றுத் தெளிந்ததால், சட்டநூற் புலமை காரணமாகப் பல அரிய நூல்களை வெளியிட்டார். அவற்றுள் உரோமன் சட்டத் தொகுப்பு, மெயினினுடைய பழங்காலச் சட்டம், அச்சட்ட முறைகளின் சுருக்கம், ஒப்பந்தச் சட்டம், இன உதவிச் சட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

சொற்பொழிவுகள்

ஆங்கிலப் பேராசிரியரான இவர் தமிழில் மிகுந்த பற்று கொண்டவர். சிறந்த தமிழ்ப்புலவர். சைவ சித்தாந்தத்தில் அதிகப் பற்றுடையவர். பாளையங்கோட்டை சைவ சபையின் இரண்டாவது மாநாடு 1911ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. அம்மாநாட்டிற்குத் தலைவர் மதுரைத்தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவர் ஆவார். அம்மாநாட்டின் முதல் நாள் பூரணலிங்கர் ''பவணந்தி முனிவர்'' பற்றி ஆங்கிலத்திலும், 'தெரிந்து செயல்வகை' என்பது பற்றித் தமிழிலும் உரையாற்றினார்.

1912இல் மூன்றாவது சைவசபை மாநாட்டில் 'எழுமையும் ஏமாப்புடைத்து' என்ற பொருளில் தமிழிலும், 'திருவள்ளுவர் கொள்கை' என்ற பொருளில் ஆங்கிலத்திலும் உரையாற்றினார்.

பத்திவிளையில் உள்ள திராவிடர் கழகத்தின் 13ஆவது ஆண்டுவிழாவிற்கு இவர் தலைமைதாங்கினார். தந்தை பெரியாருக்கு முன்னர் உருவாக்கப்பட்ட திராவிடக் கழகத்தினைத் தோற்றுவித்தவர் சிவஞானயோகிகளாவார். தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாவதற்கு அவர் காலத்தில் நடைபெற்ற தஞ்சை மாநாட்டில் தி.நெ. சிவஞானம் பிள்ளை தலைமை தாங்கியபோது சதாசிவ பண்டாரத்தார், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் முதலியோருடன் முதன்மைப் பங்கு பணி ஆற்றியுள்ளார்.

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் 1940ஆம் ஆண்டு மே மாதம் 18, 19 ஆகிய நாட்களில் தனது 12ஆவது மாகாணத் தமிழ் மாநாட்டினைத் திருநெல்வேலியில் நடத்தியது. அதற்கு இவர் தலைமைதாங்கிச் சொற்பொழிவாற்றியுள்ளார்.

அர்ப்பணிப்புகள்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தாமியற்றிய நூல்களில் சிலவற்றைச் சிலருக்குத் தம் அன்பின் வெளிப்பாடாக அர்ப்பணித்துள்ளார்.

'தமிழ் இலக்கியம்' என்ற நூலை வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாருக்கு அர்ப்பணித்துள்ளார்.

இராமாயண ஆய்விற்கு முன்னோடியான ராவணப் பெரியார் என்ற ஆங்கில நூலை (1928) அங்கீகரித்த திருவாளர் T.P. பொன்னம்பலம் பிள்ளை, M.R.A.S. அவர்களுக்கு அந்நூலை அர்ப்பணித்துள்ளார்.

1929இல் வெளியிட்ட குறள் ஆய்வுகள் என்னும் பொருளுடைய Critical Studies in Kural என்ற நூலைத் 'திருக்குறள் தீப அலங்காரம்' எனும் நூலின் ஆசிரியராகவும், கலை இலக்கியக் காவலராகவும் விளங்கிய, திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஜமீந்தாரினி திருமதி ராணி லட்சுமி அம்மணியம்மாள் அவர்களுக்கு தமிழ் மொழி இலக்கியத்தில் இருந்த ஆழ்ந்த புலமையைப் பாராட்டும் முகமாக, அர்ப்பணித்துள்ளார்.

1930இல் வெளியிட்ட கட்டுரைக் களஞ்சியம் என்ற நூல் அவரது பேரன்பு அன்னை ஸ்ரீமதி வள்ளியம்மை, 65ஆம் அகவையில் 1911ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இயற்கையெய்தியதன் நினைவாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

1939இல் வெளியிட்ட நபிநாயகமும் கவிவாணர்களும் என்ற நூலைப் பீகம் மீர் அமிருதீன் அம்மையாருக்கு உரிமை யாக்கியுள்ளார். அவரது அனுமதியும் ஆதரவும் கிடைத்த பிறகு நூலை வெளியிட்டுள்ளார்.

இறுதிக் காலம்

தமிழக வரலாற்றில் விடுதலைக்கு முன்பு வாழ்ந்த தமிழறிஞர் பெருமக்களுள் மு.சி. பூரணலிங்கம்பிள்ளையும் ஒருவர். அவரது நூல்கள் தமிழக வரலாற்றையும் உலக வரலாற்றையும் தமிழின வரலாற்றையும் பதிவு செய்துள்ளன. அதிலும் குறிப்பாக, தமிழ்மொழி இன மறுமலர்ச்சியில் பெரிதும் பங்களித்தவர் என்ற நிலையையும் காண முடிகிறது. 81 ஆண்டுகள் பெருவாழ்வு வாழ்ந்த பெரியார் 16-6-1947ஆம் நாள் இயற்கை எய்தினார்.

தமிழ், தமிழக, தமிழின் மறுமலர்ச்சி தோன்றிய காலத்திலும், தன்மான இயக்கக் காலத்திலும் வாழ்ந்த இப்பெரியார் இயற்றிய நூல்கள் அவருக்குப் பின்வந்த அறிஞர்களுக்குத் தமிழ் இனத் தொன்மை, மொழிப் பழமை முதலிய ஆய்வுகள் மேற்கொள்ள ஊக்கமளித்தது எனலாம். அறிவியல், வரலாறு, புவியியல், இதழியல், இலக்கியம் முதலிய துறைகளில் தடம்பதித்துள்ளார். சிறந்த

பாடநூலாசிரியராகவும் ஆங்கிலப் பேராசிரியராகவும், ஆங்கில இலக்கிய ஆய்வாளராகவும், பிற்கால ஆய்வுகளுக்கு முன்னோடியாகவும் விளங்கிய பன்முக அறிஞரான இப் பெரியாரை நினைவு கூர்ந்து தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்துவதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முனைந்து செயல்படுகிறது. அவரது Critical Studies in Kural, Tamil India ஆகிய நூல்களை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளது. பூரணலிங்கம்பிள்ளை நூல்களைத் தக்கபடி மொழிபெயர்த்தோ மறுபதிப்பாகவோ வெளியிட்டால் தமிழ்மக்களுக்குப் பெரிதும் நன்மையாக இருக்கும்.

பின்னிணைப்புகள்

இணைப்பு 1

ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட நூல்கள்

1. Studies and Critiques in Modern English Literature (Twenty Essays on Tennyson, Browsing, Morris, Bridges etc.).
2. Primer of Tamil Literature (New Edition Revised and enlarged and brought up-to-date. The first and only work of the kind).
3. The Madras University papers on Shakespeare's plays (with a critical introduction to each play and a general instruction about Shakespeare and his work).
4. Songs and Sonnets from Shakespeare (For Students and General Readers).
5. Stories from Goldsmith (Thirty in number, with introduction and Glossary - prescribed for Training school).
6. Abbot Samson by Carlyle (Abridged) with Introduction and Glossary.
7. Tamil India (with A Bio-Graphical Introduction by the Editor. Maps and Photo. A new work of research on the Antiquity and Greatness of the Tamil race, language, literature and civilisation).
8. Ravana the Great. king of Lanka (Eleven Chapters with Map and Appendix).
9. Analysis of English Literature.

10. Ten Tamil Saints.
11. A Digest of Raman law (For F.L. Students).
12. An Epitome of Juris prudence and Maine's Ancient Law (for F.L. Students).
13. Contract Act (with Note and Introduction giving an analysis of the English Contract law and Questions).
14. Abstract of Maine's Ancient Law.
15. Specific Relief Act (with Introduction and Notes).
16. Exercises in English.
17. A Book of Conversations (with model letters).
18. The Matriculation Reader (Containing extracts from the writings of living writers with photos of authors).

18a. The Pre-Matriculation Reader with Photos of Authors.

19. Ripon Reader - Senior, Junior, Preliminary.
20. Selected in English Poetry for the middle school classes.
21. Miscellaneous Essays.
22. History of India for Junior Classes.
23. History of England for Senior Classes.
24. Socrates and Plato and Evolutional Ethics (for B.A. Students).
25. Julius Caesar - with Introduction and Full Notes.
26. Othello - with Introduction and full Notes.

தமிழ் நூல்கள்

1. ஔவைக் குறள்
2. செய்யுட் கோவை (A Poetical Anthology Approved).
3. விவேக விளக்கம் (A Poetical Anthology for middle school approved)
4. விவேக விளக்கம் (புதிய பதிப்பு).
5. வாசகத் திரட்டு (A Prose Anthology)
6. Witty Stories of Mariathai Raman and Royar Appaji.
7. நவராத்திரிப் பிரசங்கங்கள்.
8. தொல்சிதோயின் (டால்ஸ்டாய்) இரு சிறுகதைகள் (1926).

9. சூரபத்மன் (A Biography).
10. ஐரோப்பிய யுத்தம் (1914).
11. காமாட்சி (A New Comedy : Imitation of Moliere's)
12. ஷேக்ஸ்பியரின் பன்னிரு பெண்மணிகள்.
13. கதையும் கற்பனையும் (Thirty Stories with Morals)
14. தப்பிலி (On different interesting topics: The book for Tamilian Boys, Girls, Men and Women).
15. வைரமணிமாலை (Adaptation of Carlyle's Diamond Necklace) (in press))
16. தமிழும் தமிழ்க் கவிஞர்களும் (அச்சில்).
17. தமிழ்க் கட்டுரை அல்லது சிற்றுரைகள் (அச்சில்).

இணைப்பு 2

கருத்துரைகள் வெளியான இதழ்கள்

1. The Hindu.
2. The Madras Mail.
3. The Daily Indian Mail.
4. The United India and Indian States.
5. The Mysore Economic Journal.
6. The Madras Christian College Magazine.
7. The Madras Review.
8. The Indian Review.
9. The Malabar Quarterly Review.
10. The New Asiatic Review.
11. East and West, Bombay.
12. The Indian Patriot.
13. The New Monthly.
14. The Christian Patriot.
15. The Madras Times.
16. The Educational Review.

இணைப்பு 3

கருத்து கூறிய அறிஞர்கள்

1. The Hon'ble P. Ramanathan K.B.C.M.G., of Colombo.
2. Mr. A. Muthiah Pillai, B.A.B.L., Vakil and Secretary Saiva Sabah, Palayamcottah.
3. Mr. Vishvanatha V., Somasundaram, Hon. Sec., Colombo Hindu Dharma Samaj.
4. Mudaliyar C. Arumugam, Supreme Court, Colombo.
5. Mr. N.V. Viswalingam, Kualalumpur.
6. Mr. N. Ramakrishna Mudaliyar, Zamindar, Mahabalipuram.
7. Mr. V.R.M. Chittiar, N. Pudur, Karaikudi.
8. The Hon'ble Justice Sir S. Subramania Aiyar.
9. The Rew. H.A. Poply, London Mission, Erode.
10. G.H. Cammiada esq., Pondicherry.
11. G. Venkata Rao, Esq, M.A., Assistant Epigraphist.
12. C. Srikanta, Esq., M.A. Rosmead place, Colombo.
13. Frederic Harrison.
14. John Bailey.
15. Prof. Hughwalker, M.A.,L.L.D.,
16. Prof. C.H. Herford, M.A., Litt.D.,

இணைப்பு 4

முன்னீர்ப் பள்ளம் M.S. பூரணலிங்கம் பிள்ளை B.A., L.T., அவர்கள் ராவ்சாஹிப் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலரில் எழுதிய கவிதை.

பெரியாரைப் பேணுதல் பெரும்பே றென்பர்
விரிவுரை விளக்கம் வேண்டுவ தில்லையால்
சரியெனக் கொள்ளல் சாலவும் நன்றே.

முதலிடம் பெற்றோர் முதலிக ளென்பர்
கதலி பாகங் கலைமகள் கருணையை
மதலைய தாக மதிக்குமிவ் வுலகே

முருகன் கிருபையை மருவிய முதலியார்
விருதுகள் பெற்ற விவசாய நிபுணரே
கருமஞ் சிதையாக் கானடை ராயரே

சாய்ப்பெனப் படுவது சத்தியச் சார்பே
வாய்ப்பெனப் படுவது வாய்மையின் திறனே
காய்ப்பெனப் படுவது காப்பியப் பொருளே

வெண்பா விருத்தம் விரைந்து பாடுநர்
கொண்மூ வொப்பக் கொட்டுத லியல்பே
தண்டமிழ்க் கோம்பி தண்பொருநை நெல்லை

அகலிகை சுவர்க்கம் அகன்ற நூல்கள்
பகலவன் போன்று பார்ப்பவர்க் கொளிதரும்
இகலவ னிராம னிழைத்த வருவினை

அனைத்து மணியணி யாக்கிய கம்பரை
நினைத்து நினைத்து நிதந்தொறுஞ் சாரங்
கனைத்துக் கனைத்துக் காணுத லழகே

மாந்தர்க்கு வயது நூறல்ல தில்லையேல்
சாந்தற் காண்டு சதஞ்சத மாமே
ஏந்தற் காப்த மெண்பது பெரிதோ

முதுமையெய்தினர் முதலியா ரென்பரேல்
புதுமை படைத்தவர் பூமியி லிவரோ
விதுர வீரியர் வீமரும் வேந்தரே.

வெள்ளம் வருமுன் கால்கோலும் வேளாளர்
பள்ளம் படுமுன் பண்ணையிற் பாய்ச்சுவர்
கள்ளன் கதிரைக் கொய்ய விடுவரோ

காயைப் பறிப்பவர் சித்திரம் வரைபவர்
காயைக் கனியெனக் கொள்பவ ரொப்பரே
தாயைப் பேணுவோர் சேயை யென்செயார்

கரைபடா மதியெனக் கவினுறு கவிஞர்க்கு
இறைவ னருளுவ னிகபர வாழ்வுகள்
அறைதல் வேண்டுமோ அவனியுளார்க்கே.

ஆயிரத்தெட்டு அரும்பிறை கண்டோர்
ஆயிர முக்கா லாறுட னறிந்தோர்
பாயிரம் பனுவற் கருக ரென் பாரே.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடையதிவ் வுலகெனப் புகன்ற
அருமை நோக்கியே அன்பு பாராட்டுதும்

சிதம்பர வுடையர் கதங்கொளாக் குமாரர்
இதநாடி நம்பி ஈசுர ரறு முகன்
நிதஞ்சிவ சீனி சேது செய் சிறப்பே

தமிழ்த்தாய்க் கரும்பணி தளராதுஞற்ற
உமிழ்த்த பெரும் பொரு ளுலகந் துய்த்தலின்
அவிழ்த்த நாதனா ராலய மோங்குக

கற்பகம் வாழுநற் கைம்மாறு கருதார்
சொற்பத மாயுஞ் சோணகிரி யங்ஙனே
நற்பத, நல்குவர் நம்பூ ரணரே

*****

தமிழ் இலக்கிய வரலாறு

முகிலை இராசபாண்டியன்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்) 1904ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. தமிழ் இலக்கியம் பற்றிய அறிமுகமாக விளங்கிய அந்த நூலைத் தொடர்ந்து தமிழ் இலக்கிய வரலாற்றை இரண்டு தொகுதிகளாக வெளியிடக் கருதிப் பத்து ஆண்டுகளாக அதற்காகக் கடுமையாக உழைத்துள்ளார். போதிய நிதி உதவி கிடைக்காததால் தமிழ் இலக்கிய வரலாற்றை அவரால் வெளியிட இயலவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொகுதிகளுக்காக அவர் பட்டபாடு வீணாகாமல் இருக்க அந்தச் செய்திகளையும் தாங்கித் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூல் 1929ஆம் ஆண்டு மறுபதிப்பாக வெளிவந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குக் கலங்கரை விளக்கமாக விளங்கும் இந்த ஆங்கில நூலின் வழியாக எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பணியைக் காண்போம்.

வரலாற்றுப் பகுப்பு

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தமது இலக்கிய வரலாற்று நூலை ஆறு பகுதிகளாகப் பிரித்துள்ளார்.

பகுதி - 1	சங்க காலம் - The Age of Sangams (Upto 100 A.D.)
பகுதி - 2	புத்த சமணர்களின் காலம் - The Age of Buddhists and Jains (A.D. 100 - 600 A.D.)
பகுதி - 3	சமய மறுமலர்ச்சிக் காலம் - The Age of Religious Revival (700 - 900 A.D.)
பகுதி - 4	இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் - The Age of Literary Revival (800 - 1400 A.D.)
பகுதி - 5	மடங்களின் காலம் - The Age of Mutts or Matams (1350 - 1600 A.D.)
பகுதி - 6	ஐரோப்பியர்களின் காலம் - The Age of European Culture (1700 - 1926)

நூலின் இறுதியில் பின்னிணைப்புகளாகப் பின்வருவன வற்றையும் தந்துள்ளார்.

1. தமிழ் நூல்களின் பட்டியல் (Select works)
2. புலவர் அட்டவணை (Poets Alphabetically Arranged)
3. எம்.ஏ., வினாத்தாள் (M.A., Questions)
4. அருஞ்சொல் அகரவரிசை (Index)
5. துணை நூற்பட்டியல் (Bibliography)
6. பிழை திருத்தம் (Errata et corrigenda)

முன்னிணைப்புப் பக்கங்களுடன் 461 பக்கங்களைக் கொண்ட இந்த ஆங்கில நூலை வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாருக்குப் படைத்துள்ளார். பதிப்புப் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படாத இந்த நூல் பதிப்புரையின் இறுதியில் ஆகஸ்ட் 24, 1929 என்று நூல் வெளியான ஆண்டும் மாதமும் நாளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

நூலின் இரண்டாம் பக்கத்தில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் படமும் அதன் கீழ் அவரது பெயர் பி.ஏ. எல்டி., என்னும் பட்டங்களுடனும் பிறப்பு ஆண்டு மே 1866 என்றும் அச்சிடப்பட்டுள்ளன.

மூன்றாம் பக்கத்தில் தமிழ் இலக்கியம் விரிவாக்கப்பட்ட மறுபதிப்பு என்று நூலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்கீழ் நூலாசிரியரின் பெயரும் ஆங்கிலப் பேராசிரியர் என்னும் பதவியும் பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி என்று பணியாற்றிய இடமும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்கீழ் 'தமிழ் இந்தியா' (Tamil India) 'மாமன்னன் இராவணன்' (Ravana the Great), 'குறள் பற்றிய திறனாய்வு' (Critical Studies in Kural), 'மாணிக்கவாசகர் வாழ்வும் வாக்கும்' (St. Manickavasakar his life and Teachings) மற்றும் பல என்று அவர் எழுதிய நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தப் பக்கத்தின் இறுதியில் வெளியீட்டாளர் பற்றிய குறிப்பு

THE BIBLIOTHECA
MUNNIRPALLAM
TINNEVELLY DT.,
SOUTH INDIA

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இனி, நூலின் உள்ளடக்கத்தைக் காண்போம்.

சங்க காலம்

மூன்று சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்த பெருமை கொண்ட தமிழ் மொழியைப் போற்றி அச்சங்கங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களைப் பூரணலிங்கம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

தலையாலங்கானத்தில் பாண்டியன் நெடுஞ்செழியன் பெற்ற வெற்றியின் போது ஒரே நேரத்தில் புலவர்கள் கூடி அவனைப் புகழ்ந்ததைச் சுட்டிக்காட்டிச் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த தன்மையை உறுதிப்படுத்தியுள்ளார்.

அகத்தியர், சிவன், முருகன் முதலான 549 புலவர்கள் முதல் சங்கத்தில் பாடல்கள் இயற்றியுள்ளனர். இந்த முதற்சங்கம் 4440 ஆண்டுகள் செயற்பட்டது என்றும் இச்சங்க காலத்தில் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலான நூல்கள் தோன்றின என்றும் இந்த முதல் சங்கம் கடல்கொண்ட தென்மதுரையில் இருந்தது என்றும் காய்சின வழுதி முதல் கடுங்கோன் வரை 89 மன்னர்கள் இந்தச் சங்கத்திற்குப் புரவலர்களாக இருந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அகத்தியர் இயற்றிய அகத்தியம் இச்சங்க காலத்தில் இலக்கண நூலாக விளங்கியது. முதற் சங்க காலத்தில் நூல் இயற்றியதாகக் கூறப்படும் அகத்தியருக்கும் ஆரிய முனிவராகக் கூறப்படும் அகத்தியருக்கும் தொடர்பில்லை என்றும் இந்த நூலில் விளக்கியுள்ளார்.

இரண்டாம் அல்லது இடைச் சங்கம் கபாடபுரம், அலைவாய், புதலூர், முத்தூர் என்னும் பெயர்களைக் கொண்ட ஊரில் இருந்தது. இங்கே 59 புலவர்கள் பாடல்கள் இயற்றினர். 3700 ஆண்டுகள் இருந்த இச்சங்கத்தை வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை 59 மன்னர்கள் காத்துள்ளனர். கலி, குருகு, வெண்டாழி, வியாழமாலை முதலானவை இரண்டாம் சங்க நூல்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாம் தமிழ்ச் சங்கம் 1850 ஆண்டுகள் நிலவியது. இதில் 49 புலவர்கள் நூல்கள் படைத்துள்ளனர். முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 மன்னர்கள் இச்சங்கத்தைக் காத்துள்ளனர். இச்சங்கத்தில் குறள், பேரிசை, கூத்து, சிற்றிசை, வரி, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை முதலானவை அரங்கேறின என்று சங்ககால அறிமுகத்தில் பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலம் என்னும் பகுதியை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளார்.

முதல் பிரிவில் அகத்தியர், தொல்காப்பியர், தேரையார் முதலான புலவர்களையும், தொல்காப்பியம் முதலான நூல்களையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் பிரிவில் பத்துப்பாட்டு நூல்களை இயற்றிய நக்கீரர், மாங்குடி மருதனார், முடத்தாமக் கண்ணியார், உருத்திரங் கண்ணனார், நத்தத்தனார், பெருங்கௌசிகனார், கபிலர், நப்பூதனார் முதலியோர் பற்றியும் பத்துப்பாட்டின் காலம் பற்றியும் வரையறை செய்துள்ளார்.

மூன்றாம் பிரிவில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலிய எட்டுத்தொகை நூல்களை அறிமுகம் செய்துள்ளார்.

நான்காம் பிரிவில் நாலடியார், நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழி நாற்பது, இனியது(வை) நாற்பது, இன்னா நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, இன்னிலை, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி முதலிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அறிமுகம் செய்துள்ளார்.

ஐந்தாம் பிரிவில் சங்ககாலப் புலவர்கள் சிலர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். திருவள்ளுவர் அவருடைய சகோதரர் அதியமான், சகோதரி ஔவையார், திருமூலர், காரைக்கால் அம்மையார், இடைக்காடர், கல்லாடர், இறையனார், பெருந்தேவனார், காக்கைப் பாடினியார், பல்காப்பியனார், பல்காயனார் முதலியோர் அந்தப் புலவர்கள் ஆவர்.

ஆறாம் பிரிவில் பெண்பாற் புலவர்களின் வரலாற்றுச் சுருக்கம் இடம்பெற்றுள்ளது. நாகையார், மாசாத்தியார், கீரன்எயிற்றியார், நப்பசலையார், போந்தைப் பசலையார், நக்கண்ணையார், நல்வெள்ளியார், பூதியார், வெள்ளி வீதியார், காமக் கண்ணியார், கந்தியார், குறமகள் இளவெயினி, பேய் மகள் இளவெயினி, குறமகள் குறியெயினி, காவல் பெண்டு, நச்செள்ளையார், குன்றியாள், வருமுலையார் இத்தி, அள்ளூர் நன்முல்லையார், பூதியார், மாறோக்கத்து நப்பசலையார், பூங்கண்ணுத்திரையார், பூதப் பாண்டியன் தேவி, அங்கவை, சங்கவை ஆகிய பெண்பாற் புலவர்களின் பெயர்களுடன் அவர்களின் பாடல் எண்களையும் குறிப்பிட்டுள்ளார்.

புத்த சமண காலம்

புத்த சமண காலம் என்னும் இரண்டாம் பகுதியில் பூரணலிங்கம் பிள்ளை நான்கு பிரிவுகளை அமைத்துள்ளார். முதல் பிரிவாகிய பஞ்ச காவியங்கள் என்னும் தலைப்பில் ஐம்பெருங் காப்பியங்களை மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்னும் தலைப்பில் அறிமுகம் செய்துள்ளார். இவற்றைத் தொடர்ந்து பெருங் கதையையும் இதே பிரிவில் அறிமுகம் செய்துள்ளார்.

சிறுகாப்பியங்கள் என்னும் இரண்டாம் பிரிவில் நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, (ய)சோதர காவியம் முதலியவற்றைப் பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டு விளக்கியுள்ளார்.

மூன்றாம் பிரிவில் மேருமந்தரபுராணம், திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு ஆகிய மூன்றும் அவற்றின் ஆசிரியர்களுடன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

நான்காம் பிரிவில் கல்லாடமும் புறப்பொருள் வெண்பா மாலையும் விளக்கப்பட்டுள்ளன.

சமய மறுமலர்ச்சிக் காலம்

சமய மறுமலர்ச்சிக் காலம் என்னும் மூன்றாம் பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன. சைவ சமய குரவர்கள் நால்வர் என்னும் முதல் பிரிவில் பன்னிரு திருமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து மாணிக்கவாசகர், அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் வாழ்வும் படைப்புகளும் விளக்கப்பட்டுள்ளன.

பன்னிரு ஆழ்வார்கள் என்னும் இரண்டாம் பிரிவில் பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய ஆழ்வார்களின் வரலாறு விளக்கப் பெற்றுள்ளன. பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் ஒரே தலைப்பில் அமைத்துள்ளார். மேலும் ஒவ்வோர் ஆழ்வார் பிறந்த நாட்டையும் ஊரையும் பட்டியலிட்டுள்ளார்.

மூன்றாம் பிரிவில் நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமாள் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பன்னிரு திருமுறைகளில் ஒன்றான திருவிசைப்பா தொடர்பான

செய்திகள் இடம்பெற்றுள்ளன. பட்டினத்தார், பத்திரகிரியார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், கச்சியப்ப சிவாச்சாரியார் ஆகியோர் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

நான்காம் பிரிவில், நாற்கவிராச நம்பி, குணசாகரர், அமிர்தசாகரர், பவணந்தி முனிவர், குணவீர பண்டிதர் ஆகியோரின் படைப்புகள் விளக்கப்பட்டுள்ளன.

இலக்கிய மறுமலர்ச்சிக் காலம்

இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் என்னும் நான்காம் பகுதியைப் பூரணலிங்கம் பிள்ளை ஐந்து புரிவுகளாகப் பிரித்துள்ளார். முதல் பிரிவில் இலக்கிய மூவர் என்று கம்பனையும் புகழேந்தியையும் ஒட்டக்கூத்தரையும் அறிமுகம் செய்துள்ளார்.

இரண்டாம் பிரிவில் சைவ சித்தாந்தச் சாத்திரங்களை அறிமுகம் செய்துள்ளார். பதினான்கு சாத்திரங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் பின்வரும் வகையில் பட்டியலிட்டுள்ளார்.

1. திருவுந்தியார் - உய்யவந்த தேவர்
2. திருக்களிற்றுப்படியார் - உய்யவந்த தேவர்
3. சிவஞான போதம் - மெய்கண்ட தேவர்
4. சிவஞான சித்தியார் - அருள் நந்தி தேவர்
5. இருபா இருபது - அருள் நந்தி தேவர்
6. உண்மை விளக்கம் - மனவாசகம் கடந்த தேவர்
7. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாச்சாரியார்
8. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
9. வினாவெண்பா - உமாபதி சிவாச்சாரியார்
10. போற்றிப் பஃறொடை - உமாபதி சிவாச்சாரியார்
11. கொடிக்கவி - உமாபதி சிவாச்சாரியார்
12. நெஞ்சு விடு தூது - உமாபதி சிவாச்சாரியார்
13. உண்மை நெறி விளக்கம் - உமாபதி சிவாச்சாரியார்
14. சங்கல்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

இதைத் தொடர்ந்து உய்ய வந்த தேவர், மனவாசகம் கடந்த தேவர், மெய்கண்ட தேவர், அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர்,

உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர் பற்றிய வரலாற்றைக் கூறியுள்ளார். மேலும், சைவசித்தாந்தம் என்பது தமிழர்களின் கடவுள் கொள்கை என்றும் இது ஆரியர்களின் சிவக்கோட்பாட்டுடன் சேர்ந்தது அல்ல என்றும் கூறியுள்ளார். ஆரியர்களின் கோட்பாட்டின் படி சிவன் அழிக்கும் கடவுளாகக் காட்டப்பட்டுள்ளான். ஆனால் சைவ சித்தாந்தம் ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், வீடுபேறு என்னும் ஐந்தொழில் புரிபவனாகச் சிவனைக் காட்டுகிறது என்கிறார்.

உரையாசிரியர்கள் என்னும் மூன்றாம் பிரிவில் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் ஆகியோர் அறிமுகம் செய்யப் பட்டுள்ளனர்.

பரணி என்னும் நான்காம் பிரிவில் ஜெயங்கொண்டான், கூத்தன் கவிச்சக்கரவர்த்தி, தண்டி ஆசிரியர் ஆகியோர் விளக்கப் பட்டுள்ளனர்.

பதினெண் சித்தர்கள் என்னும் ஐந்தாம் பிரிவில் பதினெட்டுச் சித்தர்களும் பிற சித்தர்களும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் எண்வகைச் சித்திகளை விளக்கியதுடன் சித்தர்களின் பெயர்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. முதலில் புகழ்பெற்ற ஒன்பது சித்தர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1. சத்தியநாதர்
2. சகோதநாதர்
3. ஆதி நாதர்
4. அனாதிநாதர்
5. வகுலி நாதர்
6. மதங்க நாதர்
7. மச்சேந்திர நாதர்
8. கடேந்திர நாதர்
9. கோரக்க நாதர்

மேலே குறிப்பிட்ட சித்தர்கள் தவிர பிற சித்தர்களையும் பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

1. கரூர் சித்தர்
2. புலிப்பாணி சித்தர்
3. பாம்பாட்டி சித்தர்
4. குதம்பை சித்தர்
5. அகப்பேய் சித்தர்
6. அகத்தியர்
7. புலஸ்தியார்
8. தேரையர்
9. யுகி முனி
10. மச்சமுனி
11. சட்டை முனி
12. நந்திமூலர்
13. சண்டிகேசர்
14. இடைக்காடர்

15. கபிலர்
16. புசுண்டை முனி
17. ரோமரிஷி
18. போகர்

என்று இவர்களைப் புகழ்பெற்ற சித்தர்கள் என்றும் பழங்காலச் சித்தர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மடங்களின் காலம்

மடங்களின் காலம் என்னும் ஐந்தாம் பகுதியைப் பூரணலிங்கம் பிள்ளை பதின்மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்.

முதல் பிரிவில் காளமேகம், அதிமதுர கவி, இரட்டைப் புலவர்கள் ஆகியோர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர்.

காளமேகப் புலவரின் இயற்பெயர் வரதன் என்பதையும் வைணவ மரபைச் சேர்ந்த இவர் திருவரங்கத்தில் உள்ள மடப்பள்ளியில் சமையல்காரராகப் பணிபுரிந்தார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார். மோகனாங்கி என்னும் தாசியின்மேல் கொண்ட ஆசையால் சைவராக மாறித் திருவானைக்காவில் சமையல்காரராகப் பணியாற்றியுள்ளார். சரசுவதியின் அருளால் கவி புனையும் ஆற்றலைப் பெற்றுள்ளார் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதிமதுரகவி என்னும் புலவரும் காளமேகத்தின் காலத்தில் வாழ்ந்தவர். திருமலைராயன் என்னும் மன்னனின் அவைக்கள தலைமைப் புலவராக இருந்தார்.

அவர் ஒரு முறை தமது பரிவாரத்துடன் பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். பல்லக்கின் முன்னும் பின்னும் பலர், அதிமதுர கவியைப் போற்றிக் குரலெழுப்பிச் சென்றனர். அப்போது அவ்வழியே வந்த காளமேகப் புலவர் அதைக் கேட்டு வெறுப்படைந்தார். அந்தப் புலவரை இழிவுபடுத்தும் வகையில் பாடினார். அரண்மனைக்குச் சென்ற அதிமதுரகவி தமது ஏவலரிடம், 'அவர் யார்?' என்று அறிந்து வரச் செய்தார். வந்த தாம் யார் என்பதைக் காளமேகம் பாட்டாகவே எழுதி அனுப்பினார்.

'தூதைந்து நாழிகையிலாறு நாழிகை
தனிற் சொற்சந்த மாலை சொல்லத்
துகளாவந்தாதி ஏழு நாழிகைதனிற்
தொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்து நாழிகைதனில்
பரணி ஒருநாண் முழுதுமே

பாரகாவிய மெலா மோரிரு தினத்திலே
பகரக் கொடி கட்டினேன்
சீதஞ் செயுந் திங்கள் மரபினா னீடுபுகழ்
செய்யதிரு மலைராயன் முன்
சீறுமா றாகவேதாறுமா றுகள்
சொற்றிருட்டுக் கவிப் புலவரைக்
காதங் கறுத்துச் செருப்பிட்டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னொடு கொடிய
கடிவாளமிட்டேறு கவிகாளமேக நானே"

என்னும் அந்தப் பாடலைப் படித்ததும் அதிமதுர கவி கோபங் கொண்டார். காளமேகப் புலவரை, மன்னன் முன் அழைத்து வருமாறு ஏவலரிடம் கூறி அனுப்பினார். ஏவலர் அழைப்பை ஏற்றுக் காளமேகம் அவைக்கு வந்தார். அங்கே அதிமதுரகவிக்கும் காளமேகப் புலவருக்கும் கவிப்போர் நடைபெற்றது முதலான செய்திகளைப் பூரணலிங்கம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களில் குறிப்பிடத்தக்கவர் இரட்டையர் ஆவர். இரட்டையரில் மூத்தவர் முடவர்; இளையவர் குருடர். நெசவுத் தொழில் புரியும் குடும்பத்தில் பிறந்த இவர்கள் இருவரும் ஊர் ஊராகச் சென்று பாடினர். இளையவரின் தோளில் மூத்தவர் உட்கார்ந்து வழிகாட்டுவார். குருடராகிய இளையவர் அவரைச் சுமந்து கொண்டு செல்வார். ஒருமுறை புலவர்கள் இருவரும் திருவேங்கடேசன் என்னும் வள்ளல் ஒருவரைக் காணச் சென்றனர். புலவர்களுக்குப் பொருள் கொடுக்க அந்த வள்ளல் முற்பட்டார்., அதை அந்த வள்ளலின் சகோதரன் தடுத்தான். உடனே பார்வையற்ற புலவர்,

'தேன்மொழியம் வாயான் திருவேங்கடேசனுடன்
ஏன் பிறந்தான் இந்த இனியான் காண்'

என்று பாடினார். உடனே அதைத் தொடர்ந்து ஊனமுற்ற புலவர்,

- யான் சொல்லக் கேள்

'சீதேவியார் பிறந்த செய்ய திருப்பாற் கடலுள்
மூதேவி ஏன் பிறந்தாள் முன்'

என்று பாடி முடித்தார். இரட்டைப் புலவர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லவர்கள். எனவே, 'கலம்பகத்திற்கு இரட்டையர்' என்று

போற்றுகிறார்கள் என்பன முதலான செய்திகளைப் பூரணலிங்கம் பிள்ளை தெரிவித்துள்ளார். இந்தப் பிரிவில் தொல்காப்பிய தேவர் என்னும் புலவர் இயற்றிய திருப்பாதிரிப் புலியூர் கலம்பகத்தையும் அறிமுகம் செய்து அதை இரட்டைப் புலவர்கள் போற்றியதையும் குறிப்பிட்டுள்ளார்.

அரசராகவும் புலவராகவும் இருந்தவர்களை இரண்டாம் பிரிவில் அறிமுகம் செய்துள்ளார். சேது புராணம், திருப்பரங்கிரி புராணம் முதலியவற்றை எழுதியவர் நிரம்ப அழகிய தேசிகர். இவர் தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை பெற்றவர். மன்னராக இல்லை என்றாலும் மன்னராகவும் புலவராகவும் விளங்கியோருக்கு ஆசிரியராக இருந்துள்ளார். சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்கும் திருவருட்பயனுக்கும் இவர் உரை எழுதியுள்ளார். வேதாரண்யத்தில் பிறந்த இவர் மதுரையில் வாழ்ந்துள்ளார். இவரது காலம் பதினாறாம் நூற்றாண்டு. அதிவீரராம பாண்டியனும் வரதுங்க பாண்டியனும் இவரது மாணவர்கள் ஆவர்.

கொற்கையையும் பின் தென்காசியையும் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் அதிவீரராம பாண்டியன். சந்திர குலத்தைச் சேர்ந்த இவர் சீவக சிந்தாமணியிலும் கம்பராமாயணத்திலும் நன்கு தோய்ந்தவர். நைடதம், காசி காண்டம், இலிங்க புராணம், கூர்ம புராணம் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். மேலும் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி வெற்றி வேற்கை போன்ற நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

அதிவீரராம பாண்டியனின் அண்ணன் வரதுங்க பாண்டியன் பிரமோத்ர காண்டம், கொக்கோகம் முதலான நூல்களை எழுதியுள்ளார். பிரமோத்ர காண்டம் என்பது ஐந்தெழுத்து மந்திரத்தின் பெருமையை விளக்கும் கொக்கோகம் நூலாகும். கொக்கோகன் என்பவர் வடமொழியில் எழுதிய நூலைத் தழுவியது.

வில்லிபுத்தூராரும் அருணகிரிநாதரும் மூன்றாம் பிரிவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர்.

வில்லிபுத்தூரார், திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தவர். இவரது தந்தையார் வீரராகவாச்சாரியார்; மகன் வரந்தருவார். வில்லிபுத்தூரார் அவரது பாரதம் என்னும் நூலின்மூலம் பெரும்புகழ் பெற்றார். இந்நூலில் பல வடமொழிச் சொற்களையும் சந்தங்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார்.

'மாதவ யாதவ வாசவ கேசவ' என்பது போன்ற சந்த நயமிக்க வடசொற்களைப் பாரதத்தின் பல பகுதிகளில் காண இயலும் என்று பூரணலிங்கம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

வில்லிபுத்தூராரின் காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவர், அருணகிரிநாதர். அருணகிரிநாதருக்கும் வில்லிபுத்தூராருக்கும் இலக்கியப் போட்டி ஏற்பட்டது. இருவரில் யார் சிறந்த உரையாசிரியர் என்பதை முடிவு செய்வதற்கு, 'இருவரும் ஒவ்வோர் அந்தாதி எழுத வேண்டும்; ஒருவர் எழுதும் அந்தாதியை மற்றவர் உரையுடன் விளக்க வேண்டும். யார் சரியாக விளக்குகிறாரோ அவரே வெற்றி பெற்றவர்' என்று தீர்மானித்தனர். அதன்படி வில்லிபுத்தூரார், அழகர் அந்தாதியை இயற்றினார். அதை அருணகிரிநாதர் எளிமையாக விளக்கினார். அருணகிரிநாதர் படைத்த கந்தர் அந்தாதியை வில்லிப்புத்தூராரால் எளிதில் விளக்க இயலவில்லை. அதில் உள்ள சந்தங்கள் அவ்வளவு கடுமையாக இருந்தன. தோல்வி அடைந்த ஆத்திரத்தில் அங்கிருந்து சென்று விட்டார் வில்லிபுத்தூரார்.

கந்தர் அந்தாதி தவிரவும் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருப்புகழ் முதலிய நூல்களையும் அருணகிரிநாதர் படைத்துள்ளார்.

பிற புலவர்கள் என்னும் நான்காம் பிரிவில் ஆறு புலவர்களைப் பூரணலிங்கம் பிள்ளை அறிமுகம் செய்துள்ளார். அவர்களுள் முதலில் இடம்பெறுபவர் பரஞ்சோதி. பரஞ்சோதி முனிவர் ஆதி சைவர் குலத்தில் வேதாரண்யத்தில் தோன்றியவர். வடமொழியிலும் தமிழிலும் புலமை பெற்ற இவர் மதுரை மடத்தின் தம்பிரானாக இருந்தார். வேதாரணிய மான்மியம் என்னும் நூலை இவர் வேதாரணிய புராணம் என்று தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் இவர், ஸ்கந்தம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் திருவிளையாடல் என்று படைத்துள்ளார். சிவனின் திருவிளையாடல்களை விளக்கும் இந்நூல் நான்கு காண்டங்களையும் அறுபத்தெட்டுப் படலங்களையும் 3363 பாடல்களையும் கொண்டது. ஒவ்வொரு படலம் பற்றிய செய்திகளையும் பூரணலிங்கம் பிள்ளை சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

துறையூரில் தோன்றிய பொய்யாமொழி புலவர், சிவனருளால் புலமை பெற்றவர். இவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவை மிகவும் புகழ்பெற்றது ஆகும். நாற்கவிராச நம்பி இயற்றிய நம்பி அகப்பொருள் விளக்க நூலுக்கு உரிய இலக்கியமாக இது திகழ்கிறது. சொக்கப்ப நாவலர் என்னும் புலவர் இவரைப் புகழ்ந்து,

பொதியி லகத்தியனாய்ப் பொய்யா மொழியாய்ச்
சிதைவில் புலவர் சிகாமணியாய்த் துதிசேரும்
செங்காட்டங் கோட்டத் துறையூரெனுந் தலத்திற்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்

என்று பாடியுள்ளார்.

சோழநாட்டில் சீநக்கன் என்பவர் அமைச்சராய் இருந்தார். அவரும் பொய்யாமொழி புலவரும் நண்பர்கள். இருவரும் இலக்கியங்கள் பற்றி உரையாடுவது வழக்கம்.

சீநக்கனுடன் அவனது மனைவியும் உடன்கட்டை ஏறினாள் என்னும் கருத்துப்படப் பின்வரும் பாடலைப் பொய்யாமொழி பாடியுள்ளார்.

அன்றுநீ செல்லக் கிடவென்ற ஆயிழையோ
டின்று நீ வானுலக மேறினாய் – மன்றல் கமழ்
மானொக்கும் வேல்விழியார் மாரனே கண்டியூர்ச்
சீநக்கா செல்லக்கிட

என்னும் பாடல்தான் அது.

பொய்யாமொழிப் புலவர் பாண்டிய நாட்டிற்குச் சென்றிருக்கும் போது முருகனுடன் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாக அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார்.

முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே

என்று அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இந்தப் பாடல் வரிகளில் முரட்டுப் புலவர் என்று குறிக்கப்பட்டிருப்பவர் பொய்யாமொழி புலவர் தாம்.

பொய்யாமொழி புலவர் காட்டு வழியே போய்க் கொண்டிருக்கும் போது வேட்டுவன் வடிவில் முருகன் தோன்றி, 'முட்டை' என்ற சொல் கொண்டு ஒரு பாடல் பாடுமாறு கேட்டுக் கொண்டான். பொய்யாமொழிப் புலவர் உடனே பின்வரும் பாடலைப் பாடினார்.

பொன்போலும் கள்ளிப் பொறி பறக்குங் கானலிலே
என்பேதை செல்லற்கியைந்தனளே மின்போலும்

மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு

என்பது அந்தப் பாடல். இந்தப் பாடலைக் கேட்டதும் முருகன்,

விழுந்த துளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர் சுடுமென்றேங்கிச் செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினாள்
பொய்யாமொழிப் பகைஞர் போல்

என்ற பாடலை உடனே பாடினார்.

அரிச்சந்திரபுராணத்தை இயற்றிய வீரகவிராயரும் இதே காலகட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். திருநெல்வேலியில் உள்ள நல்லூரில் தோன்றிய இவர் அரிச்சந்திரபுராணத்தை 12 காண்டங்களாகப் படைத்துள்ளார்.

மண்டல புருடர் என்பார் சூடாமணி நிகண்டைப் படைத்தார். இவர் கிருஷ்ணதேவராயரின் காலத்தைச் சேர்ந்தவர்.

அரசகேசரி என்பவர் வடமொழியும் தமிழும் நன்கு அறிந்தவர். இவர் காளிதாசர் இயற்றிய ரகுவம்சம் என்னும் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ஆழ்வார் திருநகரியிலுள்ள அஷ்டாவதானம் ராமானுஜ கவிராயரின் மகனான இவர் யாழ்ப்பாணத்தை ஆண்ட பர ராஜசேகரன் காலத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

வீரராகவ முதலியார் என்பவர் பார்வையற்ற புலவர். செங்கல்பட்டில் பிறந்த இவர் பல ஊர்களுக்கும் சென்று பாடல்கள் பாடியுள்ளார். கழுக்குன்ற புராணம், கழுக்குன்ற மாலை, செய்யூர் பிள்ளைத்தமிழ் முதலியவை இவர் பாடிய நூல்கள் ஆகும்.

ஐந்தாம் பிரிவில் திருவாவடுதுறை மடம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. தமிழ்க் கல்விக்கும் தமிழ் வழிப்பட்ட சமயத்திற்கும் என்று தோன்றிய முதல் சைவத் திருமடம் இது ஆகும். இம்மடத்தின் தம்பிரானாக விளங்கிய நமச்சிவாய தேசிகர் என்பவர், அருள் நந்திசிவாச்சாரியார் இயற்றிய இருபா இருபஃது, உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய வினா வெண்பா ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். மறைஞான தேசிகர், தட்சிணாமூர்த்தி, அம்பலவாண தேசிகர் ஆகியோருக்கு மெய்கண்ட சாத்திரத்தைப் போதித்துள்ளார்; தசகாரியம் என்னும் நூலையும் படைத்துள்ளார்.

நமச்சிவாய தேசிகரின் மாணவரான தட்சிணாமூர்த்தி என்பவர் தசகாரியம், உபதேச பஃறொடை ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

நமச்சிவாய தேசிகரின் மாணவரான அம்பலவாண தேசிகர் பத்து நூல்கள் படைத்துள்ளார். அவை,

1. தசகாரியம்
2. சன்மார்க்க சித்தியார்
3. சிவாச்சிரமத் தெளிவு
4. சித்தாந்த பஃறொடை
5. சித்தாந்த சிகாமணி
6. உபய நிஷ்டை வெண்பா
7. உபதேச வெண்பா
8. நிஷ்டை விளக்கம்
9. அதிசய மாலை
10. நமச்சிவாய மாலை

என்பவை ஆகும்.

உலகுடைய நாயனார் என்பவர் அம்பலவாண தேசிகரின் மாணவர். இவர் தமது ஆசிரியரைப் போற்றி, பூப்பிள்ளை அட்டவணை என்னும் பெயரில் பத்துத் திருவிருத்தங்கள் பாடியுள்ளார்.

ஈசான தேசிகர் என்று போற்றப்படும் சுவாமிநாததேசிகர், அம்பலவாண தேசிகரின் மாணவர் ஆவார். மயிலேறும் பிள்ளையிடம் தமிழ் கற்ற இவர் கல்லாடம், தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார். கனகசபாபதி ஐயர் என்பாரிடம் வடமொழி கற்ற இவர் தமிழ், வடமொழி ஆகியவற்றில் புலமையுடன் விளங்கினார். இவர் இயற்றிய இலக்கணக் கொத்து என்னும் நூல் சிறப்புப் பெற்றது ஆகும். இவர் தசகாரியம், திருச்செந்தில் கலம்பகம் ஆகிய நூல்களையும் படைத்துள்ளார்.

சுவாமிநாத தேசிகரின் மாணவர் சங்கர நமச்சிவாயர் ஆவார். இவர், பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலுக்கு உரை எழுதியுள்ளார்.

வேலப்ப தேசிகர் என்னும் பெயரில் இரண்டு புலவர்கள் வாழ்ந்துள்ளனர். ஒருவர் திருவாவடுதுறை ஆதீனத்தின் தலைவர். இன்னொருவர் துணைத் தலைவர். தலைவராக இருந்த வேலப்ப தேசிகர் பறியலூர் புராணம் பாடியுள்ளார். துணைத் தலைவராய் இருந்த வேலப்ப தேசிகர் பஞ்சாக்கர பஃறொடை என்னும் நூலை இயற்றியுள்ளார்.

இரண்டாம் வேலப்ப தேசிகரின் மாணவர் சிவஞான முனிவர் ஆவார். திருநெல்வேலியில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்த இவர், ஆனந்தக் கூத்தர் - மயிலம்மை ஆகியோரின் மகன். தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் புலமை பெற்ற இவர், சிவஞான சித்தியாருக்கு உரை எழுதியுள்ளார். தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி, தாருக சங்கிரகம், புத்தம் புத்துரை (சங்கரநமச்சிவாயர் நன்னூல் உரைக்கு) காஞ்சி புராணம் (முதல் காண்டம்), சோமேசர் முதுமொழி வெண்பா, திராவிட மகாபாஷ்யம் முதலான நூல்களை எழுதியுள்ளார்.

கச்சியப்ப முனிவரும், சிதம்பரநாத முனிவரும் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரும் சோமசுந்தரம் பிள்ளையும் சிவஞான முனிவரின் மாணவர்களில் புகழ்பெற்றோர் ஆவர். திருத்தணியில் தோன்றிய கச்சியப்ப முனிவர் விநாயகபுராணம், விநாயகர் பிள்ளைத் தமிழ், ருத்ரேசர் வண்டுவிடு தூது, பதிற்றுப்பத்து அந்தாதி, பஞ்சாக்கர அந்தாதி, தணிகை புராணம் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

சிதம்பரநாத முனிவர் திருப்பாதிரிப்புலியூர் புராணம் இயற்றியுள்ளார்.

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் துறைசைக் கோவை, கலைசைக் கோவை, பஞ்சரத்தின மாலை, சித்திரசபை விருத்தம், திருத்தணிகை விருத்தம், சுப்பிரமணியர் திருவிருத்தம் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம்பிள்ளை திருக்கழுக்குன்றக் கோவை என்னும் நூலை இயற்றியுள்ளார்.

ஆறாம் பிரிவில் தருமபுர ஆதினம் ஆற்றிய பணிகள் விளக்கப்பட்டுள்ளன. தருமபுர ஆதினத்தைச் சேர்ந்த குமரகுருபரர் திருவைகுண்டத்தில் பிறந்தவர். இளமையில் வாய்பேசாமல் இருந்த இவர் திருச்செந்தூர் முருகன் அருளால் பேசினார். திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த இவர் தருமபுர ஆதினத்தின் மாசிலாமணி தேசிகரின் மாணவர் ஆவார். கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, பண்டார மும்மணிக் கோவை முதலான நூல்களை இவர் படைத்துள்ளார். வடநாட்டிற்குத் தலயாத்திரையாகச் சென்ற இவர் டில்லி பாதுஷாவைச் சந்தித்துள்ளார். வாரணாசியில் ஒரு மடமும் கோயிலும் அமைத்துள்ளார். மேலும் இவர்

முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, நீதிநெறிவிளக்கம், மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம் முதலான நூல்களையும் எழுதியுள்ளார்.

இதே காலகட்டத்தில் வாழ்ந்தவர் வெள்ளி அம்பலத் தம்பிரான். இவரது பாடல்களை 'வெள்ளை' என்றும் எளிமையானவை என்றும் கூறுவர்.

சம்பந்தசரணாலயசுவாமி என்பவர் கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணத்திற்குச் சுருக்கம் இயற்றியுள்ளார்.

வைத்தியநாத நாவலர் என்பவர் திருவாரூரில் உள்ள சிவாச்சாரியார் குடும்பத்தில் தோன்றியவர். இலக்கணக் கொத்து இயற்றிய சுவாமிநாத தேசிகரின் நண்பராகிய இவர் இலக்கண விளக்கம் என்னும் நூலைப் படைத்துள்ளார்.

தருமை ஆதீனத் தம்பிரானாக விளங்கிய ஆறுமுகத் தம்பிரான் 1836ஆம் ஆண்டு கிறித்தவராக மதம் மாறி விட்டார். அஞ்ஞானக் கும்மி என்னும் நூலை இவர் படைத்துள்ளார்.

திருவண்ணாமலை மடம் என்னும் ஏழாவது பிரிவில் குகை நமச்சிவாயர், ஆறுமுகசாமி, சிவஞானசுவாமி ஆகியோர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர்.

குகை நமச்சிவாயர், திருவண்ணாமலைக்குச் சென்று ஒரு குகையில் வசித்து வந்தார். அருணகிரி அந்தாதி என்னும் நூலை இவர் படைத்துள்ளார்.

குகை நமச்சிவாயரின் மாணவர் ஆறுமுகசாமி ஆவார். இவர் நிஷ்டானுபூதி என்னும் நூலை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்கு இவர் உரை வரைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த சிவஞானசாமி இளமையிலேயே இந்தியாவிற்கு வந்து சிதம்பரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகா முதலிய நூல்களை வடமொழியில் எழுதியுள்ளார். இவரும் சிவஞான சித்தியாரின் சுபக்கத்திற்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

ஒன்பதாம் பிரிவில் துறைமங்கல மடம் பற்றிய செய்திகள் உள்ளன. சைவ மடமாகிய இதில் சிவப்பிரகாசர், கருணைப்பிரகாசர்,

வேலையதேசிகர் ஆகியோர் பாடல்கள் இயற்றியோர் ஆவர். இவர்கள் மூவரும் குமாரசாமி பண்டாரம் என்பவரின் மகன்கள் ஆவர். வீரசைவம் என்பது வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவை போல் பழமையானது. இதைப் பசவேஸ்வரா என்பவர் மேம்படுத்தினார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் இயற்பகை, சிறுத்தொண்டர், கணநாதர், மூர்க்கர், இடங்குடி, இளையான்குடி, சண்டீஸ்வரர், திருமூலர் முதலியோர் வீரசைவர்கள் ஆவர். எனவே வீரசைவம் தமிழ்நாட்டில் இருந்த பழமையான மதம் ஆகும்.

சிவப்பிரகாசர், பொம்மபாளையத்தைச் சேர்ந்த பாலைய சுவாமிகளின் மாணவர். மாணவனாய் இருக்கும் போதே தந்தை இறந்துவிட்டதால் இவர் தமது தாய், சகோதரர்களுடன் திருவண்ணாமலைக்குச் சென்று விட்டார். பின்னர்த் திருநெல்வேலியின்கண் உள்ள சிந்துபூந்துறையில் உள்ள வெள்ளி அம்பலத் தம்பிரானிடம் கல்வி கற்கச் சென்றார். கல்விக்காகக் காணிக்கை எதையும் ஏற்காத தம்பிரான் அவரது எதிரிப் புலவரை வென்று அடிமையாக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி நிரோட்டக யமக அந்தாதி பாடிச் சிவப்பிரகாசர் வென்றார். மேலும்,

பிரபுலிங்க லீலை	வெங்கைக் கோவை
திருக்கூவ புராணம்	வெங்கை அலங்காரம்
சித்தாந்த சிகாமணி	துறைசைக் கோவை
வேதாந்த சூடாமணி	பிச்சாடனர் நவமணி மாலை
சிவப்பிரகாச வியாசம்	பெரிய நாயகி கலித்துறை
சிவநாம மகிமை	திருச்செந்தில் அந்தாதி
தர்க்க பரிபாஷை	சதமணி மாலை
சோண சைல மாலை	நிரஞ்சன மாலை
வெங்கைக் கலம்பகம்	நால்வர் நான்மணி மாலை
வெங்கை உலா	அபிஷேக மாலை
கைத்தல மாலை	இஷ்டலிங்க விருத்தம்
நன்னெறி	

முதலிய நூல்களைப் படைத்துள்ளார். சிவப்பிரகாசர் தமது முப்பத்திரண்டாம் வயதில் மறைந்தார்.

வேலைய தேசிகர், வெள்ளிஅம்பலத்தம்பிரானின் மாணவர். இவர் காளத்திப் புராணம், நல்லூர்ப் புராணம், வீரசிங்காதன புராணம், இஷ்டலிங்க கைத்தலமாலை, நமச்சிவாய மாலை, மயிலத்து இரட்டை மாலை, பாரிசாத லீலை முதலிய நூல்களைப்

படைத்துள்ளார். இவரும் தமது முப்பத்திரண்டாம் வயதில் மறைந்தார்.

கருணைப்பிரகாசர் தாம் காளத்திப் புராணத்தைத் தொடங்கி எழுதியவர். இவரும் வெள்ளியம்பல தம்பிரானின் மாணவர். இவர் இஷ்டலிங்க அகவல் என்னும் நூலைப் படைத்துள்ளார். இவர் தமது பதினெட்டாம் வயதில் மறைந்தார்.

பத்தாம் பிரிவில் நான்கு இறைஞானிகளைப் பூரணலிங்கம் பிள்ளை அறிமுகம் செய்துள்ளார். முதலில் தத்துவராயர் தொடர்பானவை இடம்பெற்றுள்ளன. இவர் வீரை என்னும் ஊரில் பிராமணர் குலத்தில் தோன்றியவர். தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். இவர் தம்மையொத்த மாணவர் சொரூபானந்தருடன் சிறந்த ஆசிரியரைத் தேடினார். சொரூபானந்தர் தென்பகுதிக்குச் சென்று தேடிச் சிவப்பிரகாசரை ஆசிரியராகக் கொண்டார். ஆசிரியரைத் தேடி வடபகுதிக்குச் சென்ற தத்துவராயருக்குச் சிறந்த ஆசிரியர் கிடைக்கவில்லை; திரும்பி வந்து தமது நண்பரையே ஆசிரியராகக் கொண்டார். இவர்,

சிவப்பிரகாசர் வெண்பா	புகழ்ச்சி மாலை
சின்னப்பூ வெண்பா	மும்மணிக் கோவை
அமிர்தசார வெண்பா	ஞானவிநோதக் கலம்பகம்
வெண்பா அந்தாதி	அஞ்ஞை வதைப் பரணி
கலித்துறை அந்தாதி	மோகவதைப் பரணி
இரட்டைமணி மாலை	கலி மடல்
நான்மணி மாலை	உலா
திருவடி மாலை	சிலேடை உலா
திருஅருட்கலன் மாலை	நெஞ்சு விடு தூது
போற்றி மாலை	திருத் தாலாட்டு

முதலிய நூல்களைப் படைத்துள்ளார். தசாங்கம், பெருந்திரட்டு, குறுந்திரட்டு, ஈஸ்வர கீதை, பிரம்ம கீதை முதலான பிற நூல்களையும் எழுதியுள்ளார்.

கேடிலியப்ப பிள்ளை என்பவருக்குத் தாயுமானவ சுவாமிகளின் அருளால் பிறந்தவர் தாயுமானவர். இவர் திருச்சியை ஆண்ட விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் மேலாளராகப் பணியாற்றினார். மன்னர் இறந்ததும் அவரது மனைவி, தாயுமானவரை மறுமணம் செய்து கொள்ள விரும்பினார். அதை விரும்பாத தாயுமானவர் அங்கிருந்து சென்றுவிட்டார். தமது

தமையனாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மணவாழ்க்கையில் ஈடுபட்டார். கனக சபாபதிபிள்ளை என்னும் மகனைப் பெற்றெடுத்த பின் அவரது மனைவி மறைந்தார். அதன்பின் துறவற வாழ்க்கையை மேற்கொண்ட தாயுமானவர் பல ஊர்களுக்குச் சென்றார். இறுதியில் இராமநாதபுரத்தில் மறைந்தார். தாயுமானவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாள் கண்ணி, ஆனந்தக் களிப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை ஆகும்.

கண்ணுடைய வள்ளல் என்பவர் ஒழிவில் ஒடுக்கம் என்னும் நூலை எழுதியுள்ளார். மேலும் இவர் மாயா பிரலாபம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

சாந்தலிங்க தேசிகர் என்பவர் திருத்துறையூரில் உள்ள வீரசைவர். வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார், நெஞ்சு விடு தூது, கொலை மறுத்தல் முதலியவை இவரது படைப்புகள் ஆகும்.

பதினொன்றாம் பிரிவில் பதினேழாம் நூற்றாண்டிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த புலவர்களைப் பூரணலிங்கம் பிள்ளை அறிமுகம் செய்துள்ளார்.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் முதலாவதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். இவரது படைப்புகள் 'அஷ்டபிரபந்தம்' என்று அழைக்கப்படுகின்றன. மேலும் இவர் வேங்கடமாலை, ரெங்கநாயகர் ஊஞ்சல், திருநாமம் முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

எல்லப்ப நாவலர் மூன்று புராணங்களையும் ஒரு கலம்பகத்தையும் பாடியுள்ளார். அவை அருணாசல புராணம், செவ்வந்தி புராணம், திருவேங்கட புராணம், அருணைக் கலம்பகம் என்பவை ஆகும்.

ஹரிதாசர் என்பவர் இரு சமய விளக்கம் என்னும் நூலை இயற்றியுள்ளார்.

அபிராமிபட்டர் என்பவர் தமிழ், வடமொழி இரண்டிலும் புலமைபெற்றவர். இவர் அபிராமி அந்தாதி என்னும் நூலைப் படைத்துள்ளார். இவருக்கும் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னருக்கும் இடையே முழுநிலவை வரவழைப்பதற்காக நடைபெற்ற போட்டியையும் பூரணலிங்கம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

படிக்காசுப் புலவர் என்பவர் தென்களந்தை என்னும் ஊரில் பிறந்தவர். இவர் இரகுநாத சேதுபதியின் அரசவைக் கவிஞராக விளங்கினார். இவர் தொண்டை மண்டல சதகம், வேலூர் கலம்பகம், தண்டலையார் சதகம் முதலிய நூல்களைப் பாடியுள்ளார்.

எட்டையபுரத்தின் அரசவைப் புலவராக விளங்கியவர் கடிகை முத்துப் புலவர். இவர் சமுத்திர விலாசம், திக்கு விஜயம், திருவிடை மருதூர் அந்தாதி முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

காளிமுத்து என்னும் பெண்புலவர் எழுதியது வருணகுல ஆதித்தன் மடல் ஆகும்.

இராசப்பக் கவிராயர் என்பவர் திருநெல்வேலியில் உள்ள மேலகரத்தைச் சேர்ந்தவர். சுப்பிரமணிய தேசிகர் என்பாரிடம் கல்வி பயின்ற இவர் குற்றாலத் தலபுராணம், குற்றாலக் குறவஞ்சி முதலிய நூல்களைப் படைத்துள்ளார். மேலும் இவர்,

குற்றால மாலை
குற்றாலச் சிலேடை வெண்பா
யமக அந்தாதி
குற்றால உலா
குற்றாலப் பரம்பொருள் மாலை
குற்றாலக் கோவை
குற்றால ஊடல்
குற்றாலக் குழல்வாய்மொழி கலிப்பா
குற்றாலக் கோமள மாலை
குற்றால வெண்பா அந்தாதி
குற்றாலப் பிள்ளைத் தமிழ்
குற்றால நன்னகர் வெண்பா

முதலிய நூல்களையும் படைத்துள்ளார். இவை ஓலைச் சுவடியாகவே உள்ளன என்று பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

வடமலையப்ப பிள்ளை என்பவர் திருநெல்வேலியில் உள்ள நிலக்கிழார். இவர் மச்சபுராணம், அநுக்கிரக மணி, வடமலை வெண்பா முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

அருணாசலக் கவிராயர் என்பவர் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளைக் கற்றவர். அசோமுகி நாடகம், சீகாழிக் கோவை,

சீகாழிப் புராணம், ஹனுமார் பிள்ளைத் தமிழ், இராம நாடகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

இதர புலவர்கள் என்னும் பன்னிரண்டாம் பிரிவில் ஐம்பத்தேழு புலவர்களைப் பூரணலிங்கம் பிள்ளை அறிமுகம் செய்துள்ளார். அவர்களின் பெயர்களும் படைப்புகளும் பின்வருமாறு:

1. அஷ்டாவதானியார் - விறலி விடு தூது
2. ஆண்டி புலவர் - ஆசிரிய நிகண்டு
3. ஆர்யப் புலவர் - பாகவத புராணம் (மொழி பெயர்ப்பு)
4. ஆளவந்தார் - ஞானவாசிட்டம் (மொழி பெயர்ப்பு)
5. இராம பாரதி - ஆத்திச்சூடி வெண்பா
6. இரேவணாத்தியார் - இரேவணாத்தியார் சூத்திரம்
7. உபேந்திராசிரியர் - சிநேந்திர மாலை
8. உலகநாதன் - உலக நீதி, ஜாதி பேத விளக்கம்
9. கடவுள் மாமுனிவர் - வாதவூரர் புராணம்
10. கணபதிதாசர் - நெஞ்சறி விளக்கம்
11. கந்தப்ப ஐயர் - மாலை வெண்பா, சிலேடை வெண்பா, தயாநிதி மாலை, அபிஷேக மாலை, உலா, கலம்பகம், வெண்பா அந்தாதி, பிள்ளைத்தமிழ், தல புராணம், பழமலை அந்தாதி உரை, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி உரை, வேலாயுத சதகம், வேல் பத்து, முருகன் தாலாட்டு
12. கவிராஜ பண்டிதர் - சௌந்தர்ய லகரி (மொழி பெயர்ப்பு)
13. குமரகுருபர தேசிகர் - ஆத்ம ராமாயணம், ஞானக் குறவஞ்சி
14. குமார சுவாமி தேசிகர் - குமார சுவாமியம்
15. குருபாத தாசர் - குமரேச சதகம்
16. சந்தக் கவிராயர் - இரங்கேசர் வெண்பா

17.	சாந்தலிங்கக் கவிராயர்	-	தண்டலையார் சதகம்
18.	சிவாக்கிர யோகியார்	-	சித்தாந்த தீபிகை, வேதாந்த தீபிகை, தத்துவ தரிசனம்
19.	ஞானக் கூத்தர்	-	விருத்தாசல புராணம்
20.	தாண்டவராய மூர்த்தி (தாண்டவராய சுவாமி)	-	கைவல்ய நவநீதம்
21.	தேவராய சுவாமி	-	கந்த சஷ்டி கவசம்
22.	நாராயண தாசர்	-	நாராயண சதகம்
23.	நாராயண பாரதி	-	திருவேங்கட சதகம்
24.	பிள்ளை லோகாச்சாரியார்	-	அந்தாதிகள், மாலைகள், ஒரு கலம்பகம்
25.	மாரிமுத்து பிள்ளை	-	புலியூர் வெண்பா, சிதம்பரேசுவரர் விறலி விடுதூது
26.	மணவாள மாமுனி	-	ஆர்த்தி பிரபந்தம், உபதேச ரத்தின மாலை, திருவாய் மொழி நூற்றுஅந்தாதி
27.	மீகாமன்	-	அறிவானந்த சித்தி
28.	முத்தாநந்த சுவாமி	-	மதி உள்ளான்
29.	வென்றிமாலை கவிராயர்	-	திருச்செந்தூர்த் தலபுராணம்
30.	பலபட்டடை சொக்கநாதபிள்ளை	-	தேவை உலா, விஞ்சைக் கோவை
31.	சக்கரை புலவர்	-	திருச்செந்தூர்க் கோவை, வண்டுவனப் பெருமாள் ஊசல், மிழலைச் சதகம், திருவாடானை சித்திரகவி மஞ்சரி
32.	சக்கரை அருணாச்சல புலவர்	-	பொன்பற்றிச் செல்வி அம்மை ஊசல்
33.	சீனிப்புலவர்	-	திருச்செந்தூர்ப் பரணி, துறைசைக் கலம்பகம்
34.	சக்கரை முத்துக் கருப்பப் புலவர்	-	வைரவ பதிகம்

35.	சாந்து புலவர்	-	மயூரகிரி கோவை
36.	சவ்வாது புலவர்	-	இராஜராஜேஸ்வரி பஞ்சரத்தினம்
37.	அவிரோதிநாதர்	-	திருநூற்று அந்தாதி
38.	திருமுனைப் பாடியார்	-	அறநெறிச் சாரம்
39.	நாற்கவிராச நம்பி	-	நம்பி அகப்பொருள்
40.	உதீசிதேவர்	-	திருக்கலம்பகம்
41.	அருமருந்து தேசிகர்	-	அரும்பொருள் விளக்கம்
42.	ரேவண சித்தர்	-	அகராதி நிகண்டு, சிவஞான தீபம், பட்டீச்சுர புராணம்
43.	கூழங்கைத் தம்பிரான்	-	சித்தி விநாயகர் திருஇரட்டை மணிமாலை
44.	கவிராஜ பிள்ளை	-	காளத்திநாதர் உலா, அண்ணா மலையார் வண்ணம், செய்யூர் முருகன் உலா, வாள்போக்கி நாதர் உலா
45.	அழகிய சிற்றம்பலக் கவிராயர்	-	தளசிங்க மாலை
46.	மங்கைபாகக் கவிராயர்	-	கொடுங்குன்ற புராணம்
47.	திருவேங்கடநாதர்	-	பணவிடு தூது, பிரபோத சந்திரோதயம்
48.	நெற்குன்றவாணர்	-	திருப்புகலூர் அந்தாதி
49.	பெரும்பற்றபுலியூர் நம்பி	-	திருவாலவாயார் திருவிளையாடல்
50.	நமச்சிவாயக் கவிராயர்	-	உலகுடை அம்மை அந்தாதி, சிங்கை சிலேடை அந்தாதி
51.	மீனாட்சி சுந்தரக் கவிராயர்	-	குவலயானந்தம் (மொழிபெயர்ப்பு)
52.	பெருமாள் கவிராயர்	-	மாறன் அலங்காரம், மாறன் அகப்பொருள், மாறன் கிளவிமணிமாலை, குருகூர் மான்மியம்
53.	தலைமலை கண்ட தேவர்	-	திருப்புடை மருதூர் யமக அந்தாதி

54. கந்தசாமி புலவர்	-	அப்பனூர் புராணம், பூவண புராணம், பூவண உலா
55. இராமச்சந்திர கவிராயர்	-	சகுந்தல விலாசம், பரத விலாசம், தாருக விலாசம்
56. ஆதிவராக கவி	-	காதம்பரி (மொழிபெயர்ப்பு)
57. அநதாரியப்பன்	-	சுந்தரபாண்டியம் (மொழி பெயர்ப்பு)

பதின்மூன்றாம் பிரிவில் இசுலாமியப் புலவர்களைப் பூரணலிங்கம்பிள்ளை அறிமுகம் செய்துள்ளார்.

1. சக்கரைப் புலவர்	-	மதீனத்தந்தாதி
2. சவ்வாது புலவர்	-	ஆண்டவர் பிள்ளைத் தமிழ்
3. வண்ணக்களஞ்சியப் புலவர் (முகம்மது இப்ராஹிம்)	-	முகைதீன் புராணம்
4. ஆலியார் புலவர் (முகம்மது ஹூசைன்)	-	இந்திராயன் படைப்போர், இபுனியன் படைப்போர், பெண் புத்தி மாலை
5. நயினா முகம்மது புலவர்	-	முன்கிரின் மாலை
6. மதாரு சாஹிப் புலவர்	-	மிகிராஜ் நாமா
7. உமறுப் புலவர்	-	சீறாப் புராணம்
8. மஸ்தான் சாஹிப்	-	மஸ்தான் சாஹிப் பாடல்கள், அகத்தீசர் சதகம், நந்தீசர் சதகம்
9. குலாம் காதிர் புலவர்	-	புலவராற்றுப்படை

ஐரோப்பியர்களின் காலம்

ஐரோப்பியர்களின் காலம் என்னும் ஆறாம் பிரிவில் ஆறு பிரிவுகள் உள்ளன. இக்கால அறிமுகத்தில் சீகன்பால்குவை அறிமுகம் செய்துள்ளார். டென்மார்க்கிலிருந்து தரங்கம்பாடிக்கு வந்த இவர் டேனிஷ் மிஷனை நிறுவினார். தமிழ் இலக்கணம், தமிழ் பைபிள் ஆகியவை இவரது படைப்புகள். இவர் தரங்கம்பாடியில் 1719இல் மறைந்தார்.

இராபர்ட்-டி-நொபிலி என்பவர் ஒரு நூற்றாண்டுக்கு முன் கோவாவுக்கு வந்து சேர்ந்தார். பிராமணர்களைப் போல உடை

அணிந்த இவரைத் தத்துவ போதக சுவாமிகள் என்று அழைத்தனர் இவர் ஒரு லட்சம் பேரைக் கிறித்தவர்களாக மாற்றினார்.

வீரமாமுனிவர் என்று அழைக்கப்படும் கான்ஸ்டான் டியுஸ் பெஸ்கி 1708ஆம் ஆண்டு கோவாவுக்கு வந்தார். இந்து மதத் துறவி போல் உடையணிந்து இவர் தொண்டாற்றினார். இவர் தேம்பாவணி, வேதியர் ஒழுக்கம், சதுரகராதி, தொன்னூல் விளக்கம், அவிவேக புராண குரு கதை (பரமார்த்த குரு கதை), திருக்காவலூர் கலம்பகம், வேத விளக்கம், அடைக்கல மாலை முதலான நூல்களைப் படைத்துள்ளார்.

ரேனியஸ் பாதிரியார் 1853ஆம் ஆண்டில் 'தமிழ் மொழி இலக்கணம்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். ஜி.யு. போப் போன்றவர்களின் தமிழார்வத்திற்கு இவர் காரணமாக விளங்கியுள்ளார்.

பழைய கொள்கை என்னும் முதல் பிரிவில் பதினாறு புலவர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒப்பிலாமணிப் புலவர் என்பவர் திருவாரூரைச் சேர்ந்தவர். இலக்கண விளக்கம் எழுதிய வைத்தியநாத தேசிகரின் மாணவராகிய இவர் சிவரகசியம் என்னும் நூலைப் படைத்தார்.

விசாகப் பெருமாள் ஐயர் என்பவர் கந்தப்ப ஐயரின் மகன். இவர் சென்னை மாநிலக் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர். இவர் பவணந்தியின் நன்னூலுக்குக் குறிப்புரை வரைந்துள்ளார். டாக்டர் வின்ஸ்லோவின் தமிழ்-ஆங்கிலம் அகராதிப் பணிக்கு உதவியுள்ளார்.

சரவணப் பெருமாள் ஐயர் என்பவர் கந்தப்ப ஐயரின் இரண்டாம் மகன். இவர் 1830ஆம் ஆண்டில் திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் பதிப்பித்துள்ளார். நைடதத்திற்கு இவர் எழுதத் தொடங்கிய உரையை இவரது மகனான கந்தப்ப ஐயர் முடித்துள்ளார். நாலடியார், திருவிளையாடல் புராணம், திருவாசகம் முதலியவற்றைப் பதிப்பித்துள்ளார். மூதுரை, நல்வழி, நன்னெறி முதலியவற்றிற்கு உரை எழுதியுள்ளார். இயல் தமிழ்ச் சுருக்கம், அணியியல் விளக்கம், கோலதீபிகை, நான்மணி மாலை, களத்தூர்ப் புராணம் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

அனந்தபாரதி ஐயங்கார் என்பவர் உமையாள்புரத்தில் தோன்றியவர். இவர் தேசிக பிரபந்தம், மருதூர் வெண்பா, முப்பால் திரட்டு முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்பவர் ஆறுமுக நாவலர் காலத்தவர். இவரது மாணவர்கள் பலர் மாநிலக் கல்லூரியில் பணியாற்றியுள்ளனர். இவர் பதினாறு புராணங்கள், ஒன்பது பிள்ளைத்தமிழ் நூல்கள், பதினொரு அந்தாதிகள், இரண்டு கலம்பகங்கள், நான்கு மாலைகள், ஒரு கோவை, ஓர் உலா, ஒரு லீலை, ஒரு வெண்பா, ஒரு களிப்பு, காசி ரகசியம் முதலான 48 நூல்களைப் படைத்துள்ளார்.

இராமலிங்க சுவாமிகள் என்பாரின் பாடல்கள் அருட்பா என்னும் தொகுதியாக உள்ளன. இத்தொகுப்பில் மாலைகள், புராணங்கள், கும்மிகள், கண்ணிகள், பள்ளி எழுச்சிகள், ஆனந்தக் களிப்பு முதலான பாடல் வகைகள் உள்ளன.

ஆறுமுக நாவலர் என்பவர் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூரில் தோன்றியவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்ற இவர் பெர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ் கற்பித்தார். பைபிளைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் உதவியுள்ளார். இவர் சென்னையில் ஓர் அச்சுக் கூடத்தை நிறுவி 70 நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

மகாலிங்க ஐயர் என்பவர் தொல்காப்பியம் - நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்துள்ளார். இவர் அருணாச்சல புராணத்திற்கு உரை எழுதியுள்ளார். மேலும் 'போத வசனம்' என்னும் நூலையும் படைத்துள்ளார்.

வல்லூர் தேவராஜ பிள்ளை என்பவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். இவர் சூதசங்கிதை என்னும் நூலைத் தமிழில் இயற்றியதுடன் குசேலோபாக்கியானத்தையும் படைத்துள்ளார்.

சந்திரசேகர கவிராயர் என்பவர் இராமநாதபுரத்தின் அரசவைப் புலவர். இவர் துலுக்காணத்தம்மைப் பதிகம் முதலான நூல்களைப் படைத்துள்ளார்.

இராமானுஜ கவிராயர் என்பவர் நன்னூல் காண்டிகை உரை, பரிமேலழகர் விளக்கவுரை, பார்த்தசாரதி பாமாலை, வேங்கட அநுபூதி, வரதராஜ பெருமாள் பதிற்றுப்பத்து முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

ஆனந்தக் கூத்தர் என்பவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். சொர்ணமுகி (33 அத்தியாயம்) சூத சம்ஹிதை (10 அத்தியாயம்), வஷிஸ்டலிங்கா (12 அத்தியாயம்) முதலியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை என்பவர் இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூலை இயற்றியுள்ளார்.

சோமசுந்தர நாயகர் என்பவர் சைவ சமய விளக்கங்களை வழங்குவதற்கு நூற்றுப்பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

பகழிக்கூத்தர் என்பவர் வைணவர். இவர் சைவராக மாறி, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

வேதகிரி முதலியார் என்பவர் இராமானுஜ கவிராயர் மாணவர். இவர் நீதி சிந்தாமணி, மனுநீதி சதகம் முதலிய நூல்களைப் படைத்துள்ளார்.

புதிய கொள்கை என்னும் இரண்டாம் பிரிவில் முப்பதுக்கும் மேற்பட்ட புலவர்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களும் நூல்களும் பின்வருமாறு:

1. வேதநாயகம் பிள்ளை - பெண்மதி மாலை, நீதி நூல், சர்வ சமய சமரசக் கீர்த்தனை, பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி சரித்திரம்
2. ரங்கநாத முதலியார் - கச்சிக் கலம்பகம்
3. தாமோதரம் பிள்ளை - வீரசோழியம் (பதிப்பு), இறையனார் அகப்பொருள் (பதிப்பு), தொல்காப்பியம் (பதிப்பு), இலக்கண விளக்கம் (பதிப்பு), சூளாமணி (பதிப்பு).
4. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை - மனோன்மணீயம்
5. சேஷகிரி சாஸ்திரியார் - மொழிநூல் அறிஞர்
6. இராஜம் ஐயர் - கமலாம்பாள் சரித்திரம்
7. சரவணைப் பிள்ளை - மோகனாங்கி
8. பிரணாதிகார சிவா - தமயந்தி (நாடகம்), வியாச மஞ்சரி
9. சரசலோசன செட்டி - சரசாங்கி (நாடகம்)

10. சூரியநாராயண சாஸ்திரி - ரூபாவதி (நாடகம்), கலாவதி (நாடகம்), மானவிஜயம் (நாடகம்)

11. திருமயிலை சண்முகம் பிள்ளை - மணிமேகலை (பதிப்பு), திருமுல்லை வாயில் புராணம்

12. பூவை கலியாண சுந்தர முதலியார் - பாடல்கள் புனைந்துள்ளார்

13. ஜி.யூ. போப் - திருக்குறள் (பதிப்பு), நாலடியார், திருவாசகம் (மொழிபெயர்ப்பு)

14. தண்டபாணி சுவாமி - புலவர் புராணம், திருவரங்கத் திருவாயிரம்

15. ஏ.கே. அமிர்தம்பிள்ளை - பெண்மை நெறிவிளக்கம், தமிழ் விடு தூது

16. செல்வகேசவராய முதலியார் - கம்பர், திருவள்ளுவர், குசேலர், கண்ணகி கதை, பழமொழி (பதிப்பு)

17. பாண்டித்துரை தேவர் - சிவஞான சுவாமிகள், இரட்டை மணி மாலை, இராஜராஜேசுவரி பதிகம், சைவ மஞ்சரி, பன்னூல் திரட்டு

18. எம். தையல்பாகம்பிள்ளை - மடவார் விளக்கம், நெல்லை அந்தாதி முதலானவை

19. ஏ. சண்முகம்பிள்ளை - மாலை மாற்று மாலை, ஏகபாத நூற்றந்தாதி, இன்னிசை வெண்பா இருநூறு, நுண் பொருள் கோவை நிகண்டு

20. சபாபதி நாவலர் - திருச்சிற்றம்பல அந்தாதி, திருவிடை மருதூர் அந்தாதி, பதிற்றுப்பத்து அந்தாதி, சிதம்பர நாராயண மும்மணிக் கோவை முதலியவை.

21. கார்த்திகேய முதலியார் - மொழி நூல்

22. ஆறுமுக நயினார்பிள்ளை - நற்குடி வேளாளர் புராணம், மகா சைவர் புராணம்

23. கனகசபை பிள்ளை - ஆய்வுக் கட்டுரை எழுத்தாளர்

24. ஜே.எம். நல்லசாமிபிள்ளை - சிவஞானபோதம் (மொழி பெயர்ப்பு), திருவருட் பயன் (மொழிபெயர்ப்பு) முதலானவை

25. ஆழ்வாரப்பபிள்ளை - வள்ளியூர்த் தலபுராணம், வள்ளியூர்க் காவடி வைபவம்

26. டி. இலக்குமண பிள்ளை - செய்யுள் கோவை

27. ஜே. லாசரஸ் பாதிரியார் - நன்னூல் (மொழிபெயர்ப்பு) திருக்குறள் (மொழி பெயர்ப்பு) தமிழ்ப் பழமொழி அகராதி

28. விருதை சிவஞானயோகிகள் - வியாச சூத்திரம், யோக சூத்திரம், முடிசூட்டு வாழ்த்துப்பா

29. பண்டிட் சுவாமிநாத ஐயர் - சிந்தாமணி (பதிப்பு), சிலப்பதிகாரம் (பதி.), மணிமேகலை (பதி.), பத்துப்பாட்டு (பதி.), புறநானூறு (பதி.), பெருங்கதை (பதி.), புறப்பொருள் (பதி.), வெண்பாமாலை

30. வி.பி. சுப்பிரமணிய முதலியார் - அகலிகை வெண்பா, இழந்த சொர்க்கம் (மொழிபெயர்ப்பு) நெல்லைச் சிலேடை வெண்பா

31. சீனிவாச ஐயங்கார் - வித்தியாரண்ய நகரம்

32. மாதவையா - பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம்.

33. சம்பந்த முதலியார் - சதி லீலாவதி, சுலோச்சனா

34. நாராயண சாஸ்திரி - போஜராஜ சரித்திரம்

35. பலராம ஐயர் - தசரதன் தவறு

நாடகம் என்னும் மூன்றாம் பிரிவில் அகத்தியர் கால அல்லது சங்ககால நாடகம் என்று எதுவும் இப்போது கிடைக்கவில்லை. தற்கால நாடகக் கருக்கள் பெரும்பாலும் இராமாயணத்திலிருந்தும் மகாபாரதத்திலிருந்தும் எடுக்கப்படுகின்றன என்று பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். நாடக ஆசிரியர்களும் நாடகங்களும் பின்வருமாறு:

1. சுவாமிநாத பிள்ளை - இராம நாடகம், தருமபுத்திர நாடகம்
2. கந்தபிள்ளை - இராம விலாசம், கண்டி நாடகம், ஏரோது நாடகம்
3. அருணாச்சலக் கவிராயர் - இராம நாடகம், அசோமுகி நாடகம்
4. கணபதி ஐயர் - அபிமன் நாடகம், அதிரூபவதி விலாசம்
5. நாகேச ஐயர் - அர்ஜுன நாடகம், சுபத்திரை நாடகம்
6. இராமச்சந்திர கவிராயர் - பாரத விலாசம், தாருகன் விலாசம், சகுந்தலை விலாசம், ரங்கூன் சண்டை நாடகம்
7. இராமசாமி ஐயர் - அல்லி நாடகம்
8. முருகேச ஐயர் - குருசேத்திர நாடகம்
9. மாப்பண முதலியார் - சோமகேசரி நாடகம்
10. சின்னத் தம்பி - நொண்டி நாடகம், கோவல நாடகம், அநிருத்த நாடகம்
11. முத்துக்குமாரப் புலவர் - தேவசகாய நாடகம், சீமந்தனி நாடகம், புதுமாப்பதி நாடகம்
12. கதிரேசப் புலவர் - பதுமாபுர ராணி நாடகம்
13. அனந்தபாரதி ஐயங்கார் - பாகவத சமஸ்த காந்த நாடகம்
14. சுந்தரம் பிள்ளை - மனோன்மணீயம்

15. இலட்சுமண பிள்ளை - லீல நாடகம்

16. சூரியநாராயண சாஸ்திரி - ரூபாவதி, கலாவதி, மான விஜயம்

நாவல் என்னும் நான்காம் பிரிவில் ஆங்கிலக் கல்வியால் தமிழில் தோன்றிய நாவல்களைப் பற்றி, பூரணலிங்கம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

1. வேதநாகயம் பிள்ளை - பிரதாப முதலியார் சரித்திரம்

2. இராஜம் ஐயர் - கமலாம்பாள் சரித்திரம்

3. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி - மதிவாணன்

4. மாதவையா - பத்மாவதி சரித்திரம்

5. சருக்கை இராமசாமி ஐயங்கார் - கமலினி

6. சி.ஆர். சீனிவாச ஐயங்கார் - வித்யாரணிய நகர்

7. இராஜவேலு செட்டியார் - அன்பானந்தன்

இதழ்கள் என்னும் ஐந்தாம் பிரிவில், அச்சுக்கலை வளர்ச்சிக்குப் பிறகு இதழ்கள் வளர்ந்து வருவதைப் பூரணலிங்கம் பிள்ளை விளக்கியுள்ளார். ஞானபோதினி, சித்தாந்த தீபிகை, செந்தமிழ்ச் செல்வி, லோகோபகாரி, குடிஅரசு, பாரதி, பிரசண்ட விகடன், இந்து நேசன் முதலான பலதரப்பட்ட இதழ்களையும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கொள்கை என்னும் ஆறாம் பிரிவில் யாழ்ப்பாணத்தில் தோன்றி, தமிழ் வளர்த்த அறிஞர்களை அறிமுகம் செய்துள்ளார். முத்து ராஜர், சேனாதிராஜ முதலியார், முத்துக்குமாரக் கவிராயர், மயில் வாகனப் புலவர், பீதாம்பரப் புலவர், ஜெகராஜ சேகர மன்னார், கதிரவேல்பிள்ளை, சின்னதம்பி புலவர், விஸ்வநாத சாஸ்திரியார், கனகசபை புலவர், குமாரசிங்க முதலியார், குமார குலசிங்க முதலியார், சதாசிவ பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, பொன்னம்பலம் பிள்ளை, அம்பிகை பாகர், முருகேச பண்டிதர், ஞானபிரகாச சுவாமி, சரவண முத்துப் புலவர், வைத்தியநாத முதலியார் முதலிய இருபது அறிஞர்களையும் அவர்தம் படைப்புகளையும் பூரணலிங்கம் பிள்ளை இப்பிரிவில் அறிமுகம் செய்துள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாறு என்னும் இந்த ஆங்கில நூல் வாயிலாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை முழுமையாக எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை கொடுத்துள்ளார். ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்னர் வளர்ந்து வரும் இலக்கிய வரலாற்றையும் தொட்டுக் காட்டி அத்துறை வளர்ச்சியையும் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டிற்கு அப்பாலும் தமிழ் இலக்கியம் வளர்ந்து வருகிறது என்பதை யாழ்ப்பாணப் புலவர்களைச் சுட்டிக்காட்டி வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையின் யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்வது போல் உலகின் பல பாகங்களில் தமிழ் வளர்வதையும் தமிழ் இலக்கிய வரலாற்றில் சேர்க்க வேண்டும் என்னும் உண்மையை இது விளக்குகிறது.

*****

தமிழாய்வுகள்

ந. வேலுசாமி

திருநெல்வேலி மாவட்டம், முந்நீர்ப்பள்ளம் சிவசுப்பிரமணிய பூரணலிங்கம்பிள்ளை ஆய்வறிஞர்களிடையே ஒரு சிகரம். தம்முடைய ஒரு கருதுகோளுக்கு ஒரு நூலகத்தின் மொத்தப் புத்தகங்களையும் புரட்டிப் பார்க்கத் தயங்காத அயர்வு சோர்வு அற்ற அறிஞர். அபார உழைப்பின் அவதாரம். பிடிவாதக்காரர். தம் கருத்துக்களிலும் கொள்கைகளிலும் அட்டை போல் ஒட்டிக் கொண்டிருப்பவர். ஆராய்ச்சிப் போக்கில் தாம் போவதை விட்டு அந்தப் போக்கைத் தமக்கு இணங்குமாறு செய்து கொள்ள முயற்சி மேற்கொள்வார் என்பது இங்குக் கருதத்தக்கது.

இலக்கிய வாதங்களால் சாதித்துக் கொள்ள முடியாதவற்றைக் குத்துச் சண்டையால் சாதித்துக் கொள்ளவும் விருப்பமுடையவரே என்பது இவரைப் பற்றிய இன்னொரு கருத்து.

இவையெல்லாம் எழுத்துக்கெழுத்து அப்படியே நடந்தன என்பதைக் குறிப்பிட அல்ல; கொண்ட கொள்கையில் எடுத்த துணிபில், அதற்கேற்ற சான்றாதாரங்களைத் தேடி நிறுவும் உறுதிப்பாட்டில், உழைப்பிற்கு அஞ்சாமை ஆகியவற்றை அவர் உயிர்மூச்சாகக் கொண்டிருந்தார் என்பதை உணர்த்துவதற்கேயாம்.

எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில இலக்கியம் படித்தது தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் அறிந்த அயல்நாட்டறிஞர் இடையே பரப்புவதற்குத்தான். ஆங்கிலமும் அருந்தமிழும் அறிந்த அறிஞர்கள் இவரைப் போல் அன்றும் அதிகம் இல்லை; இன்றும் அதிகம் இல்லை என்பதும் இந்த இடத்தில் ஆழ்ந்து எண்ணத்தக்கதாகும்.

தமிழைப் படித்துத் தமிழர்களிடமே சொல்லிக் கொண்டிராமல், பிற நாட்டினருக்குச் சொல்ல வேண்டும் என்று பாடுபட்ட இந்த அறிஞர், இவருக்குப் பின் வந்தோருக்கெல்லாம் முன்னோடி. ஆங்கிலப் படிப்பும் அளவற்ற தன்னம்பிக்கையுமே எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை. இவர் எழுதிய சுமார் ஐம்பது நூல்களுள் ஆங்கில நூல்கள் முப்பத்து இரண்டு. தமிழ் நூல்கள் பதினெட்டு.

சென்னை தாம்ஸன் கம்பெனியார் பள்ளி, கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்களை வெளியிட்டு வந்தனர். அவர்கள், பூரணலிங்கம்பிள்ளையின் ஆங்கிலப் புலமையினைக் கேள்விப்பட்டு, அவருடைய-

1. Analysis of English Literature
2. Socrates and Plato
3. Evolutional Philosophy

ஆகிய நூல்களை வெளியிட்டனர். அவை மாணவர்களின் சிறப்பான வரவேற்பைப் பெற்றன.

அவர் திருச்சிராப்பள்ளியில் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ் இலக்கியப் பரப்புதலுக்கும் ஆற்றிய தொண்டு மறக்க முடியாதது. தமிழுக்கென ஒரு பல்கலைக்கழகம் பின்னாளில் உருவாக அன்றே விதையூன்றியவர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் அவரை நினைத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளது.

'ஞானபோதினி' என்ற தமிழ்த் திங்கள் இலக்கிய இதழை எட்டாண்டுகள் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்து நடத்தினார். ஆங்கில அறிவிற்கு இம்மியளவும் குறையாத தமிழறிவு பெற்ற பூரணலிங்கம்பிள்ளை தம் இதழில் தமது உற்ற நண்பர் பரிதிமாற் கலைஞரின் மதிவாணன் என்ற நாடகநூலைச் சிறிது சிறிதாக 1897 முதல் 1902 வரை வெளியிட்டுத் தம் நட்பைத் தமிழ் உலகு அறியப் பறைசாற்றினார்.

பூரணலிங்கம்பிள்ளை எப்.ஏ. வகுப்பில் (பிறகு வந்த இண்டர்மீடியட் வகுப்பு) படித்துக் கொண்டிருந்தபோது புரிந்த சதுரப்பாடான பணி அவரின் நுண்மாண்நுழைபுலத்தைக் காட்டும். தமக்குப் பாடமாக இருக்கும் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகம் ஒன்றிற்கு உரை எழுதி அச்சிட்டு ஊதியம் பெறவும் நினைத்தார். தம் பெயரில் எழுதி வெளியிட்டால் 'ஒரு மாணவன் எழுதியது தானே' என்று பலரும் புறக்கணிக்க வாய்ப்பிருக்கும் எனக் கருதி, தம் பெயரை ஆங்கிலத்தில் Purnalingam என்று எழுதி வைத்துக் கொண்டார். அதைத் தலைகீழாக மாற்றிப் படித்துப் பார்த்தார் Magnilanrup (மாக்நிலன்ரூப்) என்று தம் பெயர் உருமாறியதைக் கண்டு மகிழ்ந்து இப்பெயரை மேலும் ஐயப்பாட்டிற்கு இடம் இல்லாமல் மாற்ற வேண்டுமே என்று அப்பெயரை இரண்டாக்கத் துணிந்தார்.

அவ்வாறு செய்யும்போது Magnil Anrup (மாக்நில் அன்ரூப்) என்று படிக்கும்படி அமைந்தது. ஆக, பெரிய ஆங்கிலத் துரைமகனாகவே மாறிவிட்டார். பிறகென்ன இவரது உரைநூல் ஆயிரக்கணக்கில் அன்றே விற்பனை ஆனது. இதில் பெரிய வேடிக்கை அப்போது அக்கல்லூரித் தலைவராக இருந்த துரை, "மாக்நில் அன்ரூப் துரையின் உரைநூல் நன்றாக இருக்கிறது" என்று பாராட்டிப் பூரணலிங்கம்பிள்ளை உள்ளிட்ட மாணவர்களுக்கு இந்நூலைப் பயன்படுத்திப் பாடம் நடத்தியதுதான்.

பூரணலிங்கம் பிள்ளை, எப்.ஏ., பி.ஏ., வகுப்புகளுக்கு மேலும் உரைநூல்கள் எழுதி வருவாயைப் பெருக்கிக் கொண்டார்.

மாணவர்களுக்குப் பாடம் நடத்த வகுப்பிற்குச் செல்லும் இந்த ஆங்கிலப் பேராசிரியர் ஷேக்ஸ்பியர் நாடகத்தை விளக்கிச் சொல்லும் போது, கம்பராமாயணத்தையும் சொல்லுவார். ஷேக்ஸ்பியரின் மேதைமைக்குச் சற்றும் இளைத்ததல்ல கம்பனின் மேதைமை எனக் கற்பித்தார். மேலும், மாணவர் கற்பதற்கேற்றவாறு தமிழ்க் கட்டுரைகளையும் எழுதினார்.

மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் போதும், கம்பனின் காவிய நயத்தை உணர்த்தும் போதும் கம்பனை அவர் பாராட்டத் தயங்கியதில்லை. அதேவேளையில் கம்பனின் பாடுபொருளை ஆராயும்போது அவரைச் சாடவும் அவர்பின் வாங்கியது இல்லை. இதுவே, அவரது காய்தல் உவத்தல் அற்ற ஆராய்ச்சிப் பாங்கை உணர்த்தப் போதுமானதாகும்.

நூலாக்கப் பணிகள்

எழுத்துலகில் படைப்பாளிகளாக இருந்தோரை, இருப்போரை அறிய வாய்ப்புண்டு. இதேபோல் அறிஞர்களாக வாழ்ந்தோரை, வாழ்வோரையும் அறிய முடிகிறது. ஆனால் படைப்பாளராகவும், அறிஞராகவும் இருந்தோரை இருப்போரை அறிவது கடினமான பணி. காரணம் இத்தகையோர் தொகை சொற்பமாக இருப்பதே. இத்தகையோரில் தனித்துக் குறிப்பிடத் தகும் ஆற்றல் பெற்றவர்தான் பூரணலிங்கம் பிள்ளை.

இதை அவரது கதை மற்றும் நாடகப் படைப்புக்களும், ஆய்வு நூல்களும் இதழ்களில் எழுதிய கட்டுரைகளும் உணர்த்தும்.

அவர்தம் எழுத்துக்களை கட்டுரை, சிறுநாவல்,நாடகம், வரலாறு, திறனாய்வு, உரைநடை என்றவாறு பிரிக்கலாம். அவருடைய நூல்களைத் தமிழ் நூல்கள், ஆங்கில நூல்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

ஏறத்தாழ ஐம்பது நூல்களின் ஆசிரியர் என்று முன்பே குறிப்பிட்டிருந்தாலும் அந்நூல்களின் முழுப் பட்டியலையும் தொகுப்பது ஈண்டு நோக்கமன்று. எவ்வாறு இடர்ப்பட்டாலும் இவரது நூற்களை எல்லாம் தொகுக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் இவ்வாய்வாளரை விட்டு நீங்கவில்லை. தேடிய அளவில் கிடைத்தவற்றிலிருந்து ஆய்வு செய்வதே இங்கு இயல்வது. மேலும் பூரணலிங்கம் பிள்ளையின் முழு வரலாறு எழுதும்போது சிந்திக்க வேண்டியது அது. சில சொல்லிப் பல நினைக்கத் தூண்டுவதே இங்கு நோக்கம்.

இந்த ஆய்வாளர் தேடலில் அகப்பட்ட தமிழ் நூற்பட்டியல்:

1. ஐரோப்பிய யுத்தம் (படங்களுடன்)
2. காமாட்சி (நவவகை நாடகம்)
3. தப்பிலி (தப்பில்லாதவன்) - கட்டுரைகள்
4. மருத்துவன் மகள் - சிறு நாவல்
5. தமிழ்க் கட்டுரைகள்
6. கதையும் கற்பனையும்
7. கவிதைகள்
8. சூரபத்மன்
9. வைரமணிமாலை (கார்லைல் கட்டுரையின் தழுவல்)
10. டால்ஸ்டாயின் இரு கதைகள் (மொழிபெயர்ப்பு)
11. ராமாயணப் பாத்திரங்கள்

இதழ்களில் வந்த கட்டுரைகள்

1. வள்ளல்கள் சரித்திரம் (செந்தமிழ்ச் செல்வி - சிலம்பு 5, பக். 401-411, சென்னை, 1927-28).
2. அறிவுடைநம்பி (செந்தமிழ் செல்வி - சிலம்பு 7, பக். 608-612, சென்னை 1929-30).

தமிழ்மொழி வரலாறு எழுதியதில் முன்னோடியாகக் கருதப்படுபவர் பரிதிமாற் கலைஞர் (மறைமலை அடிகளுக்கு முன்பே சூரிய நாராயண சாஸ்திரி என்ற தன் வடமொழிப் பெயரைத் தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவர்). தமிழ் இலக்கிய வரலாறு எழுதியதில் முன்னோடியாகக் கருதப்படுபவர்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை. இருவரும் சென்னைக் கிறித்தவக் கல்லூரி நூலகத்தில் இணைகிறார்கள். "ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதை நான் எப்படி அறியாமலிருக்க முடியும்?" என்ற பரிதிமாற் கலைஞரின் மகிழ்ச்சி வினாவொடு மேற்கூறிய இருவரிடையே உளம் ஒன்றிய நட்பு பூத்தது. அது இறுதிவரை நிலைத்தது.

பூரணலிங்கரும் பரிதிமாற் கலைஞரும் நாள்தோறும் சென்னைக் கடற்கரையில் சந்தித்து உலாவிக் குலாவினர். இவர்களின் கடற்கரை முடிவின்படியே பூரணலிங்கர் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆங்கிலத்தில் நூற்றார். பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி வரலாற்றைத் தமிழில் நூற்றார். பரிதிமாற்கலைஞரின் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றையும் ஆங்கிலத்தில் பூரணலிங்கர் எழுதியதாகப் பரிதிமாற் கலைஞரின் வரலாற்றை எழுதிய ந. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட ஆராய்ச்சியில் பின்வாங்காத பூரணலிங்கர் ஆரியத் தமிழறிஞர்களின் நுட்ப அறிவையும், தமிழ்த் தொண்டையும் போற்றத் தயங்கியதில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு, பரிதிமாற் கலைஞருடனான தோழமை. மற்றோர் எடுத்துக்காட்டு பிரம்மஸ்ரீ திராவிட வித்யா பூஷண டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் சதாபிஷேக வரலாற்றில் வெளிவந்த கீழ்வரும் கவிதையாகும்.

பூரணலிங்கம் பிள்ளை

முன்னீர்ப் பள்ளம்

தமிழ்த்தாய் போற்றும் தகைசால் நாதா
தமிழ்மொழிதழைக்கத் தமிழ்ப் பழ நூல்களைத்
தமிழகத் துணையோடு தளராதாய்ந்து
தமிழர் சிறக்கத் தந்த வெந்தகையே

அரைச்சத காலம் அன்புடனமைந்த
நரை நீயெய்தினும் நறுந்தமிழீந்தோய்
கரையிலாக் கவியைக் கருணையினளித்த
உரைசால் உத்தமன் உமையொரு பாகன்
அங்கயற்கண்ணி அழகன்றன் பெயரோன்

பங்கயன் மனைவிப் பதியருள் பெற்ற
நங்கயக் கவிஞன் நன் மீனாட்சி
பங்கரனொப்ப வெங்ஙனும் பிறங்குஞ்

சுந்தரக் குறவனைச் சந்ததம் வழுத்தி
பந்தமுற்ற பண்புடை இளவற்கும்

தொந்தமுற்ற துதிகொள் தோன்றற்கும்
நந்தாவவன் பெயர் தந்து துலங்க
மங்களமோங்குமா கல்யாண சுந்தரா
திங்கட் பிறை புரை தேம்படு சுந்தரா
எங்கள் கலாநிதி என்று மழைக்க
எங்கணுமுலகின் மாமாத்தியாய
மருளில் புகழுறுமா வித்யா பூஷண
வருவது வருமெனும் வண்டமிழ் டாக்டரின்
திருவுறு சதாபிஷேகத் திருநாள்
இரு சுட ரருளால் இருகதம் இயங்குக

பன்னாட் பழகிய பாவலர் நாயக
நன்னாளிதனில் நின்னடி போற்ற
என்னாலியலவில்லை யாயினுஞ்
சின்னாள் தனிலே சேர்ப்பரெம்பூரணர்
புணர்ச்சிப் பழகுதல் வேண்டா நட்புரிமை
உணர்ச்சியே தருமென வுரைத்திசினாரே!

என்ற இக்கவிதை போற்ற வேண்டிய தமிழ் அறிஞர்களைப் பூரணலிங்கர் போற்றத் தவறவில்லை என்பதும் அவரது நடுநிலையான ஆய்வு உள்ளத்திற்குப் பின்னுமோர் எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு தமிழில் பெருவழக்காகக் காணப்படும் இலக்கிய வடிவங்களில் (Literary Forms) எல்லாம் பூரணலிங்கர் தம் மேதைத் தன்மையைப் பதிவு செய்துள்ளார் என்பது வெள்ளிடைமலை.

ஆங்கில நூல்கள்

ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசிரியராய் விளங்கிய பூரணலிங்கர் தம் ஆங்கில அறிவைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கே செலவிட்டார் என்பது எந்த இருமொழிப் புலமையாளரும் செய்ய முடியாத பணியாகும்.

1. A primer of Tamil Literature Madras, 1929 (Revised and Enlarged).
2. Ravana the Great: King of Lanka
3. St. Manickavasakar: His life and Teachings.
4. Tirukkural Dipa Alankaram (English Translation).
5. Critical Studies in Kural.

6. Studies and Critiques in Modern English - 1915.
7. Ten Tamil Saints (From the esoterism of St. Manickavasakar to the realism of St. Pattinathar).
8. Tamil India.

இவற்றோடு, முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப் பெற்ற ஆறு நூல்களையும் சேர்த்தால் ஆங்கில நூல்கள் மொத்தம் பதினான்கு ஆகின்றன.

இவை தவிரத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியிருக்கவும் கூடும். இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தாம் 1920களிலும் 1930களிலும் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளியான கட்டுரைகள்.

பரிதிமாற்கலைஞர், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை ஆகியோர் காலத்தில் திராவிட மொழிகளின் வளர்ச்சிக்குச் செயல் வடிவில் பாடுபட்டவர்களில் ஒருவராக மேற்கூறிய இருவரால் கருதப்பட்டவர் 'மயிலை முனிவர்' என அழைக்கப் பட்ட சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சர். எஸ். சுப்பிரமணிய ஐயர். இவரைப் பார்க்கப் பரிதிமாற் கலைஞர் செல்லும் போதெல்லாம் உடன் சென்றவர் பூரணலிங்கர். இன்னொருவர் பரிதிமாற் கலைஞரின் மாணவரான ந. பலராம ஐயர். இம்மூவரின் கூட்டு முயற்சியால் தான் "திராவிட பாஷா சங்கம்" என்ற அமைப்பு சென்னையில் 1899ஆம் ஆண்டு என். சுப்பிரமணிய ஐயர் தலைமையில் தோன்றியது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் ஆகிய மொழிகளைப் போற்ற இவர்கள் உழைத்தனர். இவர்கள் சில ஆங்கிலக் கலைச்சொற்களை மேற்கூறிய மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட்டனர். இச்சங்கத்தின் வழி அன்று அவ்வளவுதான் செய்ய இயன்றது என்பது குறையேயன்று.

இனி, பூரணலிங்கரின் நூல்களைப் பற்றிக் குறிப்பிடலாம். 'ஐரோப்பிய யுத்தம்' என்ற நூல் படங்களுடன் வந்துள்ளது. 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இவ்வாறு அச்சிடப்படுவது பெரு வழக்காக இருந்திருத்தல் கூடும்.

'காமாட்சி' என்ற நாடகம் அந்தக் காலத்தில் புதிய இலக்கிய வடிவம் (நவவகை) ஆகும்.

'தப்பில்லாதவன்' என்ற கருத்தை நிலைநிறுத்தத் 'தப்பிலி' என்ற தலைப்பில் கட்டுரைகளை வரைந்துள்ளார்.

'மருத்துவன் மகள்' சிறு நாவல் என்ற அடையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தே குறுநாவல்

வந்திருக்கவேண்டும். மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் முதல் தமிழ் நாவல். பிறகே சிறு நாவல் குறு நாவல் எல்லாம் வெளிவந்திருக்க வேண்டும். 'சிறு' நாவல் வடிவம் எம்.எஸ். பூரணலிங்கருக்கே உரித்தானது என்று கூடக் கருதலாம்.

கதை எழுத ஓர் இலக்கண நூலாகக் 'கதையும் கற்பனையும்' என்ற நூலைக் கொள்ளலாம். அவரது கவிதையின் வழி அவருக்கு அந்த ஆற்றலும் இருந்ததை உணர முடிகிறது.

இராமாயணப் பாத்திரங்களும், சூரபத்மனைப் பற்றிய சொற்சித்திரங்களும், அவ்விலக்கியங்களில் அவர் தோய்ந்திருந்த தன்மையை வெளிப்படுத்துகின்றன.

சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதற்கு லியோ டால்ஸ்டாயின் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பது சான்றாகும்.

அவரது ஆங்கில நூல்களைப் பற்றி ஓரிரு பக்கங்களில் வரைந்திட முயற்சி செய்தால், தொகுப்பின் எஞ்சும், விரித்தாற் பெருகும்.

அவர் எழுதிய நூல்களில் எல்லாம் தலைமை சான்றது 1929இல் புதுப்பித்து விரிவாக்கி வெளியிடப்பட்ட தலைமைத்தமிழ் இலக்கிய வரலாறு (A Primer of Tamil Literature) ஆகும். இதனை ஆறு பகுதிகளாகப் பிரித்து விரிவாக எழுதியுள்ளார். தேவையான மூன்று பின்னிணைப்புக்களும், விரிவான கலைச்சொல் அட்டவணையும், துணை நூற் பட்டியல்களும் அமைந்து காணப்படுகின்றன. "இலங்கை மன்னர் இராவணப் பெரியார்" (Ravana the Great : King of Lanka) என்று இராவணனைப் போற்றி ஆய்வு நூல் படைத்துள்ளார்.

சைவசமயக் குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்க வாசகரைப் பற்றியும், அவர் தொடங்கிப் பட்டினத்தடிகள் வரையிலும் பத்து சமயத் துறவிகளின் வரலாற்றை Ten Tamil Saints என்று எழுதியுள்ளார்.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு, திருவள்ளுவரை 'The Socrates of South India' என்றும் பாராட்டியுள்ளார். பிறகு, குறளை ஆராய்ச்சி செய்து, திருக்குறளுக்கு எழுந்த பத்து உரைகளில், பரிமேலழகர், மணக்குடவர் உரை தவிர்த்து மீதி எட்டுப்பேர் உரைகளும் தமிழ் மக்களிடம் பரவவில்லை என்பதற்கே இந்த ஆராய்ச்சி (Critical

Studies in Kural) என்று குறிப்பிடுவதோடு தமிழர்களுக்கும் தமிழ் அறியாத பிற நாட்டாருக்குமே இந்நூல் எழுதி வெளியிடப் படுகிறது என்று தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தற்கால ஆங்கில மொழியைப் பற்றி ஆய்வும், திறனாய்வும் செய்து 1915இல் 'Studies and Critiques in Modern English' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். தமிழ் இந்தியா (Tamil India) என்னும், 'பூரணலிங்கரின் நூல் பதின்மூன்று அத்தியாயங்களுடன் 'Add and in' என்ற பின்னிணைப்புடன் 1926இல் வெளிவந்தது. இதை மறு பதிப்பாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1999இல் வெளியிட்டுள்ளது.

இலக்கிய வரலாற்றாய்வு

இந்தியாவில் வடமொழியை விட்டால் மீதியுள்ள மொழிகள் எல்லாவற்றையும் விடத் தமிழே நீண்டதோர் இலக்கிய வரலாறு படைத்த மொழியாகும் என்பது அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் கூற்று.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை எத்தனை நூல்கள் எழுதியிருப்பினும், அவர் எழுதிய தமிழ் இலக்கியம் (Tamil Literature) என்பதுதான் அவரது தலைசிறந்த நூலாகக் கருதப்படும். காரணம் எங்குச் சுற்றி வந்தாலும் அவரது ஆய்வு தமிழ் இலக்கிய வரலாறு பற்றியதாகவே இருந்ததுதான். பின்வந்த அறிஞர்கள் தமிழ் இலக்கிய வரலாறு எழுதுவதற்கு முன்னோடியாக விளங்கியதும், விளங்குவதும் இந்நூல்தான்.

சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கிய வாய்ப்பின் அடிப்படையில் 1926இல் அவர் ஆற்றிய பதினைந்து சொற்பொழிவுகளின் தொகுப்பு, 1929 ஆகஸ்ட்டில் நூலாக வெளிவந்தது. இந்நூலைத் தமது கெழுதகை நண்பர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாருக்கு ஒரு துக்கப் பாடல்வழி அர்ப்பணித்துள்ளார். அந்த ஆங்கில அர்ப்பணிப்புப் பாடல் வருமாறு:

DEDICATION

V.G. Suriyanarayana Sastri, B.A.,

A sincere friend and colleague true
Who worked a decade hand and grew
In fame as teacher great, and bright
In making noble verse outright,

In playing parts in dramas writ
By him and framing rules to fit,
Till smatch'd away in flush of life
And mourne'd by darlings three and wife
By kith and kin and scholars twelve
knit well to him by bands of love
For teaching old Tamil classics high;
To such a friend belov'd do I
This book dedicate enlarg'd but late.
Since long detach'd by cruel fate.

இலக்கிய வரலாறென்பது அது தோன்றிய நாட்டின் மக்கள் வரலாற்றையே குறிக்கின்றது. மேலும் இலக்கிய வரலாறு மொழியின் வரலாற்றையும் தன்னகத்தே இணைத்துள்ளது, என்பது தற்கால ஆங்கில இலக்கிய வரலாற்றாசிரியர் ஒருவரின் கருத்து இங்கு உறழ்ந்து நோக்கத்தக்கது.

தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால வகுப்பை ஆண்டுகளின் அடிப்படையில் நிரல்படுத்திப் பார்த்தால், கீழ்க்காணும் முறைப்படி அறிஞர் பெருமக்கள் அணிவகுத்து நிற்கிறார்கள்.

1. ராபர்ட் கால்டுவெல் - 1856 (A Comparative Grammer of the Dravidian Languages)
2. சி.வை. தாமோதரம் பிள்ளை - 1881 (வீரசோழியப் பதிப்பில் முன்னுரை, மதுரை).
3. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி - 1870 - 1903 (Q.V.) Kamil Zvelabile Tamil Literature, Leiden.
4. ஜே. வின்ஸன் (1903 ஆக இருக்கக்கூடும்) (Q.V.) Kamil Zvelabile Tamil Literature, Leiden.
5. எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை - 1904. (A Primer of Tamil Literature, Madras).
6. எம். சிறினிவாச ஐயங்கார் - 1914. (Tamil Studies, Madras)
7. கே.எஸ். ஸ்ரீநிவாசபிள்ளை, தமிழ் வரலாறு - 1922.
8. மறைமலை அடிகள், மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் 1930.
9. கா. சுப்பிரமணியப் பிள்ளை, இலக்கிய வரலாறு (1930, சென்னை, 1953 - நான்காம் பதிப்பு).
10. வி. செல்வநாயகம், தமிழ் இலக்கிய வரலாறு, 1951.

11. கமில் ஸ்வெலபில், Tentative Periodization of the Development of Tamil, Tamil Culture, Vol. iv, No. 1, 1957.

12. எஸ். வையாபுரிப் பிள்ளை, காவிய காலம், மதுரை, 1957.

13. அ. சிதம்பரநாதன் செட்டியார், Introduction to Tamil Poetry, Tamil Culture, Vol. III, No. 7, 1958.

14. ஜேசுதாசன், A History of Tamil Literature, Calcutta, 1961.

15. எஸ். ராமகிருஷ்ணன், தமிழ் இலக்கிய வரலாறு ஒரு அறிமுகம், சென்னை, 1962.

16. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், A Hisotry of Tamil Literature, Annamalai Nagar, 1968.

17. ஜெ.எம். சோமசுந்தரம் பிள்ளை, A History of Tamil Literature, Annamalai Nagar, 1968.

18. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, 1972.

19. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு, முதற்பாகம், மாயூரம் 1953.

20. கமில் ஸ்வெலபில், Tamil Literature in the Series Handbunch Der Orientatlistile, Leiden, 1975.

21. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு, வடஆற்காடு, 1979.

22. ந. சுப்பிரமணியம், An Introduction to Tamil Literature, Madras, 1981.

மேற்குறிப்பிடப்பெற்ற இருபத்திரண்டு தமிழ் இலக்கிய வரலாற்று அறிஞர்களுக்குப் பிறகு இன்று நூற்றுக் கணக்கானவர்கள் தமிழ் இலக்கிய வரலாறுகளைக் காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப எடுத்தெழுதி அச்சிட்டு விற்பனை செய்து வருகின்றனர். ஆனால், இந்த இலக்கிய வரலாறுகளுக்கெல்லாம் தாய் வரலாறாக இருக்கும் தகுதி பெற்றிருப்பது முன்பு குறித்த பட்டியலில் ஐந்தாவதாக வரும் பூரணலிங்கனாரின் தமிழ் இலக்கிய வரலாறேயாகும்.

ஆசிரியர் இந்த இலக்கிய வரலாற்றை முதன்முதலில் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார். நூலை அச்சிட மிகவும் துன்புற்றார். மாணவர்களும், தமிழ்க் காதலர்களும் தமிழின் மீது மரியாதை உள்ளவர்களும் இந்நூலைப் பரந்த மனப்பான்மையோடு வரவேற்பார்கள் என்று நம்புவதாகத் தெரிவித்துள்ளார். ஒன்றுக்கு எட்டு டபுள் டெம்மி அளவில் சுமார் 450 பக்கங்களில் தமிழ் இலக்கிய வரலாற்றை அவர் மீண்டும் புதுக்கியும் விரித்தும்

அச்சிட்டார். இந்நூலிலிருந்து ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்களைக் காண்பது பொருத்தமாயிருக்கும்.

சமய மறுமலர்ச்சிக் காலம் என்ற பகுதியில், சமயக் காழ்ப்புக்கள் அப்போதிருந்த சமய்ங்களிடையே மண்டியிருந்ததை அகச் சான்றுகள் மூலம் விளக்கியுள்ளார்.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமழிசை ஆழ்வார் தம் பாடலில், சமணரையும் பௌத்தரையும், சைவத்தாரையும் எப்படிச் சாடுகிறார் என்பதை,

"அறியார் சமணர் அயர்த்தார் பளித்தர்
சிறியார் சிவப்பட்டர்கள்"

என்ற அடிகளின்வழிக் காட்டியுள்ளார். மேற்கூறிய மூன்று சமயத்தார்களும் பரசமயத்தாரை இவ்வாறே வசை பாடியுள்ளனர் என்பதற்கும் சான்றுகளுண்டு.

தமது பரந்து விரிந்த இலக்கிய வரலாற்றில் பூரணலிங்கனார் இதழியல் பற்றியும், இலங்கை யாழ்ப்பாணத் தமிழ் அமைப்புக்கள், தமிழறிஞர்கள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

இதழ்களைப் பொறுத்தவரையில் தன்னுடைய ஞான போதினியோடு சபாபதி நாவலரின் சித்தாந்த தீபிகா மற்றும் செந்தமிழ்ச் செல்வி, லோகோபகாரி, பகுத்தறிவு கொடுக்க வந்த குடியரசு, திராவிடன் போன்ற பல இதழ்களையும் குறிப்பிட்டுள்ளார்.

பின்னிணைப்பு ஒன்றில் 'தெரிவு செய்யப்பட்ட நூல்கள்' பட்டியலில் இலக்கணம் என்ற பகுதியில் தொல்காப்பியம் தொடங்கி 'இலக்கண விளக்கச் சூறாவளி' வரை பதினைந்து நூல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியம் என்ற பட்டியலில் திருமுறை 12இல் தொடங்கி, பண்டார சாத்திரம் 14 வரை 151 நூற்களையும் குறிப்பிட்டுள்ளார். பஞ்சகாவியங்களில் வளையாபதி, குண்டலகேசி நூல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை என்றே குறித்துள்ளார்.

1. இதிகாசங்களில் ஒன்று சிவ ரகசியம் என்றும், ஒப்பிலாமணி தேசிகர் சிவரகசியம் என்ற ஒன்று எழுதியிருப்பதையும் இதன்வழி அறிகிறோம்.
2. கந்தபுராணம் பாடிய கச்சியப்பர் வேறு, விநாயக புராணம் பாடிய கச்சியப்ப முனிவர் வேறு எனவும் அறிகிறோம்.

ஆதிசங்கரரின் சௌந்தரியலகரி வேறு, கவிராச பண்டிதரின் சௌந்தரியலகரி வேறு எனவும் அறிய முடிகிறது.

3. சிவஞான முனிவர் "திராவிட மகாபாடியம்" எழுதியதையும், பத்திரகிரியார் 'புலம்பல்' எழுதியுள்ளதையும் அறிகிறோம்.

4. பின்னிணைப்பு இரண்டில் பாவலர் அட்டவணையைத் தொகுத்தளித்துள்ளார். இவற்றில் 212 புலவர் பெருமக்கள் இடம்பெற்றுள்ளனர்.

இனி, பின்னிணைப்பு மூன்றில் பட்டமேற்படிப்பு (எம்.ஏ,) தமிழ் இலக்கிய வரலாறு கற்கும் மாணவர்களுக்கு ஏற்ற வினாக்களைத் தெரிவு செய்து நிரல்படுத்தி வைத்துள்ள பணி மறக்கற்பாலதன்று.

1896ஆம் ஆண்டு முதல் 1911ஆம் ஆண்டு வரை பயின்ற மாணவர்களுக்குத் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக வினாக்கள் கொண்ட வினா வங்கி 30 பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. வினாக்கள் ஆங்கிலத்திலும் இருக்கிறது. தமிழிலும் இருக்கிறது. தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கலந்தும் உள்ளது.

1910ஆம் ஆண்டிலிருந்து "ஆங்கிலத்தில்தான் விடை எழுத வேண்டும்" என்ற குறிப்போடு வினாக்கள் தொடங்கப்படுகின்றன.

1896ஆம் ஆண்டு வினாத்தாளில் உள்ள ஒரு வினா:

"Give a list of those Jaina authors whose contributions to Tamil Literature are of permanent value mentioning the approximate date and subject matter of each work".

1911ஆண்டு வினாத்தாளில் உள்ள ஒரு வினா:

(a) There were two poet - kings i.e., அதிவீரராம பாண்டியன் மற்றும் குலசேகரப் பெருமாள் Compare their poetry. (b) Write briefly the lives of வீரகவிராயர் and வீரமாமுனிவர் and compare their poetry.

மேலும் சொல்லடைவுக்குப் (Index) பதினாறு பக்கங்களை ஒதுக்கி ஆங்கில அகர நிரலில் அவற்றைத் தொகுத்துள்ளார்.

சொல்லடைவுக்கு அடுத்து இரண்டு பக்கங்களில் துணைநூற் பட்டியல் தயாரித்துள்ளதோடு, மேலும் ஒரு பக்கத்திற்கு இதழ்களுக்குப் (Journals) பட்டியல் தயாரித்துள்ளார்.

இறுதியாகப் பிழைதிருத்தம் (Errata et corrigenda) இணைத்துள்ளார்.

எனவே, இவ்வளவு பணிகளையும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளிலேயே தனிமனிதராக நின்று சாதனை நிகழ்த்திப் பின்வரும் வழித்தோன்றல்களுக்குக் கைகாட்டியாய் விளங்கும் பூரணலிங்கனாரின் இலக்கிய வரலாற்றுத் தொண்டு சாதாரணமானதா?

'தமிழ் இந்தியா'வும் 'தமிழர் இந்தியா'வும்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி

என்றும்,

ஒரு மொழி வைத்து உலகு ஆண்ட இனம் தமிழினம் என்றும் தமிழர், தம் பெருமையை உணர்வு பொங்கப் பறை சாற்றிக் கொண்டாலும், அவற்றிற்குத் தக்க ஆதாரங்களோடும் அகச் சான்றுகளோடும் அறிஞர் சிலர் நிறுவியிருந்தாலும் அவர்களில் இருவர் தமிழை மையமாகக் கொண்டு இந்தியாவைப் பார்த்துள்ளனர்.

ஒருவர் டி.ஆர். சேசையங்கார். இவர் 'தமிழர் இந்தியா' (Dravidian India) என்ற ஆங்கில நூலை 1925இல் எழுதி வெளியிட்டுள்ளார்.

இன்னொருவர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, இவர் தமிழ் இந்தியா (Tamil India) என்ற ஆங்கில நூலை, 1927இல் வெளியிட்டதாக கா. சிவத்தம்பி தமிழில் இலக்கிய வரலாறு நூலில் குறித்துள்ளார்.

டி.ஆர். சேசையங்கார் நூலுக்குத் தமிழாக்கம் வந்துள்ளது. எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை நூலுக்கு நல்ல தமிழாக்கம் வரவேண்டும்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் "தமிழ் இந்தியா" நூலில்:

தமிழகம், தொன்முதற் குடியினராகத் தமிழர், தமிழ் மொழியும் இலக்கியமும், தமிழ்ச் சமயம், தமிழ்ச் சமுதாயமும் சமூக வாழ்வும், தமிழர் தொழிலும் வணிகமும், தமிழர் போர் நடவடிக்கை முறை, தமிழர் அரசு (சேர, சோழ, பாண்டியர்கள், பல்லவர்கள்) தமிழர் கலைகள், தமிழர் அறிவியல், தமிழர் மருத்துவக் கலை, தமிழர் கல்வி, தமிழர் தத்துவம் ஆகிய பதின் மூன்று அத்தியாயங்களில் அலசி ஆராய்ந்து தமிழர்தம் பெருமையையும் சிறப்பையும் நிறுவியுள்ளார். இது

தமிழாராய்ச்சிக்குக் கிடைத்த அவரது நிலைபேறான கொடையாகும்.

மேற்கூறிய இயல்களில், பண்டைத் தமிழர் பெருமை, உயர்வு, உழைப்பு அனைத்தையும் கோடிட்டுக் காட்டிய அவர் தமிழர் அரசு (Tamil Polity) என்ற எட்டாம் இயலில் ஒரு மணிக் கருத்தையும் தெரிவிக்கின்றார்.

தொல்காப்பியர் காலம்தொட்டிருந்த தமிழர் பெருமிதம் இடையில் ஆரியர் வரவிற்குப் பிறகு மங்கத் தொடங்கியது. பிறகு, பகுத்தறிவு அறிஞர்கள், தலைவர்கள் என்னும் தூண்டுகோல்களால் தூண்டிவிடப்பட்டு மீண்டும் சுடர்விடத் தொடங்கியது.

இந்தத் தூண்டுகோல்தான் பார்ப்பனரல்லாதாரியக்கம், இதைப் பூரணலிங்கனார் பின்காணுமாறு குறிப்பிடுகின்றார்:

பல்லாண்டுகளாகப் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தமிழர்களின் தாழ்நிலைக்கான காரணங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியதன் விளைவாக அவர்களின் அடிமைத் தன்மை, அறியாமை, மனவேறுபாடுகள் நீங்கின. அரசியல் ரீதியாகக் கற்பித்ததன் விளைவாகவே அவர்கள் தங்களை மதித்துக் கொள்ளத் தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் ஆழ்துயிலிலிருந்து விடுபட்டு விழிப்புணர்வு பெற்றனர்.

> (During the past decade the Non-Brahmin movement has done much to make them feel their degradation due to their inertia, ignorance and indifference and to educate them politically that they might respect themselves. The Demos has hardly begun to shake off slumbur and beware) p. 75.

இவ்வாறு தமிழர்களின் எழுச்சி - வீழ்ச்சி - பின் எழுச்சி ஆகிய நிலைகளைத் தமிழ் இலக்கிய இலக்கணச் சான்றுகளையும் பிறமொழி, பிறநாட்டு அறிஞர் ஆய்வு முடிவுகளையும் துணையாகக் கொண்டு 'இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்க' (பதிற்றுப்பத்து இரண்டாம் பதிகம்) தமிழ் இந்தியாவைத் தம் அகண்ட பார்வையால் நோக்கினார் பூரணலிங்கர்.

தமிழ் இந்தியாவோடு ஒப்பிட்டுக் காணத்தகும் 'தமிழர் இந்தியா' நூல் பண்டைத் திராவிடர்கள், திராவிடர் தம் தோற்றம், திராவிடர் தம் பெருமைகள், பண்டைத் தென்னிந்திய அரசியல் சமுதாயம் ஆகிய நான்கு இயல்களில் இயல்கிறது.

இந்தியா என்பது தமிழர்தம் மூலத் தாயகம். அதன் மூத்த முதல்மொழி தமிழ். அனைத்துக் கூறுகளிலும் உலக அளவில் இணையானவர் தமிழர் என இந்நூலாசிரியர் (டி.ஆர். சேசையங்கார்) நிலை நாட்டியுள்ளார். நூலாசிரியர் தம் ஊகத் தொகுப்பன்று இது; 1925 வரை வெளிவந்த கல்வெட்டுச் சான்றுகள், அயல்நாட்டார் குறிப்புகள், சமஸ்கிருதம், சிங்கள மொழிச்சான்றுகள், சிந்துவெளி ஆய்வறிக்கை, இலக்கியச் சான்றுகள், பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்கள், உயர்தர ஆய்வுக்கட்டுரைகள் நூல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற நூலிது என்று இந்நூலின் மொழி பெயர்ப்பு ஆசிரியர் அறுதியிட்டு உறுதியாக நிறுவுவதிலிருந்து இந்நூலின் சால்பினை உய்த்துணரலாம்.

மூல நூலாசிரியர் தம் முகப்புரையில் 'இந்தியப் பண்பாட்டிற்குப் பண்டைத் திராவிடர் தம் பங்களிப்புகள் புறக்கணிக்கத்தக்க அளவுக்கு எளியனவும் அல்ல; சிறியனவும் அல்ல என்பதை அரும்பெரும் முயற்சி செய்து இந்நூலின் எதிர்வரும் பக்கங்களில் நிறுவியுள்ளேன்' என்று பிரகடனம் செய்திருப்பது ஆழ்ந்து நினையத்தக்கதாகும்.

இந்துமாக்கடலில் இருந்த கண்டம் லெமூரியாக் கண்டம். இது கடலில் மூழ்கியது. மடகாஸ்கர், மலாய் தீபகற்பம், தென் இந்தியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றை லெமூரியா கண்டம் இணைத்திருந்தது.

பலுஜிஸ்தானத்தில் வழங்கும் மொழி பிராகுவி எனும் திராவிட மொழியாகும். எனவே, திராவிடர்கள் பலுஜிஸ்தான் வழியாகச் சிந்துவெளி இந்தியாவில் நுழைந்தனர். சர். ஜான் மார்சல் கருத்துப்படி சிந்துவெளி நாகரிகத்தின் மூலவர் திராவிடராக இருக்கலாம் அல்லது இந்திய ஆதிமக்களாக இருக்கலாம் என்ற அடிப்படைக் கருத்து ஆழ்ந்து நோக்கத் தக்கது.

இனி சுனித்குமார் சட்டர்ஜி, திரமிள என்னும் சொல் தொல் திராவிடர் காலத்தில் தமிழ்மொழியைக் குறிக்க வழங்கிய சொல் என்று குறிப்பிடுவதும் சிந்தனைக்குரியது. மேலும், வராகமிகிரர் தன் 'பிரஉறத்சம்ஹிதா' எனும் நூலில் 'diravidam' என்ற சொல்லுக்காக 'diramidam' என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருப்பதும் நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

இந்திய இனங்களிலேயே தமிழர் மட்டுமே சமஸ்கிருதத்தைச் சாராமல் சுதந்திரமான இலக்கியங்களைப் படைத்திருந்தனர்.

பெற்று இருந்தனர். தமிழில் உள்ள யாப்பு விதிகளும் செய்யுட்களும் சமஸ்கிருதத்திலிருந்து முற்றிலும் வேறானவை. தமிழ்மொழி இன்றும் கூடத் தன் பழங்கால யாப்பான அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. சமஸ்கிருத யாப்பில் இடம் பெற்றுள்ள ஆரியா, வைத்ததி, அனுஸ்துப்காயத்ரி ஆகியன தமிழில் உள்ளவற்றிற்கு இணையானவை அல்ல.

தமிழர் தொழிலும் வணிகமும் பற்றிப் பூரணலிங்கனார் தமிழ் இந்தியாவில் குறிப்பிட்டதைப் போலவே, சேசையங்காரும் 'திராவிடர் தம் வாணிகம்' பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை.

திராவிடர்கள் கடல் பயணத்தில் மிகப் பழக்கமானவர்கள். இந்துமாக் கடலின் பெரும்பகுதியில் அவர்கள் பயணம் செய்திருந்தனர். கி.மு. 83ஆம் ஆண்டுக்கு முன்பே தென்னிந்தியாவுக்கும் மேற்கு ஆசியாவிற்கும் இடையே முறையான கடல் தொடர்புகள் இருந்து வந்தன என்பதும் போதரும்.

பண்டைத் தென்னிந்திய அரசியற் சமுதாயம் பற்றிக் குறிப்பிடும்போது, திராவிட சமுதாயத்தின் அடிப்படை அலகு சிற்றூர் தான் என்பதும் கவனத்திற்கொள்ள வேண்டிய கருத்தாகும். மேலும் திராவிடர்களால் மிக மேலாக வழிபடப் பெற்ற தெய்வம் கந்தழி என்பதாகும். கந்து என்பது கடவுள் இருக்குமிடம், கடவுளுக்குக் குறியீடு ஒன்று வழங்கப்பெற்று அது கந்து எனவும் அழைக்கப்பெற்றது என்பதும் நெஞ்சில் நிறுத்தற்குரியதாகும்.

டி.ஆர். சேசையங்கார் குறிப்பிடும் தமிழர் போர்முறையும், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை குறிப்பிடும் தமிழர் போர் நடவடிக்கை முறையும் ஒன்றாகவே இருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.

இந்த இரு பெரும் அறிஞர்களும் இனிமையையும் நீர்மையையும் இயல்பாகக் கொண்ட தமிழ்மொழியை முன்னிறுத்தி இந்தியாவைக் கண்டு தமிழுக்கு ஏற்றம் தந்துள்ளனர் எனத் துணியலாம்.

குறிப்பிடத்தக்க ஆய்வுப் பணிகள்

தம்மிடத்தில் இயற்கையாய் அமைந்தும், தமது இடைவிடாத முயற்சியால் கைகூடியும் வாய்த்த ஆங்கிலப் புலமை அத்துணையையும் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, தமிழாய்வுக்கே செலவிட்டார் எனின் மிகையன்று. அதிலும் திராவிட ஆராய்ச்சி சார்ந்த தமிழாய்வுக்கே அர்ப்பணித்தார். இதுதான் இங்குக் குறிப்பிடத்தக்க ஆய்வுப் பங்களிப்பு என்று குறிப்பிடப்படுகிறது.

இவர் ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதியிருக்கிறார். அது ஆராய்ச்சி நூலாகப் பாராட்டப் பெறுகிறது என்பதை நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

கம்பராமாயணத்தைக் காவிய ரசனைக்குப் பாராட்டிய இவர், கருத்து அடிப்படையில் உறுதியாக வேறுபட்டார். அதில் திராவிட ஆரியப் பூசலைத் தோலுரித்துக் காட்டத் தயங்கவில்லை. திராவிடத் தந்தை என்று சொல்லப்படும் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளையே இந்தவகையில் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளைக்குக் குரு. இராவணனைத் தமிழன் என்றும், விபீடணனைப் பச்சைத் துரோகி என்றும் இலங்கைப் பேரரசன் இராவணன் என்னும் நூலில் நிறுவியுள்ளார்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் 'குறளில் திறனாய்வு சார்ந்த ஆய்வுகள்' (Critical Studies in Kural) என்ற ஆராய்ச்சி நூலும் அவரது ஆய்வில் குறிப்பிடத்தக்க ஒன்று. நூறு பக்கங்கள் கொண்ட இந்த ஆங்கில ஆய்வு நூல் இவரது வெளியீட்டு நிறுவனமான 'The Bibliotheca' என்பதன் வழி 1929இல் வெளியிடப்பட்டுள்ளது. அறிவின் ஆதாரம் தேடும் 'இம்மானுவேல் கான்ட்' (Immanuvelkant - 1724 - 1804) என்ற அறிஞனின் அறிவுக் கோட்பாடு அடிப்படையில் எழுதப்பட்ட நூல் இது.

தொடக்க ஆய்வு (I Opening Study), கட்டுப்படுத்த முடியாத இயற்கை நிகழ்ச்சி, தெய்வம் (II God), தெய்வத்தன்மையுள்ள மனிதர்கள் (III God like Men) காதலாடுதலும் திருமணமும் (IV Courtship and Marriage), கணவனும் மனைவியும் (V. Man and Wife), நேர்மையும் களங்கமும் (VI. Virtues and Vices), ஒழுக்கமும் நடத்தையும் (VII. Character and Conduct), முன் யோசனையும் விவேகமும் (VIII. Prudence and Prosperity), நலமும் வளமும் (IX. Health and Wealth), அரசனும் அரசாங்கமும் (X. King and State), குறளின் செல்வாக்கு (XI. The Influence of Kural), ஆய்வு முடிவு (XII. Closing Study).

மேற்கூறிய பன்னிரண்டு இயல்களோடு பின்னிணைப்பாகப் (Appendix) போற்றுதலுக்குரிய W.H. ட்ரு (1840), M. ஏரியல் (1848) போற்றுதலுக்குரிய டாக்டர் G.U. போப் (1886), டாக்டர். பார்த் (1882) பிரடரிக் பின்காட் (1908), W.P. குமாரசாமி, போற்றுதலுக்குரிய டாக்டர். லாரன்ஸ் (1892), J.M. நல்லசுவாமிப் பிள்ளை (1921) ஆகிய எட்டு அறிஞர்கள் திருக்குறளை ஆராய்ந்து சொன்ன கருத்துக்களையும் கொடுத்துள்ளார்.

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர், இயற்கையை நுணுகி நோக்கியவர்; உயிர் உண்டாக்க முடிந்தவற்றைப் பற்றியும், உயிர் உண்டாக்க முடியாதவற்றைப் பற்றியும் உய்த்துணர்ந்திருந்ததோடு தமக்கு முன் தோன்றிய பண்டைய இலக்கியங்களின் வாக்குவன்மை, அணியிலக்கணம், வட்டார வழக்குகள், உழவு, மருந்து, நாட்டுப்புற இயல், மரங்களின் வளர்ப்பியல், பாலியல், மனவியல், சாதுரியம் ஆகிய திறமைகளோடு நடைமுறைச் சிந்தனைவாதியாக இருந்ததோடு சமுதாயச் சீர்திருத்தவாதியாகவும் எல்லாவிதத் தடைகளுக்கும் கேள்விகளுக்கும் அப்பாற்பட்டவராகவும் விளங்கினார் என்பது பூரணலிங்கம் பிள்ளையின் கருத்தாகும்.

மேலும், தானிய வகைகளையும் மரங்களில் பழ மரங்கள், முள் மரங்கள், நச்சு மரங்கள் ஆகியவை பற்றியும், குன்றிமணி (Abrus Seed) பற்றியும் விலங்குகளில் காட்டெருமை, காட்டெருது பற்றியும் பறவைகளில் அன்னம், கொக்கு, மயில் பற்றியும் ஊர்வனவற்றில் எலி, பாம்பு ஆகியவை பற்றியும் நுணுக்கமாக அறிந்து தம் குறட்பாக்களில் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார்.

திருவள்ளுவரைச் சமயச் சீர்திருத்தவாதியாகவும், அரசியல் சீர்திருத்தவாதியாகவும் குறிப்பிடுகிறார். கல்விச் சீர்திருத்தவாதியாகத் 'தெரிந்து வினையாடல்' என்ற அதிகாரம் கொண்டு நிறுவுகிறார். தொழில்நுட்பக் கல்வியின் தேவையை வலியுறுத்துகிறார். அக்கல்வி சிறப்பாக இருக்குமானால் அது கற்போனின் விருப்பப்படி இருக்க வேண்டுமேயன்றிப் பரம்பரைப் பழக்கமாகவோ, வழக்கமாகவோ இருத்தல் கூடாது எனவும்,

> "வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
> அதற்குரியன் ஆகச் செயல்" (குறள். 518)

என்ற குறளைக் கொண்டு நிறுவுகிறார்.

முப்பால் நூலாகிய குறளை நீதியின் சட்டத் தொகுப்பு (A Moral code and Community) என்று கல்லாடர் புகழ்ந்துரைத்ததையும் பூரணலிங்கம்பிள்ளை தவறாமல் குறிப்பிட்டுள்ளார்.

குறளின் செல்வாக்கு என்னும் பதினொன்றாம் அதிகாரத்தில் இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் உள்ள,

> "பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
> பிற்பகற் றாமே வரும்"

என்ற குறளை இளங்கோவடிகள் தமது சிலம்பில் எடுத்தாண்டுள்ளதையும் வெளிப்படுத்தியுள்ளார். 18ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த தாயுமானவரும் குறளைப் பயன்படுத்தத் தவறவில்லை.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தம் காலத்தில் சீனி. கோவிந்தராஜன் என்பார் காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களையும் உரைநடை நாடகமாக்கி வெளியிட்டதையும் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு, பண்டிதர் ஈஸ்வரமூர்த்திப்பிள்ளை தம் பேரக் குழந்தைகளுக்காகத் திருக்குறள் தாலாட்டு (Kural Lullaby) எழுதி வெளியிட்டதையும் புலப்படுத்தியுள்ளார்.

சுருங்கக்கூறின் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டையும் இணைத்து ஓர் ஆராய்ச்சியாகவும் காமத்துப்பாலை மட்டும் ஓர் ஆராய்ச்சியாகவும் பூரணலிங்கம் பிள்ளை ஆராய்ந்தமையை இந்நூலின்வழி உணரலாம்.

என்றுமுள செந்தமிழைப் புறக்கணித்துவிட்டுத் தான் வந்து கோலோச்ச எத்தனித்தது சமஸ்கிருதம்; அதை அரும்பாடுபட்டு எதிர்த்து விரட்டித் தாய்த் தமிழுக்கு அரணாக நின்று காத்தவர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை. இது ஒன்றிற்கே தமிழ் கூறு நல்லுலகம் அவருக்குக் காலமெல்லாம் கடமைப்பட்டிருக்க வேண்டும்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தமிழ் மொழிப் பாதுகாப்பிற்கும், தமிழ் இலக்கிய வரலாற்றாய்வுக்கும், திருக்குறளாய்வுக்கும், நீதிக் கட்சித் தலைவர்களின் அரசியற் பணிக்கு உதவும் வகையாகத் திராவிட ஆராய்ச்சிக்கும் அந்த இயக்க இலக்கிய ஆலோசகராகவும் பணியாற்றி மீண்டும் முந்நீர்ப்பள்ளம் வந்து 16-06-1947இல் தம் பூதவுடலை மறைத்துப் புகழுடம்பை நிறுவினார்.

தமிழரான இந்த ஆங்கிலப் பேராசிரியரின் தமிழாய்வுப் பணியை அவ்வளவு எளிதாக யாரும் எட்டிவிட இயலாது.

துணைநூற்பட்டியல்

தமிழ்

1. ஆங்கில இலக்கிய வரலாறு, அ. அருணாசலம், திருவண்ணாமலை, 1999.
2. கலைக் களஞ்சியம் - தொகுதி ஏழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1960.

3. சங்க இலக்கியக் களஞ்சியம், சு. அமிர்தலிங்கம், சிதம்பரம், 2000.

4. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி, ந. சுப்பிரமணியன், சென்னை, 1950.

5. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், புதுதில்லி, 1972.

6. தமிழில் இலக்கிய வரலாறு, கார்த்திகேசு சிவத்தம்பி, சென்னை, 1988.

7. தமிழர் இந்தியா, டி.ஆர். சேசையங்கார், (தமிழில்) க.ப. அறவாணன், புதுச்சேரி, 1993.

8. நான் அறிந்த தமிழ்மணிகள், பி.ஸ்ரீ., சென்னை, 1988. (முதல் தொகுதி & இரண்டாம் தொகுதி).

9. தமிழர் சமூக விழிப்புணர்வுக்கான எழுச்சிப் பயணம் ஏன்? தமிழர் தலைவர் மானமிகு கி. வீரமணி, சென்னை, 2003.

10. மகா மகோபாத்தியாய தக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் சதாபிஷேக வரலாறு - லா ஜர்னல் அச்சுக்கூடம், சென்னை, 1936.

ENGLISH

1. Critical Studies in Kural, M.S. Puranalingam Pillai, Munnir Pallam, 1929.
2. Comparative Dravidian, Prof. Dr. R. Rangaswamy, Coimbatore, 1995.
3. Tamil India, M.S. Puranalingam Pillai, Munnir Pallam, 1926.
4. Tamil Literature, M.S. Puranalingam Pillai, Munnir Pallam, 1929.

*****

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை நோக்கில் இராவணன்

நா. ஜானகிராமன்

தமிழிலக்கிய வரலாற்றில் காப்பிய காலம் என்பது குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றது. ஒரு இலக்கியப் படைப்பு சிறப்புறுவதற்கு இரண்டு மாந்தர்கள் தேவைப்படுகின்றனர். முதன்மைநிலை மாந்தர், துணைமைநிலை மாந்தர் (Primary Character and Secondary Character) என்ற இருவர் நிலையும் படைப்பில், அதுவும் காப்பியப் படைப்பில் குறிப்பிடத் தகுந்தனவாகும். இதில் உடன்பாட்டுநிலை மாந்தர் (Complementary), எதிர்நிலை மாந்தர் (Controversy and Negative) என்ற இருவர் நிலையும் குறிப்பிடத்தக்கது. வான்மீகிப் புலவன் தொடங்கிக் கம்பன் வழி வந்து இன்று எழுகின்ற அனைத்து வகைப் படைப்புகளிலும் இராவணன் என்றொரு பாத்திரம் கீழ்நிலைக் குணங்கள் கொண்ட பாத்திரமாகவே சித்திரிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை பகுத்தறிவுச் சிந்தனை மற்றும் வரலாற்று ஆதாரங்களின் துணைக் கொண்டு இராவணனின் உண்மை நிலையினை விளக்கியுள்ளார். இராவணனின் உண்மையான பண்பு நிலைகள், கருத்தோட்டங்கள், எண்ண முறைகள், திறன்கள், மனித வாழ்வு எனப்பல கோணங்களில் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை காட்டும் முறையினை இந்த ஆய்வுக்கட்டுரை பகர்கின்றது.

நோக்கு, அணுகுமுறை (Aim, Approach)

இலக்கியத்தைச் சமூகத்தின் உண்மை நிலைகளுக்கு அப்பால் நின்று படைத்தளித்தல் ஒரு சமுதாயத்திற்குச் செய்யும் மாபெரும் அநீதியாகும். வான்மீகியிடமும், அதனைத் தொடர்ந்த கம்பனிடமும் இது காணப்படுகிறது என்கிறார் பிள்ளை. ஒரே சமூகத்தில் வெவ்வேறு குலத்தில் தோன்றி ஒற்றுமைப்பட்ட திறன்கள் கொண்ட இருவரை, ஒருவரை ஏற்றிப் பேசுவதும், மற்றொருவரைத் தூற்றிப் பேசுவதும் சகித்துக் கொள்ள இயலாத செயலாகும். இராவணனையும் இராமனையும் இருவேறு துருவங்களில் வைத்துச் சித்திரித்துக் காட்டுகிறது இராமாயணம். அவ்வகையான முறையற்ற அணுகுமுறைகள் கடிந்தொதுக்கப் படல் வேண்டும். சமூக

நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக மட்டுமே இலக்கியம் இருத்தல் வேண்டும். முறையற்ற திரிபுகளை நிகழ்த்தல் கூடாது. ஆனால் இராவணனின் பாத்திரத்தில் இவை யாவும் நிகழ்ந்து விட்டன.

பிள்ளை, இராவணனைப் பகுத்தறிவின் வழி நோக்கியுள்ளார். தாடகைவதம், சூர்ப்பணகை காதறுபடல், வாலியைக் கொன்று சுக்ரீவனை ஆட்சிபீடம் ஏற்றல் போன்ற செயல்களை ஈ.வெ.ரா., வெறுக்கின்றார். பிள்ளை சிந்தனையும் அதற்கு ஒத்துச் செல்வதாய் அமைகிறது. பெரும்பான்மை இடங்கள் திராவிடக் கருத்துக்களோடு ஒன்றிச் செல்கின்றன என்பதில் ஐயம் இல்லை.

இராவணன் குலம்

ஆரிய குலத்தை, மிகப்பெரிய வல்லமை கொண்ட குலமாக வான்மீகி வருணித்துள்ளார். இவர்கள் தங்களைத் தேவர்கள், சுரர், யஷர் என்றழைத்துக் கொண்டனர். எதிரிகளை அசுரர், இராக்ஷஸர், நிராசரர், நிருதர் என்றும் அழைத்தனர். அசுரர்கள் புய வலிமையால் உயர்ந்தவர்கள்.

ஆரிய இரிஷிகள் (இவர்கள் எல்லாம் பிராமணர் அல்லர்) ஒற்றர்கள் போல் இருந்து ஆரியரல்லாதார் இரகசியங்களை ஆரியர்களுக்குத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆரியரல்லா தாருக்குச் சொந்தமான இடங்களில், காடுகளில் அவர்கள் அனுமதி பெறாமல் பலாத்காரமாகப் புகுந்து ஆரிய இரிஷிகள் குடியேறினர். அக்காடுகளின் சொந்தக்காரர்கள் அவர்களை எதிர்த்தனர். அவர்களைத் தொலைக்க ஆரிய இரிஷிகள் வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற ஆரிய மன்னர்களின் உதவியை நாடினர். இலங்கைக்கும், ஜனஸ்தானம் உள்ளிட்ட தண்டகாரணியத்திற்கும் முறையே இராவணனும், அவனுடைய முன்னோர்களும் அதிபதிகளாக இருந்தனர் (பூரணலிங்கம் பிள்ளை : 2001 : 6).

இராவணனின் குலநிலையினை இங்குக் காண இயலுகின்றது. இராவண குலத்துக்கு இராக்ஷசன் என்ற முத்திரை ஏன் குத்தப்பட்டது? அழகில் சிறந்தவர்கள் எல்லாம் ஆரியர்கள். அழகற்ற கருமை நிறம் கொண்டவர்கள் இராக்ஷசர்கள் ஆவர். இராக்ஷசர்களில் பல வகுப்பினர் உண்டு. அதில் ஒரு பகுதியினர் காவல் காப்பவர்கள், சுருண்ட கூந்தலும், கருத்த உடலும் கொண்டிருக்க ஏது காரணம்? அவர்கள் காவல் தொழிலை மேற்கொள்பவர்கள். புஜ பராக்கிரமசாலிகள்; ஏனெனில் இவர்கள் திராவிடர்கள்; இராவணன் திராவிட வம்சத்தைச் சார்ந்தவன் ஆவான். இவன் திராவிட

பரம்பரையில் வீரதீரமிக்க மன்னனாக இலங்கையில் விளங்கினான் எனப் பல ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இராவணன் இராக்ஷச குலத்தைச் சார்ந்தவன்தான். ஆனால், நாகரிகம் பெற்ற குலமாக இவன் குலம் விளங்கியது. இலங்கை மாநகரில் அழகிய மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், கோட்டை கொத்தளங்களும், பூந்தோட்டங்களும், சாலைகளும், நாடக அரங்குகளும் இருந்தன. அங்குத் தேவாரப் பாடல்கள் இசைக்கப் பெற்றன. சமயச் சடங்குகளில் தேர்ந்த பரம்பரையாக இராவணன் பரம்பரை இருந்தது. வேதங்களிலும் தேர்ச்சி பெற்ற இலங்கை குல மக்களை இராவணன் வம்சத்தில் காண இயலுகின்றது என்கிறார் பிள்ளை. மேலும், புலஸ்தியனின் பேரனும், சுமாலியின் பேரனுமாகிய இராவணன் உடம்பில் யக்ஷரத்தமும், ரக்ஷரத்தமும் ஓடின என்று கூறுகின்றார். அதனால், அவனின் குலமுறைச் சிறப்பு தெற்றென வெளிப்படுகின்றது.

இராவணின் பக்தி

இராவணன் சிறந்த சிவபக்தன். பல நேரங்களில் சிவன் இவனின் தவ வலிமையைக் கண்டு அதிசயத்தது உண்டு. தன் வாழ்வில் 'தண்டத்தை மையமாகக் கொண்டு நடந்தவன்', 'சாம' வேதங்களையும் ஊன்றிக் கற்றவன் ஆவான். ஆனால் கர்வம் கொண்டவன். புலமை உள்ள இடத்தில் தானே செருக்கு இருக்கும். புலமையும், செருக்கும் ஒருங்கே பெற்றவன் இராவணன் என்பதை அவனது நாடாளும் திறத்திலும் பல இடங்களில் வெளிப்பட்டு நிற்கின்றது. நீ யார்? என்று கேட்ட தன் மாமன் 'மயன்' என்பவனிடம் 'ஓராயிரம் மறைகளைக் கற்றவன் நான்' என்று தன்னை அறிமுகம் செய்து கொள்கின்றான். பிற்காலத்திலும், அப்பரும், ஞானசம்பந்தரும் இவனின் புலமையைக் கண்டு அதிசயித்துள்ளனர் என்றால் இராவணனின் திறத்தைச் சொல்லவும் வேண்டுமோ? தன்னிடம் பேரளவான வலிமையிருந்தும், தனது சிவபக்தியை எஞ்ஞான்றும் அவன் விட்டதில்லை. நெடுங்காலம் தவம் செய்து சிவபெருமானிடமிருந்து தேவர், யக்ஷர்களால் சாகாவரத்தினையும், ஜோதிமயமான வாளினையும் பெற்றான் என்பர். ஆகவே, இறைவனுக்கு அடிபணிந்தவன் இராவணன். இறை நம்பிக்கையிலிருந்து இராவணன் ஒரு போதும் மாறிய மனம் கொண்டானில்லை.

ஒரு முறை போரில் இராமபிரான் மீது மாயா அஸ்திரம் விட எண்ணுகின்றான். அப்பொழுதும் கூட அவன் ஈசனை வணங்குகின்றான்.

"பூசனைத் தொழில் புரிந்துதான் முறைமையின்
போற்றும்
ஈசனைத் தொழுதிருடியும் சந்தமு மெண்ணி
ஆசைபத்திலும் அந்தரப் பரப்பினும் அடங்கா
வீசினன் செல, வில் இடைத் தொடை கொடு
விட்டாள்"

எனும் அடிகள் வாயிலாக இராவணனது பக்தி உணர்த்தப்படுகிறது. அப்பர் பெருமான் இராவணனது புலமையைத் தம் பாடலில் பாடியுள்ளார்.

'வன்கை வாளருளினான் ஊரணி
மறைக் காடு தானே!

'கன்னலின் கீதம்பாட'

என்பன போன்றவை இராவணனின் வேதப்புலமையைப் புலப்படுத்துகின்றன. ஞானசம்பந்தர்,

'சாமவேதமோர் கீதமோதியத்
தசமுகன் பரவு'

எனப் பாடியுள்ளார். கவிப்புலமையையும், பக்தித் திறத்தையும் கொண்டு வாழ்ந்தவன் இராவணன். சங்கீதப் புகழையும் கொண்டவன். 'இராவணீயம்' என்னும் இசை நூல் இவனால் செய்யப்பட்டதென்பர். பிற்காலத்தில் 'இராவண பத்தியம்' என்ற வேறோர் நூலும் எழுதப்பட்டிருக்கிறது.

இராவணன் புலமைத்திறம், பக்திச்சிறப்பு போன்றவற்றைக் குறிப்பிட்டது போன்றே தேவாரத்தில் எட்டாம் பாடலில் இராவணனை இழித்துக் கூறும் விதமாக அமைந்துள்ளதும் குறிப்பிடற்பாலதாகும். அவனின் செய்கைகள் இப்பாடல் வரிகளில் பொதிந்துள்ளன.

'தேவிதன்னை ஒரு மாயையால்
கானதில் வவிய காரரக்கன்'

எனவும்,

"உரையுணராதவன் காமமெனு
முதுவேட்கையான
பொருண் மன்னனைப் பற்றிப் புட்பகங் கொண்ட
மருகன் மன்னன்'

எனவும் இழித்துரைக்கப்பட்டுள்ளது சிந்திப்பதற்குரியதாகும்.

தென்னவன் இராவணன்

ஆரியர்கள் வட நாட்டவர்கள், வடபகுதியிலிருந்து வருகை தந்தவர்கள் என்றால் இராவணன் தென் பகுதியைச் சார்ந்தவன், தென்னிலங்கைக் கோமான் என்றழைப்பர். தென்னகப் பண்பாட்டோடு வாழ்ந்தவன். வீரம், கல்வி, குலப்பெருமை கொண்டவன் இராவணன். தமிழர்களின் மரபு முறைகளைப் பின்பற்றியவன். உதாரணத்திற்கு இராவணனின் திருமண முறையினைச் சுட்டலாம். இராவணன் முதலில் மண்டோதரி என்னும் கன்னியை வேட்டைக்குச் செல்லும்போது சந்தித்தான். அவள் ஒரு இராசகுமாரி. மண்டோதரியைக் கண்டு காதல் கொண்டான். இக்காதல் கொள்ளும் காட்சியை இராமனும் சீதையும் கண்டு கொள்கின்ற காட்சியைப் போன்று இராமாயணத்தில் காட்டவில்லை. ஏமபுரிக்கு அரசனும், சிற்பக்கலையில் வல்லவனுமான மயனின் மருமகன் ஆனான் இராவணன்.

தமிழர் திருமண முறையானது காதல் மணம்; பின் கற்பு மணம் என்பது; இவ்வாறான தென்னகப் பண்பாட்டுத் தமிழ் மரபில் இராவணன் வாழ்ந்த வாழ்க்கைக்கு எண்ணற்ற உதாரணங்களைக் காட்டலாம். "இராம-இராவண யுத்தத்திற்கு வித்துப் போட்டவள் இராவணன் தங்கையான சூர்ப்பணகையே யாயினும், தமிழ்ப் போர் முறைப் படியே இராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போனான்" (பூரணலிங்கம் பிள்ளை, 2001 : 25) என்கிறார். ஏனெனில், தமிழக மரபுப்படி, கொள்ளையிடல் பெண்கள் முதலான அனைத்து உடைமைகளிலும் மன்னர்கள் காலத்தில் நிகழ்ந்துள்ளது. காரணம், எதிரிக்குப் பிடித்தமான பொருளைக் கவர்ந்து செல்லுதலும் பிறகு அதனைக் காரணமாகக் கொண்டு போர் நிகழ்தலும் தமிழகத்தில் உண்டு. இதனைப் பிள்ளை, "தமிழ்நாட்டு மாமூல் படிதான் இராவணன் நடந்திருக்கின்றான்" என்கிறார்.

"இத்தசமுகன் தன் பேராற்றலால் தென்னாட்டை அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்து வந்தவன் என்றும்; அகத்திய முனிவர் ஓர் உபாயத்தால் இந்நாட்டினை யணுகாதபடி செய்து ஓட்டினாரென்றும்; தமிழ் வரலாறொன்று வழங்குகின்றது" (இராகவையங்கார், 1984:46). இக்கருத்து வன்மையாக மறுக்கக் கூடியது. மூவேந்தர்கள் காலம் தொடங்கிக் குறுநில மன்னர்களின் காலம் வரை ஒருவரையொருவர் போரிட்டு வெற்றி கண்டு ஆட்சி செலுத்தினர் என்பதுதான் தொன்று தொட்ட தமிழக வரலாறாகும். மற்றபடி, தென்னாட்டின் மரபுகளை முழுக்கப் பின்பற்றி நடந்தவன் இராவணன் என்பதில் மறுப்பேதும் சொல்வதற்கில்லை.

இராவணனின் தூய்மை

இராவணன் தூய உள்ளம் கொண்டவன். எதிரியான இராமனின் காதலியான சீதையைத் தன் வசம் கொண்டு சென்று அவளைக் கட்டாயப்படுத்தி ஒருபோதும் துன்புறுத்தவில்லை. மாறாக அவளது விருப்பத்தைப் பெற்ற பின்னரே அவளை அடைய நினைக்கிறான். அவ்வாறன்றி, அவனின் சிற்றின்ப இச்சைக்கோ, வேற்றெண்ணத்திற்கோ இராவணன் இடமளிக்க வில்லை. தன் பத்துத் தலையும் வெடித்துச் சிதறினாலும் ஒரு பொருட்டல்ல என்று சீதையைத் தொட நினைக்கவில்லை. அவளது விருப்பத்திற்கு ஏங்கியே அவனும் வனம் புகுந்தான். "இராவணன் உண்மையாகவே காமவெறி கொண்டவனாயிருந்தால், சீதையை அசோகவனத்தில் வைத்திருப்பானா? அவளுக்குத் துணையாகத் தன் சுற்றப் பெண்களை நியமித்திருப்பானா? சீதையின் காதலைப் பெற்று, இராவணன் அவளை மணஞ்செய்ய விரும்பினானேயன்றி அவளைப் பலவந்தம் செய்ய அவன் எண்ணவே இல்லை" (பூரணலிங்கம் பிள்ளை : 2003:28). இதிலிருந்து அவனது தூய உள்ளத்தை, கள்ளமில்லா உணர்வைப் புரிய இயலுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் இலக்கு என்ற ஒன்று உண்டு. இராவணன் சில இலக்குகளை நிர்ணயிக்காவிட்டாலும். சமுதாயத்தோடும் மனித மனங்களோடும் ஒன்றி வாழ்வதை விரும்பினான்.

இதனை விடுத்து, இராவணன் மீது ஒரு மிகைப்புனைவு (Extremism) செய்து அவனை உருவகித்து மக்கள் மனத்தில் நிலை நிறுத்திவிட்டனர் புலவர். உண்மை வாதம் (Realism), மெய்ம்மை வாதம் (Fact) இவற்றில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இராவணன் என்னும் பாத்திரம் ஒரு கற்பனா பாத்திரமாக (Romantic) புனைவு பெற்றுள்ளது. இத்தகைய மீப்புனைவியல் ஒரு சாராரின் கொள்கைப் போக்கே எனலாம். ஏனெனில், ஒவ்வொரு மனிதனுக்கும் விழுப்பொருள்கள் உண்டு. "விழுப்பொருள் என்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை விலங்கு வாழ்க்கை ஆகிவிடும். ஒருவன் தான் கொண்ட விழுப்பொருட்காகத் தன் உயிரையும் விடத் தயாராக இருத்தல் வேண்டும். இராமனைப் பரம்பொருளோ! என்று நினைக்கும் இராவணன் யாரேனும் தான் ஆகுக! யான் என் தனி ஆண்மை பேரேன். நின்றேன். வென்றி முடிப்பேன். புகழ்பெற்றேன்" (ஞானசம்பந்தன், அ.ச. 1993: 390) எனக் கூறுகையில் இராவணனின் தூய்மை, தன்னம்பிக்கை, துணிச்சல் என அனைத்தையும் உணர இயலுகின்றது. சிற்சில இடங்களில் இராமனின் முக்கியத்துவத்தைப் பெரிதுபடுத்தும் பொருட்டு இராவணன் சித்திரிப்பு வேண்டுமென்றே குறைகின்றது' எனச் சுட்டலாம். ஆங்காங்கே ஆரியக் கொள்கை மேலோங்குகிறது என்கிறார் பிள்ளை.

ஆரியக் கருத்துத் திணிப்பு

ஆரியக் கருத்துக்கள் வான்மீகியின் படைப்பு வாயிலாகத் திணிக்கப்பட்டுள்ளன; அவ்வகையில் பல கருத்துக்களைப் பிள்ளை முன் வைக்கிறார்.

“எதிரிகளுக்குள் பிரிவினையை யுண்டுபண்ணிச் சூழ்ச்சி செய்து வெற்றி பெறுவதே ஆரியர் போர்முறை” எனக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். ஆனால் இராவணன், அவனது குலம் வழிவந்தவர்கள் எவருக்கும் இப்பண்பு இருந்ததில்லை. சீதையைச் சிறை மீட்க. இராவணனின் இலங்கை மீது படையெடுக்கவும் இல்லை. ஒரு வீரனுக்கு இதுதான் அழகா? ஆரிய வீரன் இராமனுக்கு, திராவிட வீரன் அனுமன் உதவி புரியாமல் விட்டிருந்தால், சகோதரத்துரோகி விபீஷணன் இராமனுக்கு உளவு கூறியிருக்கா விட்டால் இராமன் இலங்கையை அழித்திருக்கவும் மாட்டான்; சீதையைச் சிறை மீட்டிருக்கவும் மாட்டான் என்கிறார். இங்குத் திராவிட/ஆரிய கருத்துக்கள், வீரர்கள் உருவகிக்கப் பட்டுள்ளனர். இராவணனும், தம்பி கும்பகர்ணனும், மகன் இந்திரஜித்தும் தூய வீரர்களாய்ப் போர்க்களத்தில் மடிந்தார்கள். எதனையும் முன்னின்று எதிர் கொள்வதே வீரத் திராவிட குலப் பழக்கம். அவ்வாறான குலத்தினில் வந்தவன் இராவணன். இவ்வாறான ‘இராவணன் அநேகப் பெண்களைக் கற்பழித்ததாகவும்; அவர்கள் இட்ட சாபத்தினால் தான் இராவணன் மாண்டான் எனவும் கதைகட்டி விட்டனர்’’ (பூரணலிங்கம் பிள்ளை : 2003:26) என்கிறார் பிள்ளை.

இராவணன் வீரம்

இராவணன் தன் வீரத்தால் குடும்பத்துக்குச் சொத்துக்களைச் சேர்த்தவன். இராவணனின் வீரம் அளவிடற் கரியது. வானரப் படைகளும், இராக்ஷஸப்படைகளும் போரிடுகின்றன. இந்திரஜித்தன் இரண்டு முறை இராமனைத் தாக்குகின்றான். அதனால் மயக்கமுற்று, இலட்சுமணனும் இராமனும் வீழ்கின்றனர். அனுமன் இராவணனைத் தாக்க இராவணன் இடித்த இடியினால் இரத்தம் கக்கினான். பதிலுக்கு அனுமனும், இராமனும் தாக்குகின்றனர். போரின் இறுதியில் இராவணன் களைப்படைகின்றான். இதனை இப்பாடல் உணர்த்துகிறது.

“வாரணம் பொருத மார்பும்
வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற்கேற்ப நயம்பட
உரைத்த நாவும்

தாரணி மௌலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும் வீரமும்"
(யுத்த:15:1)

ஆட்சி முறை

ஆரியக் கொள்கைகள் ஆட்சிமுறையிலும் இடை புகுந்தன. ஒரு குடும்பத்தில் மூத்தவருக்கே அரசுரிமை ஏற்கும் வாய்ப்பு இருந்தது. இதனைத் தகர்த்தெறிந்தார்கள். இராவணனின் மகன்கள் உயிரோடு இருந்தும் விபீஷணனுக்கு இராமன் முடி சூட்டுகிறான். வாலியின் மகன் அங்கதன் உயிரோடு இருந்தும், சுக்ரீவன் முடிசூட்டப் படுகின்றான். ஆனால் அதுவரை இராக்ஷசர் அரசேற்பு முறை அவ்வாறு இல்லை. இதனைச் சீரழித்த பெருமை ஆரியரைச் சாரும்.

இராவணனின் ஆட்சி நேர்மையானது. சண்டை சச்சரவுகள் இல்லை. அவனது வெளிநாட்டுக் கொள்கை சிறப்பானது. மதிக்கத்தகுந்தது. எதிரி நாட்டுக்கு அவன் படையெடுத்துச் சென்றதே இல்லை, அவன் நாட்டிற்கு வரும் பகைவர்களை அவன் 'தண்ட உபாயத்தினால்' அடக்கும் தன்மையன் ஆவான். அதனால் இலங்கை மக்கள் இராவணனிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டனர்.

சாம, பேத, தான, தண்டங்கள் இவற்றில் தண்ட உபாயத்தைப் பின்பற்றியதாலோ என்னவோ இராவணனின் புனைவு நிலையில் மிகுதிப்பாடு ஏற்பட்டுள்ளது.

"அவனது படையின் மொத்தத் தொகை ஆயிரம் வெள்ளம் என்பார்கள். சிவில் நீதி, இராணுவ இலாக்காக்களுக்கு இராவணனே மேல்திகாரியாய் இருந்தான். குடிகளின் ஆன்மீக விஷயங்களுக்கும் இராவணனே அதிகாரியாயிருந்தான். அன்பே அவனது ஆட்சிக்கு அடிப்படையாக இருந்தது" (பூரணலிங்கம் பிள்ளை : 2003:33) என்கிறார். திராவிட அரசனான இராவணனது ஆட்சி முறை ஆரிய முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகவே இருந்துள்ளது. நாட்டினைக் காக்க அவன் 'தண்ட' வழியையே கையாண்டான். இதற்கு, அவனின் உடலாற்றல், மனஆற்றல், தன்னம்பிக்கை, துணிவு போன்ற ஆண்மைக் குணங்கள் இராமனைக் காட்டிலும் பொருந்தி இருந்ததே காரணம் எனலாம்.

காதல் மணம்

ஒரு தார மணம்; பல தாரமணம் என இருவகையுண்டு. ஆரியர்கள் பல தார மணத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஏகபத்தினி

விரதம் இராமனுக்கு முட்டுக்கட்டையாய் நிற்கவில்லை. சூர்ப்பணகையின் மீது இராமன் ஆசை கொள்கின்றான். சூர்ப்பணகையை மணப்பது இராமன் சீதைக்குச் செய்யும் குற்றமாக எண்ணவில்லை. மாறாக, தன்னை ஒரு குற்றமற்ற கணவன் எனச் சீதை மதிக்க வேண்டும் என எண்ணிச் சூர்ப்பணகையை மறுக்கின்றான். எனவே, லட்சுமணனிடம் போகச் சொல்கிறான். அவனோ அவளது மூக்கையும், முலையையும் அரிந்து விடுகின்றான். தனது போர் வீரர்களுக்கும் தன் தங்கைக்கும் ஆபத்துண்டாக்கிய இராமனைப் பழிக்குப் பழிவாங்க நினைக்கின்றான். தனது எதிரியான சீதையைச் சிறைப்படுத்துகின்றான். ஆனால் தவறான எண்ணத்திற்காக அல்ல "இராமன், பத்துமாதம் தன் பத்தினியை வைத்திருந்தவனைப் பாவி எனவும் கருதாமல் அவன் மீது பரிவு காட்டினான். காரணம், இராவணன் தூய்மையில் கொண்ட நம்பிக்கைதான்; சீதையின் தெய்வீகத்தில் நம்பிக்கை வைத்த பின் இராவணன் அவளைக் காமநோக்கில் எடுத்துச் சென்றான் என்று கூறுவது பயனில்லை" (மாணிக்கவாசகம், 1974:6:1) இங்கு இராவணனின் கண்ணியம் புலப்படுகின்றது. இராமன் இராவணனின் மீது வைத்துள்ள அசையாத நம்பிக்கையும் இராமன் மீது சீதை கொண்ட காதல் உள்ளமும் இங்கே விளங்குகிறது.

நன்றியறிதல்

நன்றி கொன்ற உள்ளத்தை இராவணன் விரும்பமாட்டான். அதனால்தான் செஞ்சோற்றுக்கடனில் வீழ்ந்தான் கும்பகருணன். ஆனால், வீடணன் இராமனையும் அவனது கூட்டத்தினரையும் புகழ்ந்து கொண்டே இருப்பான். இராமன் சத்துருக்களுக்கெல்லாம் எமன்; எனவே அவனைப் பகைத்தல் வேண்டாம் என ஒவ்வொருமுறையும் வீடணன் அறிவுரை புகட்ட வெகுண்ட இராவணன் அவனை அவையிலிருந்து வெளியேறச் செய்தான். இராவணன் சீதையைச் சிறைவைத்ததைக் கண்டித்தாலும், இராவணன் செய்கின்ற போரில் நன்மையோ, தீமையோ தானும் துணைவருவேன் எனக் கூறுகின்றான் கும்பகருணன். இது அவனின் நன்றியறிதலைக் காட்டுகின்றது. மேலும், எதிரிகளிடம் நேருக்கு நேர் சென்று போரிடுவதே தமிழன் மரபு. முதுகில் குத்தியதாய்ச் சரித்திரம் இல்லை. எனவே இராவணன் நேருக்கு நேர் சென்று போரிட முடிவு செய்கின்றான். இராவணன் செய்வது சரியில்லை என்ற போதும் கூட, வீடணன் இராமன் பக்கம் நின்று போரிடத்தூண்டுவது அவனின் நன்றியறிதலைக் காட்டுகின்றது.

இராவணன் மாண்டதன் பின்னர்த் தன் குலக் கொம்பு சாய்ந்ததை எண்ணி நீர்சோர அழுகின்றான். இதனை 'முதலைக் கண்ணீர்' என்கிறார் பிள்ளை. தன் தமையனுக்குத் துரோகம் இழைத்த வீடணன் இலங்கை அரசை நீண்டநாள் ஆட்சி செய்ததாகத் தெரியவில்லை எனவும், 'அவனுக்கு வாரிசுகள் பிறக்கவில்லை' எனவும் பிள்ளை கூறுகின்றார். இராவணனின் இறப்பால் மண்டோதரியும் உயிர் நீத்தாள். கணவன் இறந்தவுடன் மனைவி உயிர் நீத்தல் தமிழ் மாந்தர்களின் மரபு. இது சிலப்பதிகாரத்தில் தெளிவாகக் காணப்படுகின்றது.

'வீர நாடுற்றாயோ? விரிஞ்சனாம்
யாவருக்கும் மேலாம் முன்பன்
பேரன் நாடுற்றாயோ? மறைசூடும் பிஞ்
ஞகன்றன் புரம் பெற்றாயோ?
ஆரணா உன்னுயிரை யஞ்சாதே
கொண்டகன்றார்?" (யுத்த : 36 : 222)

எனக் கண்ணீர் மல்க வினவுகின்றான் வீடணன்.

இராவணனின் கண்ணீர்

உடல் வலிமையும், மன வலிமையும், ஒருங்கே பெற்ற இராவணனும் பாச உணர்வுகளால் கண்ணீர் விட நேர்ந்தது. போரில் இராவணனின் புத்திரர்களான நராந்தகன், தேவாந்தகன், திரிசிரஸ், அதிகாயன் ஆகியோர் இலட்சுமணன் முதலியோரால் கொல்லப்பட்டனர். இவ்வாறு மடிந்த தன் புத்திரர்களை எண்ணிக் கண்ணீர் விடுகின்றான். சூர்ப்பணகை தன் கணவன் இறந்தபின்பு, மூக்கறுபடுதலாலும் இராவணன் வருந்துகின்றான்.

"சூர்ப்பணகையின் மீது இராவணன் வைத்திருந்த அளவற்ற அன்பே இராம-இராவண யுத்தத்துக்கும் காரணம்" என்கிறார் பிள்ளை. சூர்ப்பணகையின் கணவனைத் தவறுதலாகக் கொன்று விட்டதை இராவணன் அறிந்தபோது மனம் புழுங்கினான் எனவும் கூறுகின்றார். (பூரணலிங்கம்பிள்ளை 2001 : 53).

இராவணனின் கட்டளை

இராவணனின் பல செயல்கள் அதிருப்தியை ஏற்படுத்தினாலும் அவனின் ஏவல்களுக்கு யாரும் மறுப்பு தெரிவிப்பதில்லை. அவ்வகையில் வீடணன், கும்பகருணன் என இருவரும் குறிப்பிடத்தகுந்தவர்கள். வீடணனோ, போர்க்களத்தில் எதிரியின்

பக்கம் சாய்ந்து தனக்கு விரோதமாகச் செயல்பட்டதை இராவணன் பார்க்கின்றான். அதனால் அவனைத் தாக்க முற்படுகின்றான். இந்திரஜித்து இறந்தவுடன்,

"எழும் இருக்கும் இரக்க முற்று
அழும் அரற்றும் அயர்க்கும் வியர்க்கும் போய்
விழும் விழிக்கும் முகிழ்க்கும் தன்மேனியால்
உழும் நிலத்தை உருளும் புரளுமால்"

(யுத்த : 27 : 15)

என அழுது மனம் நொந்து போருக்குக் கட்டளையிடுகின்றான். தீச்சகுனங்கள் எதிரில் வருகின்றன. ஆனால் பெற்றால் வெற்றி, இல்லையெனில் மரணம் என நினைத்திருந்த இராவணனின் கட்டளையை ஏற்று அனைவரும் இராமனுக்கெதிராகப் போர் புரிந்தனர்.

இராவணன் கும்பகர்ணன் அன்பு

இராவணன் கும்பகருணனிடம் அளவற்ற அன்பு செலுத்தினான். அதனால் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிர் நீக்க வேண்டியிருந்தது. இராமன் போர்க்களத்தில் நின்று கொண்டு கும்பகருணனுக்கு அறிவுரை வழங்குகின்றான். தான் இராவணன் பக்கம் நின்று போரிடுதல் அறமில்லை என அறிந்திருந்தும், இராமனைப் பார்த்து எதிரியினைப் போர்க்களத்தில் சந்தித்துச் சமாதானம் பேசுதல் வீரருக்கு அழகோ எனக் கேட்கின்றான். அப்பொழுதும் இராமன் கும்பருணனை நொந்து கொள்ள வில்லை மாறாக இராவணன் மீதே வெறுப்பு ஏற்பட்டது. இதனைக் கம்பர்,

"பணையொன்று திரள்தோள் காலன்
பாசத்தால் பிணிப்பக் கூசித்
துணையின்றிச் சேறல் நன்றோ
தோற்றுள கூற்றின் சூழல்" (யுத். 15 : 159)

என்கிறார்.

இராவணன் சித்திரிப்பு

வான்மீகி, இராவணனைக் காமவெறி கொண்டவனாகவும், வலிமையுள்ள அரக்கனாகவும் சித்திரித்துக் காட்டுகின்றார். சீதையைச் சிறையெடுத்துச் சென்றாலும் அவன் அவளை மிகவும் நேர்மையாகத்தான் நடத்தினான். சீதை கூட ஒரு திராவிடப் பெண்.

"இராவணன் கயிலயங்கிரி உட்பட இந்தியா முழுமைக்கும் மன்னனாக இருந்தான். பிரளயத்துக்கு முன் தமிழகத்தின் ஒரு பகுதியான தென்னிலங்கைக்கு அதிபதியாக இருந்ததனால் அவன் தென்னவன் என்றுபெயர் படைத்திருந்தான். அவன் திராவிட மரபினன். முக்கியமாகத் தமிழன்" (பூரணலிங்கம் பிள்ளை, 2001 : 49). இவ்வாறான திறம் பூண்டவன் உண்மைக்குப் புறம்பான ஒருவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ளான். மேலும் இராவணனின் தனித்தன்மை மிகச் சிறப்பு வாய்ந்தது. அது ஆழ்ந்து நோக்குபவர்க்கே புரியும். தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி சீதையைப் பலவந்தப் படுத்தவில்லை. மாறாக, அவளிடம் விண்ணப்பம் செய்து கொண்டே இருந்தான். இராவணனை, வெறுத்தாள். பழித்தாள் சீதை. தன்னுயிரினும் பெரிதாய் மதிக்கும் காதலிக்குத் தீங்கொன்றும் செய்யேன் என்றிருந்தான் இராவணன். இராமனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று கூட நினைத்திருக்க வாய்ப்பில்லை. இருந்திருந்தால் சீதையை அவன் கொன்றிருக்கலாம். ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை. இவ்விடத்தில் தான் இராவணனின் தனித்தன்மை புலனாகின்றது என்கிறார் பிள்ளை. ஆனால், சீதையை விட்டகலவும், விடுவிக்கவும் இராவணனுக்கு ஒருபோதும் மனமில்லை. இராமனுக்காகச் சீதையை விடுதலை செய்தலைத் தன்னுடைய தன்மானத்திற்கு இழுக்கெனக் கருதுகிறான். தான் நயந்து சீதையைக் கவர்ந்த பிறகு அவளை விடுவிப்பது தன்னுடைய தன்மானத்திற்கு இழுக்கு என்று அவன் கருதலானான். அவன் தீயசெயலை விபீடணன் சுட்டிக் காட்டியபோது அதைச் சிறிதும் உணராது உண்மை அன்பின் மீதே ஐயம் கொண்டான். இராமனால் இறந்து படக்கூடும் என்ற உணர்வு ஏற்பட்டபோதும், சீதையை விடுவிப்பது தன்னுடைய தன்மானக் குறைவென்று கருதிய அவன் பிறன் மனையாளாகிய அவளைக் கவர்ந்தது மிகப்பெரிய கேடான செயல் என்பதை உணராமல் போனான் (1972:108-112). இவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமந்த இராவணனைப் பிள்ளை பின்வருமாறு சிறப்பிக்கிறார்.

"எவ்வழி நோக்கினும் இராவணன் ஒப்புயர்வற்ற உத்தமனே. அறிவிலாகட்டும், ஆண்மையிலாகட்டும், இலக்கண இலக்கியப் பயிற்சியிலாகட்டும், இசையிலாகட்டும் போர்த் துறையிலாகட்டும், போற்றத்தகும் குணங்களிலாகட்டும், அவனை வெல்வார் அவன் காலத்து இருந்ததே இல்லை.

அப்பேர்ப்பட்ட ஒரு உத்தமனை இராக்ஷஸன் என்றும் பத்துத் தலையும், இருபது கையுமுடைய கொடியோன் என்றும் பாவியென்றும் ஆரியப் புலவர் கூறக் காரணம் என்ன? காரணம்

அறிய நாம் அதிகம் சிரமப்படத் தேவையே இல்லை. ஓர் அரிய இராஜகுமாரன் மனைவி சிறைப்படுத்தப்பட்டாள்" (பூரணலிங்கம் பிள்ளை 2001 : 53). எவ்வாறான உருவங்கள் இராவணன் மீது திணிக்கப்பட்டாலும் உருவகிக்கப்பட்டாலும், இராமாயணமே கட்டுக்கதையாக இருந்தாலும், இவன் ஒரு சிறந்த வீரன் என்பதிலும், திராவிட இனத் தலைவன் என்பதிலும் மறுப்பேதும் சொல்வதற்கில்லை.

தாடகையினைக் கொன்ற இராமனின் செயல், சூர்ப்பணகையின் மூக்கு காதினை அறுபடச் செய்த இலட்சுமணன் செயல், ஐந்து மாதக் கர்ப்பத்தோடு காட்டில் கொண்டு விட்டுவந்த இராமனின் பண்பு, வாலியைக் கொன்று அரசுரிமை முறையில் மாற்றம் கொண்டு வந்தது என இவற்றை இராமனின் தகாத செயல்களாகக் காட்டுகின்றார் ஈ.வெ.ரா. பெரியார். எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையும் இக்கருத்துக்களுக்கு உடன்படுகின்றார்.

பொதுவாக நின்று ஆய்கையில், இராவணனின் சிறப்பு, இராமனை விடப்பெரியதாக உள்ளது. இராவணன் ஆங்காங்கே, தன் வலிமையாலும், ஆணவத்தாலும் போருக்குப் பலரை அழைத்ததை அவனது பின்னடைவாகக் கொண்டாலும், அவனது சிறந்த தவவலிமையினால் ஈசனையே இரங்கச் செய்து, மரணமில்லாப் பெருவாழ்வு வேண்டியவன் என்றால் அது வியப்பிற்குரியதான செயலாகும். இராமாயணத்தில் பல்வேறு நிலையில் எதிர்நிலையான சித்திரிப்புகள் இடம்பெற்றுள்ளன. எனவே அவற்றைக் களைய வரலாற்றுத் தொலைநோக்குப் பார்வை இன்றியமையாததாகிறது.

தொகுப்புரை

இராவணன் குலப்பெருமையும், சிறந்த சிவபக்தியும் கொண்டவன். தென்பகுதியைச் சார்ந்த இராவணன் தென்னாட்டு மன்னனாகச் சிறப்புற்று விளங்கினான். ஆட்சி, நிருவாகம் போன்றவற்றில் நேர்மை, திறமை கொண்டவனாகவும், சீதையின் செயலில் தூய்மை கொண்டும் விளங்கியவன். திராவிடனான இராவணனுக்கு எதிராகப் பல்வேறு ஆரியக் கருத்துகள் இராமாயணத்தில் நுழைக்கப்பெற்றுள்ளன. இராவணன் எதிரிகளோடு கொண்ட போர் மற்றும் வீரச்சிறப்புகள் இராவண வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தன. தமிழர் முறைப்படி நிகழ்ந்த அவனது காதல், திருமணம் போன்றவற்றின் வாயிலாகவும், நன்றியறிதல் உள்ளம் கொண்ட வீடணன், இராவணன் மீது மிக்க

அன்பு கொண்டிருந்த கும்பகருணன் வழியும் இராவணனின் பண்பு நலன் விளக்கப்பட்டுள்ளது. இராவணனின் கட்டளையிடுகின்ற பாங்கும், கட்டுப்படுகின்ற நிலையும், கண்ணீர் விட்டமையும் இயல்பும் மனிதநிலை உணர்ச்சியின் வெளிப்பாடு களாகும். சீதையினைச் சிறைவைத்த செயலில் இராவணன் மீது பல்வேறு புனைவுகள் உள்ளன. பிள்ளை உணர்வுமயமின்றிப் பகுத்தறிவுச் சிந்தனைகளுடன் இராவணனை அணுகியுள்ளார். இவ்விதமான பகுத்தறிவுச் சிந்தனைகள், கொள்கை (Rationalism) ஆய்வுகள் தமிழ்ச் சமுதாயத்தையும் பண்பாட்டையும் மையமாக வைத்து நிகழ்த்தப்பட்டுள்ளன.

துணை நூல்கள்

கம்பர் (1976) **கம்பராமாயணம்**, கம்பன் கழகம், சென்னை.

ஞானசம்பந்தன், அ.ச., (1993) **கம்பன் புதிய பார்வை**, கங்கை புத்தக நிலையம், சென்னை - 17.

ஞானமூர்த்தி, தா.ஏ., (1972) **லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலர்**, மீனாட்சிப் புத்தக நிலையம், மதுரை.

பூர்ணலிங்கம் பிள்ளை, எம்.எஸ்., (மூ.ப. 2001) **இராவணப் பெரியார்**, திராவிடக் கழக வெளியீடு, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை - 7.

மாணிக்கவாசகம், தி. (1974) **இராவணேஸ்வரன்**, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

இராகவையங்கார், மு. (1984) **ஆராய்ச்சித் தொகுதி**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

* * * * *

திருக்குறள் மொழிபெயர்ப்பு

க. ஜெயந்தி

ஆங்கிலப் பேராசிரியரான எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தம் இருமொழிப்புலமையால் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அம்மொழிபெயர்ப்பின்வழி அவர்தம் மொழிபெயர்ப்புச் சிறப்புகளை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நூலும் அமைப்பும்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் திருக்குறள் மொழிபெயர்ப்பு முதன்முதலில் 1942ஆம் ஆண்டு, அவரது நண்பர் ஜி.டி. நாயுடுவின் உதவியால் நூல் வடிவம் பெற்று வெளிவந்தது. இந்த நூலில் ஆங்கில மொழியாக்கம் மட்டுமே இடம் பெற்றிருந்தது. அடுத்து, 1999இல் 'திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு' என்ற பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டது. இதனை வலப்பக்கம் திருக்குறள், இடப்பக்கம் அதற்கு இணையான மொழிபெயர்ப்பு மற்றும் ஆசிரியரின் அடிக்குறிப்புகள் என்ற அமைப்பில் இ. சுந்தரமூர்த்தி பதிப்பித்துள்ளார்.

நூலின் முன்னுரையில் மொழிபெயர்ப்பாளர், வள்ளுவர், திருக்குறள், திருக்குறள் உரைகள் குறித்த அறிமுகச் செய்திகளைக் கூறியுள்ளார்.

"பரிமேலழகர் உரையின் அடிப்படையில் மரபுகளையும் வழக்குகளையும் கையாண்டிருந்தபோதும், ஒவ்வொரு அதிகாரத்திலும் மணக்குடவரின் குறள் வரிசை முறையை, படிப்பவரின் கவனத்திற்கெனக் குறிப்பிட்டுள்ளேன்"[1] என்று திருக்குறள் மொழிபெயர்ப்பிற்குத் தாம் பின்பற்றியுள்ள

---

1. Though I have followed custom and tradition in the translation of the Text according to Pari-mel-Alakhar, I have given under the title of each chapter Manakudavar's arrangement of the couplets as M.A. followed by figures, which the reader will please note - திருக்குறள், ப. 11.

உரையாசிரியர்கள், உரைகள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார். அவ்வகையில் ஒவ்வொரு அதிகாரத் தலைப்பின் கீழும் மணக்குடவரின் குறள் வரிசை முறை இடம் பெற்றுள்ளது.

இவை தவிர நூலின் பின்னிணைப்பில் 'The Kural and Sex - Similes' மற்றும் 'AN APPRECIATION' ஆகிய தலைப்புகளில் இரண்டு கட்டுரைகள் இணைத்துள்ளார். இதைத் தொடர்ந்து திருக்குறள் அகரநிரலையும் அதிகார அகரநிரலையும் அமைத்துள்ளார்.

'The Kural and Sex - Similes' என்ற பின்னிணைப்புக் கட்டுரையில் பெண்ணின் பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய குறள்களைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

'AN APPRECIATION' என்ற கட்டுரையில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, தன் உற்ற நண்பராகிய ஜி.டி. நாயுடுவின் வாழ்க்கைக் குறிப்பை அளித்துள்ளார்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் திருக்குறள் மொழிபெயர்ப்பு கவிதை நடையில் அல்லாது உரைநடையில் அமைந்துள்ளது. இந்தத் திருக்குறள் மொழிபெயர்ப்பை இரண்டு நிலைகளில் அணுகிக்காணமுடிகிறது. அவையாவன:

1. திருக்குறள் (நேரடி) மொழிபெயர்ப்பு வழி
2. அடிக்குறிப்புகள் வழி

இந்த அணுகுமுறை, திருக்குறள் மொழிபெயர்ப்பில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை பயன்படுத்தியுள்ள உத்திகளை அறிய வழிவகுக்கின்றது.

1. திருக்குறள் மொழிபெயர்ப்பு

திருக்குறளை நேரடியாக மொழிபெயர்த்த நிலையில் 1. எளிய நடையில் கூறுதல் 2. தெளிவாக விளங்க வைத்தல் 3. பலவகை விளக்கங்கள் தருதல் ஆகிய முறைகளை அவர் பின்பற்றியுள்ளார்.

ளிய நடையில் கூறுதல்

நேரடியாகப் பொருளை அறிந்து கொள்ளும் வகையில் எளிய சொற்களால் நடையமைத்துப் படிப்பவரை வழிநடத்திச் செல்கிறார்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன் (294)

என்ற குறளுக்கு,

'If a man speaks truth from the bottom of his heart, he will be in the midst of all who live in the world' (ப. 76)

என்று கூறியுள்ள விளக்கம் இதற்குச் சான்றாகும்.

தெளிவாக விளங்க வைத்தல்

கருத்துகளைத் தெளிவாக, படிப்பவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு அடைப்புக்குறிக்குள் பொருள் தொடர்ச்சிக்கான சொற்களை அளித்துள்ளார். இந்த உத்தி, வள்ளுவரைத் தடையின்றிப் பின்பற்றுவதற்குப் பேருதவி செய்கிறது.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்' (2)

என்ற குறளுக்கு,

What avails learning (or any other act) unless men adove the holy feet of Him of perfect Wisdom (which afford salvation) (ப. 18)

சில இடங்களில் ஒரு கருத்தைத் தெளிவுபடுத்த இரண்டு வகையான விளக்கங்களை அளித்துள்ளார்.

'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்' (3)

என்ற குறளுக்கு,

They who approach the sacred feet of Him who has his abode in the heart of man or who is above all Passions will live long on earth or enjoy longevity' (ப. 18)

என்று மொழிபெயர்த்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

பலவகை விளக்கங்கள் தருதல்

ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அதிகாரத் தலைப்பின்

மொழிபெயர்ப்பில் இம்முறையை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார். சான்றுகள் பின்வருமாறு:

சான்றோன் - learned, perfect man
செய்ந்நன்றியறிதல் - Gratitude; Recognition of Good one
புலவி நுணுக்கம் - Bounderic, Pouting, Delicate or Refined.

சில தமிழ்ச் சொற்களை மொழிபெயர்ப்பின்போது விரிவாக விளக்கியுள்ளார். சான்றுகள் பின்வருமாறு:

பனைத்துணையாக் கொள்வர் - much higher than the tall and towering palmyra.
(ப. 38)

அரங்கின்றி வட்டாடுதல் - playing dice without the compartments marked out
(ப. 100)

மேற்படி மொழிபெயர்ப்பு உத்திகள் கற்பவருக்கு வள்ளுவர் கருத்தைத் தெளிவாகப் பதிய வைக்க வேண்டும் என்ற நோக்கில் மொழிபெயர்ப்பாளரால் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

சில இலக்கிய நயமிக்க தமிழ்ச் சொற்களுக்கும் இலக்கிய நயமாக அன்றி நேரடியான ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தி யுள்ளார்.

சான்றோர்க்கணி - shining badge of Sages
பொருட்செல்வம் - wealth of gold
வன்கணார் - Cruel - eyed
உண்கண் - Black painted eye

ஆகியவை இதற்குச் சான்றுகளாகும். எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை இலக்கிய நயத்திற்கன்றி வள்ளுவரின் கருத்திற்கே முதன்மை அளித்துள்ளார் என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

நேரடி மொழிபெயர்ப்பில், படிப்பவருக்கு ஏற்படக்கூடிய சொல் குறித்த ஐயங்கள், பொருள் குறித்த ஐயங்கள், தமிழர் பண்பாடு பற்றிய செய்திகளின் அறியாமை ஆகியவற்றைப் போக்குவதன் பொருட்டு எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தம்

திருக்குறள் மொழிபெயர்ப்பிற்கு இன்றியமையாத இடங்களி லெல்லாம் அடிக்குறிப்புகள் அளித்துள்ளார்.

2. அடிக்குறிப்புகள்

மொழிபெயர்ப்பில் அடிக்குறிப்புகளைப் பயன்படுத்துவது குறித்து, 'பொருள் தெளிவுக்கு மிகத் தேவை என்றாலொழிய அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது. அடிக்குறிப்புகள் ஆராய்ச்சிக் குறிப்புகளாக நீண்டு விடக்கூடாது' (சேதுமணி மணியன்)[2] என்று கூறப்பட்டுள்ள கருத்திற்கிணங்க எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையும் அடிக்குறிப்புகளை அளித்துள்ளார்.

திருக்குறளின் அதிகாரத் தலைப்புகளில் தோன்றும் ஐயங்கள் தொடங்கி, ஐயமேற்படக்கூடிய இடங்களைத் தாமே, படிப்பவர் இடத்திலிருந்து உணர்ந்து, விளக்கம் அளித்துள்ளார். இவர் தரும் அடிக்குறிப்புகள் படிப்பவருக்குச் சோர்வு ஏற்படுத்தா வண்ணம் சுருக்கமும் செறிவும் மிக்கவையாக இருப்பதைக் காணமுடிகிறது. இந்த அடிக்குறிப்புகள், படிப்பவரை வழிநடத்திச் செல்லும் வகையில் அமைந்திருப்பதையும் காண முடிகிறது.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை கீழ்க்காணும் காரணங்களுக்காக அடிக்குறிப்புகளை அளித்துள்ளார்.

1. அதிகாரம் குறித்த சிறு அறிமுகம்
2. சொற்களுக்கு மேலும் விளக்கம் அளித்தல்
3. புதிய செய்திகளை விரிவாக விளக்குதல்
4. சான்று காட்டுதல்
5. உரை வேறுபாடுகளைச் சுட்டுதல்
6. மிகுதியும் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் குறள்களைச் சுட்டுதல்
7. பிற இலக்கியங்களில் இடம்பெறும் குறள்களைச் சுட்டுதல்
8. அறிவியல் சார்ந்த கருத்துகள் கூறுதல்
9. தன் உணர்வைப் படிப்பவருடன் பகிர்ந்து கொள்ளுதல்
10. படிப்பவருக்குக் குறிப்பளித்தல்

---

2. மொழிபெயர்ப்புத் தமிழ், ச. சிவகாமி, ப. 19.

இந்த அடிப்படையில், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அளித்துள்ள அடிக்குறிப்புகளைப் பகுத்துக் காணும்போது, திருக்குறளோடு தொடர்புடைய பல புதிய செய்திகளையும் படிப்போருக்கு அளித்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

அதிகாரம் குறித்த சிறு அறிமுகம்

தேவைப்படும் இடங்களில் அதிகாரங்களுக்குச் சுருக்கமாக அறிமுகம் அளிக்கிறார். தலைப்பு காரணமாக, படிப்பவர் மனத்தில் எழும் ஐயத்தை நீக்கும் வகையில் இந்த அறிமுகங்கள் காணப்படுகின்றன. 'இறைமாட்சி' என்ற அதிகாரத்திற்கு,

> 'This Chapter deals with the personal, physical, mental and moral qualifications and functions of kings and with what go to constitute lions, lights (luminaries among them) *(ப. 96)*

என்று அளித்துள்ள அறிமுகம் இதற்குச் சான்றாகும்.

இன்பத்துப்பாலின் அதிகாரங்களுக்கு இந்த அறிமுகம் திணை, துறை விளக்கம் போன்று அமைந்து ஆங்கில நண்பர்களை வழிநடத்திச் செல்ல உதவுகிறது. 'பசப்புறுபருவரல்' அதிகாரத்திற்கு,

> 'These are the words of the woman from whom her lover has parted with her consent but whose colour has changed owing to their pining alone at home and who wishes that the world does not say an unkind word about her lover as if he had quit her', *(ப. 258)*

என்று அளித்துள்ள விளக்கம் இதற்குச் சான்றாகும்.

சொற்களுக்கு மேலும் விளக்கம் அளித்தல்

மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ள சொல், படிப்பவர் களுக்கு ஐயம் தோற்றுவிக்கக்கூடும் என்ற எண்ணத்தில், அடிக்குறிப்பில் அச்சொல்லுக்கு மேலும் விளக்கம் அளித்துள்ளார். 'துறைவன்' என்ற சொல்லை (Ref p. 8 original) 'Lord of shore' என்று மொழிபெயர்த்தவர், அதன் தொடர் விளக்கமாக,

> 'Turaivan - a Chief of a maritime district. The word is used to signify 'neithal' where a female bemoans the absence of her lover' *(ப. 252)*

என்று அளித்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

அதுபோலவே 'எண்குணத்தான்' என்ற சொல்லை 'Eight qualified Being' என்று மொழிபெயர்த்தவர், இந்த இடத்தில் தோன்றும் ஐயத்தைப் போக்கும் வகையில்,

> 'Eight-Qualified-Omnipresent, Omniscient, immaculate, perfect, supreme, incomparable, virtous and gracious' *(ப. 18).*

என்று எட்டு குணங்களையும் சுட்டியுள்ளார்.

புதிய செய்திகளை விரிவாக விளக்குதல்

படிப்பவருக்குப் புதிய செய்தியாக இருக்கும் என்ற நிலையில், அந்தச் செய்தி குறித்த விரிவான விளக்கத்தை அடிக்குறிப்பில் அளித்துள்ளார். 'எழுமை' என்பதை 'Seven Worlds' என்று மொழிபெயர்த்தவர், பிறநாட்டினருக்கு இவ்விடத்தில் ஐயம் தோன்றும் என்பதைக் கருத்திற் கொண்டு,

> "The seven worlds and the sevenfold birth are used to denote the extent of space and time respectively. The transmigration of souls was believed in the hoary past' *(ப. 42)*

என்று விரிந்த விளக்கம் அளித்துள்ளார்.

சான்றுகள் சுட்டுதல்

குறளுக்கு, ஆங்கில இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்கள், ஆங்கிலப் பழமொழிகள் ஆகியவற்றிலிருந்து சான்றுகள் காட்டியுள்ளார். வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth), சேக்ஸ்பியர் (Shakespeare), லாங்ஃபெல்லே (Longfellow), மில்டன் (Milton), ஜே.ஆர். லோவெல் (J.R. Lowell), லூயிஸ் மோரிஸ் (Lewis Morris), ஆர். பிரவுனிங் (R. Browning) ஆகியோரின் படைப்புகளிலிருந்து குறளிற்கு இணையான கருத்துகளை இன்றியமையாத இடங்களி லெல்லாம் சான்று காட்டியுள்ளார் (பின்னிணைப்பில் காண்க). இத்தகு சான்றுகள் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் தனிச்சிறப்பை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன.

குறளுக்குச் சான்றாகப் புராண, காப்பியப் பாத்திரங்களைச் சுட்டியுள்ளார்.

> 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு' (264)

எனும் குறளுக்கு மார்க்கண்டேயரின் கதையைச் சான்று காட்டியுள்ளமையும் (ப.70) 'வாய்மை' அதிகாரத்திற்கு, 'The Story of Harichandra illustrates strict adherence to truth under the reverest trials' (ப. 76) என அரிச்சந்திரன் கதையைச் சான்று காட்டியுள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் பரவலாக வழங்கும் பழமொழிகளை, எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை மிகுதியும் சான்றாகக் காட்டியுள்ளார்.

'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் தாமே வரும்' *(319)*

என்ற குறளுக்கு 'Every cause will have its effect' (ப. 80) என்று சான்று காட்டியுள்ளமையும்,

'ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை' *(478)*

என்ற குறளுக்கு 'Cut your coat according to your cloth' (ப. 114) என்று சான்று காட்டியுள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இதன் பயனாக, இம்மொழிபெயர்ப்பைப் படிப்பவர்கள் கீழ்கண்ட நன்மைகளைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. அவையாவன: 1. ஆங்கில இலக்கியங்களைக் குறளோடு இணைத்துப் பார்க்கும் பரந்துபட்ட பார்வை 2. பல தமிழ் இலக்கியங்களின் அறிமுகம் 3. ஆங்கில இலக்கியங்களின் அறிமுகமுடையோருக்குக் குறளின் கருத்து எளிதில் சென்று சேர்தல்.

உரைவேறுபாடுகளைச் சுட்டுதல்

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை தம் மொழிபெயர்ப்பில் தாம் பயன்படுத்தியுள்ள மணக்குடவர், பரிமேலழகர் உரைகள் வேறுபட்டு நிற்கும் இடங்களைச் சுட்டியுள்ளார். 'குடி காத்தல்' என்ற வள்ளுவரின் சொற்பயன்பாட்டிற்குப் பொருள் கூறும் இடத்தில் இவ்விரு உரையாசிரியர்களும் வேறுபட்டு நிற்பதை,

'Manakkudavar takes kudi-katthal, as people - protection and sence - control, as two, and thereby makes out the five requisites,

without any reference to the preceding couplet, and he differs in this point from the ingenious Parimelalakar' *(ப. 146)*

என்று குறிப்பிட்டுள்ளமை இதற்குச் சான்றாகும்.

மிகுதியும் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் குறள்களைச் சுட்டுதல்

மிகுதியும் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் குறள்கள் என அறுபத்து மூன்று குறள்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.[3]

இக்குறள்களைச் சுட்டும்போது 'often quoted' என்று குறிப்பிட்டுள்ளார். யாரால் பயன்படுத்தப்பட்டது என்பது கருதுவதற்கு இடனாகின்றது.

பிற இலக்கியங்களில் இடம்பெறும் குறள்களைச் சுட்டுதல்

குறளின் தாக்கம் காணப்படும் பிற தமிழ் இலக்கியப் பகுதிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

> 'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
> முண்பதூஉ மின்றிக் கெடும்' (166)

என்ற குறளுக்கு 'Embodied by Kamban in his Ramayana' *(ப. 50)* என்று குறிப்பு கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும். எனினும் கம்பராமாயணத்தின் எந்தப் பகுதி என்ற குறிப்பு அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவியல் சார்ந்த கருத்துகள் கூறுதல்

குறள் கூறும் கருத்துகளோடு தொடர்புடைய அறிவியல் சார்ந்த கருத்துகளை அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார்.

> 'நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
> தானல்கா தாகி விடின்' (17)

என்ற குறளின் 'நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்' என்ற கருத்தின் தொடர்ச்சியாக, 'The Sea-plants and animals will die, and pearls and corals will not be produced. Pearls are said to be formed during the May showers, and corals in October, when the rainy season begins' *(ப. 20)*

---

3. *355, 374, 377, 423, 466, 469, 656, 664, 666, 667, 691, 706, 714, 720, 776, 783, 784, 785, 788, 837, 840, 850, 872, 879, 887, 890, 892, 913, 923, 926, 954, 957, 959, 972, 973, 974, 989, 997, 1000, 1001, 1003, 1005, 1008, 1017, 1023, 1025, 1028, 1033, 1034, 1062, 1066, 1071-1080, 1101, 1330.*

'இகழ்ச்சியின் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து' (539)

என்ற குறளின் அடிக்குறிப்பாக, 'Memory is the warder of the brain, and if retentive memory plays false in times of jocund jollity, the cases of those who have lost their name and fame through their self-oblivion must be recollected' *(ப. 126)* என்று கருத்து விளக்கம் அளித்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இத்தகு அறிவியல் சார்ந்த கருத்து விளக்கங்கள் எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளையின் அறிவியல் அறிவைப் பிரதிபலிப்பவை யாகவும் குறளின் கருத்திற்கு மேலும் விளக்கம் அளிப்பவையாகவும் படிப்பவருக்குப் பல்துறை அறிவு ஏற்படவும் வழி வகுக்கின்றன.

தன் உணர்வைப் படிப்பவருடன் பகிர்ந்து கொள்ளுதல்

வள்ளுவரின் பரந்துபட்ட பல்துறை அறிவு, சொற் பயன்பாடுகள், இலக்கிய உத்திகள் ஆகியவற்றால் கவரப்பட்ட எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, தமது வியப்பை அடிக்குறிப்பின்வழிப் படிப்பவருடன் பகிர்ந்து கொள்கிறார்.

'உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்' (743)

என்ற குறளில் வெளிப்படும் அரணமைத்தல் குறித்த வள்ளுவரின் தெளிந்த அறிவை, 'Shows the author's knowledge of the science of fortification' *(ப. 168)* என்று வியந்து போற்றுகிறார்.

'பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை' (322)

என்ற குறளில் 'நூலோர் தொகுத்தவற்றுள்' என்ற வள்ளுவர்தம் சொல்லாட்சி வாயிலாக வெளிப்படுகின்ற வள்ளுவர்தம் பல்துறை அறிவை, "The author's study of ancient writings is reflected here" *(ப. 82)* எனப் படிப்பவருக்குச் சுட்டிக்காட்டி வியக்கிறார்.

'மருந்து' அதிகாரத்தின் வாயிலாக வெளிப்படும் வள்ளுவர்தம் மருத்துவம் குறித்த கருத்துகளை, 'The poet's knowledge of medical science is exhibited here. This chapter has the whole of the medical science in nutshell' *(ப. 208)* என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

வள்ளுவரின் சொற்பயன்பாட்டினால் கவரப்பட்ட எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை, அத்தகு சொற்களை அடிக்குறிப்பில் சுட்டிச் செல்கிறார்.

'பொருளென்னும் பொய்யா விளக்கம்' *(753)* என்ற குறளுக்கு அடிக்குறிப்பில் 'Wealth as true lamp' *(ப. 170)* என்றும்,

> **'அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்**
> **செல்வச் செவிலியா லுண்டு'** *(757)*

என்ற குறளுக்கு அடிக்குறிப்பில், 'Wealth as good foster Mother' என்றும் சுட்டியிருப்பது இதற்குச் சான்றாகும்.

> **'அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்**
> **பெற்றா டமியண்மூத் தற்று'** *(1007)*

என்ற குறளில் வள்ளுவர் பயன்படுத்தியுள்ள 'மிக்க எழில் உடைய பெண் தனியாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது' என்ற கருத்துடைய உவமையை 'A beautiful simile' *(ப. 220)* என்று வியந்து பாராட்டுகின்றமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் இத்தகு அடிக்குறிப்புகள் வள்ளுவரின் மதிப்பை, மொழிபெயர்ப்பைப் படிப்பாரிடையே உயர்த்திக்காட்டுபவையாக இருக்கின்றன என்பது நோக்கத்தக்கது.

படிப்பவருக்குக் குறிப்பளித்தல்

படிப்பவரை அழைத்துக்கூறும் தன்மையில் ஒப்பிடுவதற்குரிய பகுதிகள், குறளின் சிறப்புகள், குறள்வழி வெளிப்படும் வள்ளுவரின் உணர்வு, படிப்போரின் சிந்தனையைத் தூண்டக்கூடிய கேள்விகள், மனனம் செய்ய வேண்டிய குறள் ஆகியவற்றை அடிக்குறிப்பில் அளித்துள்ளார்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை இரண்டு வகை ஒப்பீடுகளைக் காட்டுகிறார். அவையாவன: (i) குறளை ஒப்பீடாகக் காட்டுதல் (ii) பிறதமிழ் இலக்கியப் பகுதிகளை ஒப்பீடாகக் காட்டுதல்.

ஒரு குறளோடு ஒப்பிடத்தகுந்த மற்ற குறள்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். நினைவூட்டல், கருத்துத் தெளிவு

ஏற்படுத்தல், பரந்துபட்ட பார்வை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை இதன்வழி எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தை மேலும் தெளிவாக அறிந்து கொள்ளுவதற்கு முதல் அதிகாரமாகிய, 'கடவுள் வாழ்த்துடன்' ஒப்பிட்டுப் படிக்குமாறு கூறியுள்ளமையும்,

'நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது' *(1309)*

என்ற குறளுக்கு அடிக்குறிப்பாக 'Compare Chap. 89 Couplet 1 (881)' *(ப. 282)* என,

'நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின்' *(881)*

என்ற குறளோடு ஒப்பிட்டுப் படிக்குமாறு கூறியுள்ளமையும் இதற்குச் சான்றுகளாகும்.

குறளோடு மட்டுமன்றிப் பிற தமிழ் இலக்கியங்களில் இருந்தும் ஒப்பிடுதற்குரிய பகுதிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு*(642)*

என்ற குறளுக்கு 'Compare Auvai: Sol Sorvu padale' *(ப. 148)* என்று ஒப்பீடு காட்டியிருப்பதும்,

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்' *(719)*

என்ற குறளுக்கு 'Compare Naladiar Surai Vitthu Polum tham pal' என்று ஒப்பீடு காட்டியிருப்பதும் இதற்குச் சான்றுகளாகும்.

இத்தகு ஒப்புமைகளைச் சுட்டுவதன் வாயிலாக, படிப்பவருக்கு குறள் குறித்த கருத்துத் தெளிவு ஏற்படுவதற்கும், புதிய தமிழ் இலக்கியங்கள் குறித்த அறிமுகம் கிடைப்பதற்கும் வழிவகை செய்கின்றார்.

வள்ளுவர்தம் அணிகள் பயன்பாட்டை எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை படிப்பவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார். 'Note' என்ற ஆங்கில வார்த்தையால் கவனிக்கத்தக்க அணிகளை அவர் சுட்டியுள்ளார்.

'அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி' (245)

என்ற குறளுக்கு 'Note the similitude of nature' *(ப. 66)* என்றளித்திருக்கும் உருவகம் குறித்த குறிப்பும்,

'நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற' (495)

'கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து' (496)

'காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு' (500)

ஆகிய குறள்களுக்கு 'Note the apt similes of the crocodile, the car and the ship, and the fox and the elephant' *(ப. 118)* என்று உவமை குறித்து அளித்திருக்கும் குறிப்பும் இங்குக் குறிப்பிடத்தக்கவை.

'பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்' (475)

மற்றும்,

'நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்' (476)

ஆகிய குறள்களில் பயின்று வரும் 'பிறிதுமொழிதல் அணியை', '*475 & 476* are examples of pirthumolithal (saying different) a figure of speech' என்று படிப்பவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். 'பிறிதுமொழிதல்' என்பதற்கான விளக்கத்தினையும், படிப்பவர் ஐயத்தைப் போக்கும் வகையில் குறிப்பிட்டுள்ளமை இவண் கவனிக்கத்தக்கது. இக்குறிப்புகள், குறளின் எழில்நலத்தை மட்டுமன்றித் தமிழ் இலக்கணச் செழுமையையும் படிப்போருக்கு எடுத்துரைப்பவையாக இருப்பதைக் காண முடிகிறது.

குறள்வழி வெளிப்படும் வள்ளுவரின் உணர்வை படிப்பவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

'நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு' (336)

என்ற குறளுக்கு 'Note the humour and the irony' *(ப. 84)* என்று சுட்டிக்காட்டியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

குறளில் இடம்பெற்றுள்ள சிறப்பான செய்திகளைப் படிப்பவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

> **'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி**
> **மாலை மலருமிந் நோய்'** *(1227)*

என்ற குறளுக்கு 'Note the different stages of flowering' *(ப. 266)* என்று சுட்டிக்காட்டியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

படிப்பவர்கள் முன் சில கேள்விகளையும் முன்வைத்து, சிந்திப்பதற்கு இடம் ஏற்படுத்தியுள்ளார் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை. 'வெகுளாமை' அதிகாரத்தின் அடிக்குறிப்பில் வள்ளுவரின் வெகுளி, சினம் என்ற இரண்டு சொற்களின் பயன்பாடு குறித்து, 'Distinguish between anger, rage and wrath. Any difference between Vehuli (in 303, 8, 9) and sinam occuring in 301, 2, 4,, 5, 6, 7 and 310?' *(ப. 78)* என்று கேள்வி எழுப்பிப் படிப்போரின் சிந்தனைக்கு வழிவகுத்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

இவை தவிர படிப்போர் மனனம் செய்ய வேண்டும் என்ற நோக்கில்,

> **'கற்க கசடற கற்பவை கற்றபி**
> **னிற்க அதற்குத் தக'** *(391)*

என்ற குறளுக்கு அடிக்குறிப்பில் 'Be thorough' *(ப. 98)* என்று குறிப்பிட்டுள்ளார்.

எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் இத்தகு அடிக்குறிப்புகள், மொழிபெயர்ப்பாளருக்கும் படிப்போருக்கு மிடையே நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தி, படிப்பவர் இடர்ப்பாடின்றிக் குறளை விளங்கிக் கொள்வதற்கு வழிவகுக்கின்றன.

தொகுப்புரை

1. எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் முன்னுரை, வள்ளுவர் குறித்த அறிமுகமாகவும் அமைந்துள்ளமை, மொழிபெயர்ப்பைப் படிப்போர்க்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்கிறது.

2. குறள்களின் மொழிபெயர்ப்பு, கவிதை நடையிலன்றி, உரைநடை அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இதனால், கவிதை மொழிபெயர்ப்பின் நடை காரணமாக எழும் சிக்கல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

3. எளிய உரைநடை அமைப்பு, படிப்போர் கருத்துகளைப் புரிந்து படிக்க வழிவகுத்துள்ளது.

4. கருத்துத் தொடர்ச்சிக்கென அடைப்புக்குறிக்குள் இணைப்புச் சொற்களை அமைத்துள்ளமை, சீரான வாசிப்பிற்கு வழிவகுத்துள்ளது.

5. சொற்களுக்குப் பலவித விளக்கங்கள், விரிந்த விளக்கங்கள் அளித்துள்ளமை, சொற்களின் பொருளை உணர்ந்து, குறளைப் படிக்க வழி வகுத்துள்ளது.

6. மொழிபெயர்ப்பில் ஐயம் ஏற்படும் வகையில் உள்ள பகுதிகளைத் தெளிவுபடுத்துவதற்கு அடிக்குறிப்புப் பகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

7. அதிகாரம் குறித்த சிறு அறிமுகப் பகுதி, தலைப்பு காரணமாக, படிப்பவர் மனத்தில் எழும் ஐயத்தை நீக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

8. மொழிபெயர்ப்புச் சொல் குறித்த விரிந்த விளக்கம் அளிக்கும் முயற்சி தமிழ்-தமிழர் பற்றி அறியாத வாசகருக்குப் பேருதவி புரியும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

9. சான்றுகள், குறளின் கருத்தை முழுமையாக உணர வழிவகுப்பவையாக உள்ளன. ஆங்கில இலக்கியங்களி லிருந்தும் சான்று காட்டியுள்ளமை படிப்போருக்கு மேலும் உதவி செய்வதாக அமைந்துள்ளது. இவ்விடங்களில் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் தனித்திறமைகளும் வெளிப்பட்டு நிற்பதைக் காண முடிகிறது.

10. உரைவேறுபாடுகளைச் சுட்டியுள்ளமை, பலதரப்பட்ட குறள் உரைகளைப் படிப்போர்க்கு அறிமுகப் படுத்துவதாக இருக்கிறது.

11. மிகுதியும் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் குறள்கள் என அறுபத்து மூன்று குறள்களைச் சுட்டியதன் வாயிலாக, அக்குறள்கள் மனனம் செய்யத்தக்கவை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

12. குறளின் தாக்கம், அதற்குப் பின் வந்த தமிழ் இலக்கியங்களில் காணப்பட்டது என்ற செய்தியையும் அடிக்குறிப்பில் சுட்டியுள்ளார்.

13. குறளோடு தொடர்புடைய அறிவியல் சார்ந்த கருத்துகளைச் சுட்டியுள்ளதன் வழி எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் பல்துறை அறிவு வெளிப்படுகிறது.

14 தன் உணர்வு வெளிப்பாடு வாயிலாக வள்ளுவரின் பரந்து பட்ட பல்துறை அறிவு, சொற்பயன்பாடுகள், இலக்கிய உத்திகள் ஆகிய சிறப்புகளைப் படிப்போர்க்கு வெளிப்படுத்தியுள்ளார்.

15. படிப்பவருடன் உரையாடுதல் போன்ற அமைப்பையுடைய குறிப்புகள் மொழிபெயர்ப்பாளர் - படிப்பவர் இடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. குறளோடு பிற இலக்கியப்பகுதிகளை ஒப்பிட்டுப் பார்த்தல், குறளின் சிறப்புக் கூறுகளை அறிதல், குறள்வழி வள்ளுவரை உணர்தல், கேள்வி எழுப்பிக்கொண்டு விடைபெற முயலுதல் ஆகிய பல கோணங்களில் குறளை நுணுகிக் கற்பதற்கு இத்தகு அடிக்குறிப்புகள் வழிவகுப்பனவாக இருக்கின்றன.

மேற்படி முடிவுகள், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் திருக்குறள் மொழிபெயர்ப்பு ஓர் முழுமையான மொழிபெயர்ப்பு என்பதை வெளிப்படுத்துபவையாக இருக்கின்றன.

முதன்மை நூல்

திருக்குறள், எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்புடன், இ. சுந்தரமூர்த்தி (பதி.) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1999.

துணை நூல்கள்

1. திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால், திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு, திருப்பனந்தாள், நா.ப. 1969.

2. திருக்குறள் உரைக்கொத்து காமத்துப்பால், தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதி.), திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு, திருப்பனந்தாள், இ.ப. 1961.

3. திருக்குறள் உரைக்கொத்து பொருட்பால், அர. சிவப்பிரகாசம் (பதி.), திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு, திருப்பனந்தாள், மூ.ப. 1990.

4. மொழிபெயர்ப்புத் தமிழ், ச. சிவகாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, (2004).

5. Critical Studies in Kural, M.S. Purnalingampillai, International Institute of Tamil Studies, Chennai-113, (1999).

6. On Translating Tirukkural, V. Ramasamy, International Institute of Tamil Studies, Chennai-113, (2001).

7. On Translation, M. Valarmathi (Ed.), International Institute of Tamil Studies, Chennai-113, (1999).

பின்னிணைப்பு

1. 'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
   விழிப்பது போலும் பிறப்பு' (340)

   எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை அளித்துள்ள சான்றுகள்:

   'Our birth is but a sleep and a forgetting' (Wordsworth)

   "We are rounded with a sleep" (Shakespeare)

   "There is no death. What seems so is transition" (Longfellow) (p.84)

2. 'ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
   பொன்றாது நிற்பதொான் றில்' (233)
   மற்றும்,

'நத்தம்போற் கேடுமுள தாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது' (235)
ஆகிய குறள்களுக்கு அளித்துள்ள சான்று:

"Fame, conceived by scholars, brings forth poverty, and brings on death.

Fame is the spur that the clear spirit doth raise. (That last infirmity of noble mind)

To scorn delights and live laborious days" (Milton) (p. 64)

3. 'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு' (595)
என்ற குறளுக்கு அளித்துள்ள சான்றுகள்:

'Failures are pillars of success'

"Still through our paltry stir and strife Glows down the high ideal" (J.R. Lowell)

"How far high failure overleaps the bound of her successes (Leur's Morris)

"Better to have failed in the high aim, as I, than Vulgarly in the low aim succeed" (R. Browning) (p. 138).

* * * * *

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

அண்மை வெளியீடுகள்

	ரூ. பை.
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	.. 40.00
பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்	.. 40.00
தொல்காப்பியப் பொருளதிகாரம் (அகம் - புறம்) - ஆங்கில மொழிபெயர்ப்பு	.. 50.00
தமிழ் ஆய்வு இதழ்கள்	.. 50.00
வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்	.. 130.00
மக்கள் நேயச் சுயமரியாதை	.. 30.00
ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்	.. 30.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3	.. 150.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2	.. 115.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1	.. 130.00
தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் II	.. 100.00
தமிழரின் மரபுச்செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் I	.. 90.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்	.. 40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	.. 180.00
தமிழர் கண்ட தாவரவியல்	.. 40.00
இதழாளர் பெரியார்	.. 160.00
திராவிட இயக்க இதழ்கள் தொகுதி 1	.. 60.00
சைவசித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை	.. 65.00
பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம்	.. 55.00
காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்	.. 65.00
திருவாவடுதுறைப் புராணம்	.. 250.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	.. 30.00
சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார்	.. 25.00
தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்	.. 20.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	.. 30.00
தமிழிலக்கியத்தில் மனித நேயம்	.. 115.00
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம்	.. 30.00
தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும்	.. 25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	.. 25.00

559 பேராசிரியர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை .. 30.00